
# மாருதப்புரவீகம் பண்பாட்டு மலர்

இதழ் - 2



பிரதேச செயலகம்
வலி வடக்கு,
தெல்லிப்பளை.

# மாருதப்புரவீகம்

## பண்பாட்டு மலர் - II

கலாசாரப் பேரவை,
வலி வடக்கு,
தெல்லிப்பளை.

நூல் தலைப்பு :- மாருதப்புரவீகம்
பண்பாட்டு மலர் -2

வெளியீடு :- கலாசாரப் பேரவை,
வலி வடக்கு,
தெல்லிப்பளை

இதழாசிரியாகள்:- செ.தக்ஷாயினி
கலாசார உத்தியோகத்தர்

மா. மாலாதேவி
கிராம உத்தியோகத்தர்

பக்கங்கள்:- 108

பிரதிகள் :- 300

அச்சுப்பதிப்பு :- எஸ்.எஸ்.ஆர் பதிப்பகம்.
17, சட்டநாதர் வீதி,
யாழ்ப்பணம்.

வெளியீடு :- 2015



தமிழ்த் தாய்

# தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தா னே.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மனம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மஹாகவி
சுப்பிரமணிய பாரதியார்

## தமிழ்த்தாய் வணக்கம்

(பராளிசைக் கொச்சகக்கவிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோ
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா எந்துளுவும்

ஊன்றுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

மனோன்மணியம்

பேராசிரியர். பொ. சுந்தரம்பிள்ளை

வலி வடக்கு கலாசாரப் பேரவை

தெல்லிப்பளை

# பிரதேச கீதம்

தெல்லிப்பளை

**பல்லவி**

வானுயர்ந்த புகழ் மலிந்த வளம் நிறைந்த முற்றம்.
மரபுகாத்துத் தலைமுறையாய் தமிழ் வளர்த்த கொற்றம்,
ஞானியரும் யோகிகளும் உறைந்துயர்ந்த சுற்றம்.
"நாளும் வென்று வாழ்க" எங்கள் "வலிவடக்கு சொர்க்கம்"

**சரணங்கள்**

கீரிமலை ஈசன், தெல்லிநகர துர்க்கை, மாவைக் கந்தன்,
யேசு, வேளாங்கன்னி, கோயில் சொல்லும் தொன்மை,
வானவூர்தி, கப்பல், புகையிரதத் துறைகள்... தம்மை
வைத்திருக்கும் எங்கள் வாழ்வின் பெறுமதிக்கே தெல்லை?

கற்றவர்கள், கலைஞர், விளையாட்டு வீரர் வாழும்
களனியெல்லாம் பொன்கொழிக்கச் செம்பாட்டு மண் சூழும்
வெற்றிலை, நெல், பனை, வெங்காயம், முந்திரிகை, மீனும்
விளையும் கலைகளோடு... இல்லை பண்பாட்டுக்கும் ஈனம்.

தெல்லிப்பளை, கீரிமலை, பன்னாலை, விழிசிட்டி,
தையிட்டி, இளவாலை, மாவை, வசாவிளான், அளவெட்டி,
கொல்லங்கலட்டி, கவுணாவத்தை, கட்டுவன், மயிலிட்டி,
குரும்பசிட்டி, பலாலி சேர்ந்த "நானிலம்" நம் சக்தி!

மாருதப் புரவீகவல்லி, நகுலமுனிதாம்... தம்....
மனித முகம் மீளவைத்த கீரிமலைத் தீர்த்தம்.
ஆடி அமாவாசையன்று அதில் கடன் நாம் தீர்ப்போம்.
"வழுக்கியாற்றின் தாயகம்" நம் மண்ணை வாழ்த்தி ஆர்ப்போம்.

தோலகட்டி நெல்லிரசம், காங்கேசன் சீமெந்து,
காச, புற்று, உளமருந்து, கலங்கரை இங்குண்டு!
ஆசிரியகலாசாலை, கல்லிச் சோலை, நீதிமன்று,
பிரதேச செயலகம், சபையும் நிமிரும் தமிழை காத்து வென்று.

# மாருதப்புரவீகம் மலர் வெளியீடு - 2015

## மலர்க்குழு

திரு. கனகராஜா சிறிமோகனன்
பிரதேச செயலாளர்

திரு. குமாரசாமி பிரபாகரமூர்த்தி
உதவிப் பிரதேச செயலாளர்

திரு. பஞ்சராஜா கஜேந்திரன்
கணக்காளர்

திரு. குணபாலசிங்கம் சாந்தமோகன்
நிர்வாக கிராம அலுவலர்

திருமதி. தக்ஷாயினி செல்வகுமார்
கலாசார உத்தியோகத்தர்

திரு. நடேசப்பிள்ளை ரவீந்திரன்
கிராம உத்தியோகத்தர்

திருமதி. சசிகலா தவச்செல்வன்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி. கோகிலா மகேந்திரன்
மூத்த எழுத்தாளர்.

திரு.சௌந்தராஜன்
ஓய்வுபெற்ற நூலகர்

திருமதி. மாலா தேவி மதிவதனன்
கிராம உத்தியோகத்தர்

## வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் கலாசாரப்பேரவையின் பண்பாட்டு விழாவிலே பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதான பண்பாட்டு மலரினை வெளியீடு செய்வதனை முன்னிட்டு அம்மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்

எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரிற்கு கையளிக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவரிற்கும் உரித்துடையதாகும். அவ்வாறே இவற்றை காண்பிய வடிவங்களாகவோ அல்லது எழுத்து வடிவான இலக்கிய வடிவங்களாகவோ நாம் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்கும் முயற்சியாக எமது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலமாக முன்னெடுக்கப்படும் இவ் முயற்சியானது வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதாவது 2014 ஆம் ஆண்டு முதல் இவ்வருடம் இரண்டாவது வெளியீடாக வெளிவரும் மாருதப்புரவீக மலரானது

தன்னகத்தே பல பண்பாட்டம்சங்களைத் தாங்கியும் பிரதேசத்தின் பாரம்பரியங்களையும் வெளிப்படுத்துவதுடன், கலைஞர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் உந்து சக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே காலத்தின் தேவையறிந்து தெல்லிப்பளை பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் மாருதப்புரவீகம் மலரானது தொடர்ந்தும் பல பண்பாட்டம்சங்களைத் தாங்கிவெளி வர எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. செ. வனஜா
பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்,
வடமாகாணம்,
யாழ்ப்பாணம்.

## மாவைக் கந்தன் ஆதீன கர்த்தா அவர்களின் ஆசிச் செய்தி

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் வரலாற்று விடயங்களை மற்றும் பல்சுவை விடயங்களை உள்ளடக்கி இரண்டாவது தடவை இவ்வருடமும் மாருதப்புரவீகம் எனும் பெயர் கொண்டு வெளியாகும் இவ் மலரிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.வரலாறுகளையும் எம் பண்பாட்டு அம்சங்களையும் தெரிந்துகொள்வதற்கு இந் நூலானது பிறமொழிகளிலும் மொழி பெயர்ப்புச் செய்து தமிழையும் சமயத்தையும் வளர்த்தெடுப்பதற்காக வேண்டிய முயற்சிகளையும் செய்ய எல்லாம் வல்ல மாவைக்கந்தன் துணை கொண்டு அருள் புரிய வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

மாவைக் கந்தா போற்றி போற்றி நின்பாதம் சரணம் !

மஹாராஜஸ்ரீ. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீனகர்த்தா மாவை ஆதீனம்,
மாவிட்டபுரம்

## ஆசியுரை

ஒருவர் மனிதனாக பிறக்கும் போதே ஒரு பண்பாட்டோடே பிறக்கின்றான். அவன் வளரும் போது அப் பண்பாடும் அவனோடு கூடவே வளர்கின்றது. இப் பண்பாடே அவனுடைய வாழ்வாகவும் வாழ்வே அவனுடைய பண்பாடாகவும் அமைகின்றது. இப் பண்பாடு அவனுக்கு அவனுடைய அடையாளத்தைக் கொடுக்கிறது அவன் எந்த நாடு, எந்த இனம் எந்த சமயம் போன்றவை அவை. இவை இல்லாமல் ஒரு மனிதன் இருக்க முடியாது. இவ் அடையாளங்கள் யாவும் ஒரு மனிதனை உருவாக்குகின்றன. மனிதனும் இவற்றை உருவாக்குகின்றான். வளர்க்கிறான்.

இந்த வகையிலே தெல்லிப்பளை பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் எமது சமுதாயத்திற்கு மிக அவசியமானவை. இருக்கின்ற எமது அடையாளங்கள் இன்று தொலைக்கப்படுகின்றன. எமது அடையாளம் எது என்று தெரியாத நிலையிலே புதச் சமுதாயம் வளர்கின்றது. நிறுவனப்படுத்தப்பட்ட, நிறுவனப்படுத்தப்படாத சக்திகளால் எமது தமிழ் அடையாளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் எமது அடையாளத்தை காப்பதிலே வளர்ப்பில் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல கலாசாரப் பேரவை முன்வர வேண்டும். கலாசார விழாக்களுக்கு அப்பாலே ஒவ்வொரு தமிழனும் தனது நாளாந்த செயற்பாடுகளில் தமிழ் அடையாளத்தை உணர்ந்து கொள்ள அதை வளர்த்துக் கொள்ளத்தக்க முறையில் தன் செயற்பாடுகளை வகுத்துக் கொள்ள வேண்டும். வீடுகளிலும் பாடசாலைகளிலும் வேலைத் தளத்திலும் சமயச் செயற்பாடுகளிலும் இச் செயற்பாடுகள் இணைத்துக் சொல்லப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் மிகவும் சவால் நிறைந்தது என்பதை மறுக்க முடியாது. அதனாலே, இவற்றை விட்டுவிடவும் முடியாது. கலாசாரப் பேரவை தனது திட்டமிடல் வட்டத்தை மேலும் விரிவாக்கி பல்வேறு தரப்பினரையும் உள்வாங்கித் தன் எதிர்கால பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று ஆசிகள் கூறி நிற்கின்றேன்.

அருட்தந்தை. ம. றெக்ஸ் சவுந்தரா
பங்குத்தந்தை
புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்,
குலமங்கால்,
மல்லாகம்.

## பிரதேச செயலாளரின் வாழ்த்துரை

தெல்லிப்பளை பிரதேச செயலகக் கலாசாரப்பேரவையினால் நடாத்தப்படும் பண்பாட்டு விழாவிலே வெளியிடப்படும் மாருதப்புரவீகம் என்னும் இந்நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேசமும் தமக்கான பாரம்பரியபண்பாட்டு விடயங்களைக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. அந்த வகையில் தெல்லிப்பளை பிரதேசமும் தமக்கேயுரிய கலை பண்பாட்டு பாரம்பரியங்களை கொண்டதாகும். எனவே இவ் விடயங்களை உள்ளடக்கியதான பல்வேறு ஆக்கங்களையும் தாங்கியதாக மாருதப்புரவீகம் பண்பாட்டு மலர் - 2 விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள், ஆலய சடங்குகள், பிரதேச பாரம்பரியங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை எடுத்துக் கூறுவதான ஆக்கங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. அழிவடைந்து வருகின்ற எமது பாரம்பரியங்களை இத்தகைய நூல் வெளியீடுகள் மூலம் ஆவணப்படுத்தி இக்கால சந்ததி மட்டுமன்றி எதிர்கால சந்ததியினரும் அறிந்து பயன்கொள்ளக்கூடிய வகையிலே இவ் வெளியீடானது அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு. க. ஸ்ரீமோகனன்
பிரதேச செயலாளர்
வலி வடக்கு,
தெல்லிப்பளை.

## யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பெறும் கலாசார விழாவிலே மாருதப்புரவீகம்- 2 என்னும் பண்பாட்டு மலர் வெளியீடு செய்வதனையிட்டு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மாருதப்புரவீகம் -2 பண்பாட்டு சார்ந்த விடயங்களை தன்னகத்தே கொண்டு வெளிவருவது வலி வடக்கு கலாசாரப் பேரவையின் இரண்டாவது வெளியீடாகும். இம்முயற்சி கடந்த வருடம்(2014) முதல் ஆரம்பமாகியிருக்கும் ஒரு புதிய முயற்சியாகக் கொள்ளப்படுகின்றது.

இப்பண்பாட்டு மலர் தமிழ் பாரம்பரியங்கள், சடங்குகள், பிரதேச ஆலயங்கள், அறநெறி, ஒழுக்கநெறி, ஆன்மீக சிந்தனைகள் என பல்வேறு சிறப்புக்களை எல்லாம் அள்ளித்தரும் அதேவேளை இப்பிரதேச பாரம்பரிய சடங்குகளையும் அறிந்து கொள்வதற்கு அருமருந்தாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இம் மாருதப்புரவீகம்-2 மலர்ந்து மணம் பரப்ப உழைத்த மலர்க் குழுவினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அத்துடன் எல்லாச் சிறப்புக்களோடும் மாருதப்புரவீகம்- 2 மலர் வெளியீடு சிறக்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக கொள்கின்றேன்.

நா.வேதநாயகன்.<br>
அரசாங்க அதிபர்,<br>
யாழ் மாவட்ட செயலகம்<br>
யாழ்ப்பாணம்.

## இதழ் ஆசிரியர்களின் இதயங்களில் இருந்து

தமிழர் தம் வரலாற்றுப் பெருமையை புலப்படுத்தும் சோழ இளவரசி மாருதப்புரவீக வல்லி கால் பதித்த வரலாற்று சிறப்பு மிக்க கலைப்பூமியில் " மாருதப்புரவீகம்" எனும் மகத்தான பெயரில் இப்பண்பாட்டு மலரானது வெளிவருவதையிட்டு அனைவரும் பெருமையடைய வேண்டிய விடயமாகும்.

அதாவது சின்னத்திரை, சினிமா, இணையம், தொலைபேசி என்று பல்வேறு திசைகளில் தடுமாறும் சமூகத்தில் எம் மண்ணின் பெருமையை உணர்த்தும் இவ்வாறான இலக்கியம் சார் படைப்புக்கள் வெளிவருவதும் அவை ஆவணப்படுத்தப்படுவதும் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

எனவே வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி செயற்திட்டம் 2015ன் மூலமாக பிரதேசம் சார் பண்பாடு, கலைகள், பாரம்பரியங்கள், ஆலயங்கள், அறநெறிகள் என பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவரும் இம் மலர் வெளியீட்டிற்காக பிரதேச செயலாளர் , உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் ஏனைய மற்றும் அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியறிதலை தெரிவித்து கொள்வதோடு இனிவரும் காலங்களிலும் இம் மலர் சிறப்புற மலர இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

செ. தக்ஷாயினி
ம. மாலாதேவி

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. மாருதப்புரவீகம் | 01 |
| 02. மாவிட்டபுரம் வீணியவரை கண்ணகி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு | 05 |
| 03. மாவிட்டபுரம் வீணியவரைப்பதி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலயத்தின் சிறப்புக்கள் | 09 |
| 04. வலி- வடக்கு- பளை- வீமன்காமத்தின் கத்தோலிக்க பாரம்பரியமும் மகப்பேற்று சுதெச வைத்திய பரம்பரையும் | 13 |
| 05. தமிழர் பண்பாடும் யாழ்ப்பாணமும் | 17 |
| 06. வலி வடக்கு எங்கள் வாழ்விடமாகும் | 22 |
| 07. ஆலயமும் ஆன்மீகமும் | 23 |
| 08. சமத்துவமாய் வாழ வழி காண வேண்டும் | 25 |
| 09. காலணித்துவப் பாதையில் பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் நாட்டவன் நகர வாழ்க்கை நாடக எழுத்துரு ஓர் பார்வை | 27 |
| 10. நாட்டார் கலைகள் ஓர் நோக்கு | 38 |
| 11. வலிகாமம் வடக்கு நூலக வரலாறு | 48 |
| 12. என் கடைசி ஊர்வலம் | 51 |
| 13. அறிவோம் ஆன்மீகம் - வினாவிடை | 55 |
| 14. நகர்ந்து கொண்டிருக்கும் ஆண்டில் எமது கலாசார நகர்வுகளின் பார்வை | 61 |
| 15. இது தேவை | 65 |
| 16. வெறுங்கழுத்து | 69 |
| 17. மாற்றத்தால் மாறும் மாற்றம் | 76 |
| 18. தைப்பொங்கல் | 79 |
| 19. மகிழ்ந்து பாடு | 80 |
| 20. எ(ங்களை) என்னை விளையாடவும் விடுங்கள் | 81 |
| 21. சம்பள நாள் | 82 |

## 1. மாருதப்புரவீகம்

இக் கட்டுரை ஆக்கத்தை எழுத்த துணிந்தபோது என் மனக்கண் முன் இருயுகங்களை நோக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஒன்று துவாரகாயுகம் மற்றது கலியுகம், இருந்த போதும் மெய்யுணர்வுடன் துவாரகாயுகத்தையே உண்மை வரலாறாக கைக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த துவாரகாயுகத்தில் நடந்தவற்றை அலசிப் பார்க்கின்ற போது மாருதப் புரவீகம் தெய்வத்தன்மை நிறைந்த புரவீகமாகத் தென்படுகிறது.

இக் காலப் பகுதியில் மாருதப்புரவீகம் மேன்மையுற விளங்கியதற்கு முக்கிய காரணம் அருளாளர்கள் பல வாழ்ந்தமையே முக்கிய காரணமாகும். துவாரக யுகத்தில் தெய்வ சக்தி இயங்கியது. அசரீரி மூலம் அருளாட்சி நடைபெற்றது. கலியுகத்தை நோக்கும் போது ஒழுக்க சீலர்கள் வாழ்ந்தாலும், மக்கள் துயர் நீக்க முடியாத நிலை. ஆன்மீகம் வெளியுலகில் சஞ்சாரம் நடத்தியது எனலாம். ஆட்டமும் பாட்டும் கூத்தும் பகல் வேசமும் நிலைத்து நின்று தாண்டவமாடுவதை உணரமுடிகிறது. குறைசொல்லக் கூடாது. கலியுகவரதன் திருவிளையாட்டு எதை எண்ணி நாம் சாந்தி அடையலாம்.போல உள்ளது.

இங்கே துவாரகாயுகத்தை நோக்கியே "மாருதப்புரவீகம்" என்னும் கட்டுரை தொடர்கிறது. என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். திருத்தம்பலேஸ்வரன் கோயிலை அடுத்து இருடிகள், முனிவர்கள், தவசிகள், வாழ்ந்த தேவலோகப் பகுதியாக உள்ளது. அவர்கள் மக்களது பிணிகளையும் நோய்களையும் போக்கியுள்ளனர். இறை ஆணைபெற்று துயர் போக்கியோர் பலரை இப் புவியில் காணமுடிகிறது. இப் பகுதியில் அதிசிறப்பு வாய்ந்து விளங்கிய தீர்த்தம் "அந்தர் வாவி" எனப் பெயர் பெறுகிறது. அகத்திய முனிவர், நகுல முனிவர், சாந்தவிங்கமுனிவர் போன்ற தவசிரேஷ்டர்கள் மலை அடிவாரங்களில் தங்கி இருந்து, அந்தர் வாவியில் தீர்த்தமாடி சிவ வழிபாட்டில் ஈடுபட்டதாக வரலாறு கூறுகின்றது.

இந்த திரேதாயுகத்தில் பரமேஸ்வரன் பார்வதி சமேதராய் இம் மலை சாரலில் எழுந்தருளிய போது பார்வதி தேவி நீராடுவதற்காக "கண்டகி" தீர்த்தத்தை பரமேஸ்வரன் இவ்விடத்திற்கு சேர்த்தார். அந்தர் வாவி, கண்டகி என்னும் இரு தீர்த்தங்களும் மாருதப் புரவீகத்திற்கு மெருகு ஊட்டி நிற்கின்றது. இந்த தீர்த்தத்திலே தேவர்களும், இருடிகளும்

பிறகும் தீர்த்தம் பாடிச் சுகம் பெற்று புண்ணியவான்களாயினர். அதனால் கிரேதா யுகத்தில் இந் நாடு புண்ணிய புரம் எனப் பெயர் பெற்றது. இக் காலத்ததில் சண்முக மூர்த்தி சூர சம்காரம் செய்து கதிரமலைக்குச் செல்கையில் இம் மலை சாரலில் வந்து இறங்கி நகுலேசர் கோயிலுக்கு அருகாமையில் தனக்கோர் ஆலயம் அமைத்து சில நாள் தங்கி இருந்தார். இவ் ஆலயத்துக்கு கதிரை ஆண்டவர் ஆலயம் என விஜயராசனால் பெயரிடப்பட்டது. இத்தனை பெருமை நிறைந்த இம் மலைச் சாரல் மாருதப் புரவீகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது.

இந்த யுகத்தில் நளச் சக்கரவர்த்தி வந்து கண்டகி தீர்த்தமாடி, நகுலேஸ்வரர் அருள்பெற்று கரிநீங்கி பேரரசு செய்து சிறப்புற்றான். முசுகுந்த சக்கரவர்த்தி வந்து துன்பம் தீர்த்ததுபோல, நகுலமுனிவரும் கீரிமுகம் நீங்கினான். இக் காலத்தில் இப் பகுதியை நகுலகிரி, நகுலாசலம், நகுலேச்சரம் என்ற பெயர் பெற்று வரலாற்று புகழ்பெற்றது. சித்திராங்கதன் என்னும் கந்தருவன் இராவண வீணையைத் தானும் வாசிக்க வேண்டும் என அவாக் கொண்டு தசரத இராமனால் இருபது கரங்களும் அறுத்து வீழ்த்தப்பட்டபோது அச் சமயத்தில் இக் கந்தருவன் கவர்ந்து கீரிமலையில் வந்து இறங்கி வீணையை மீட்டான். அதனால் இவ்விடம் காந்தருவ நகர் எனவும் வீணாகானபுரம் எனவும் வழங்கப்பட்டது. அடுத்துப் பார்த்தால் அருச்சுனன் தீர்த்தயாத்திரை செய்து கொண்டு தென் திசை நோக்கி வருக்காலை, இத்தலத்தில் வந்து இறங்கி கண்டகி தீர்த்தமாடி நகுலேஸ்வரனை மலையடிவாரத்தில் வணங்கி எம்பெருமான் அருளைப் பெற்று ஏகினான். என வரலாறு தெரிவிக்கின்றது.

இவற்றையெல்லாம் அங்கதந்தரிக்கு முனிவர் எடுத்து உரைத்தார். மிகுந்த பணிவுடனும் குருபக்தியுடனும் அன்புடனும் இவ் வரலாறுகளால் கேட்டறிந்த "மாருதப் புரவல்லி" மீண்டும் முனிவரை வணங்கி குறிப்பிட்ட மூர்த்தி தல விஷேடங்களையும் மகிமைகளையும் மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து சதா கந்தப் பெருமானது தியானத்திலும் ஈஸ்வர தியானதிலும் மூழ்கினான். முறையாக சங்கமித்து தீர்த்தமாடி சிவாலய தரிசனம் செய்து வருவாளாயினாள்.

இவள் தனது தேகம் விகாரப்பட்டு (குதிரை முகமும் குன்ம நோயும்) இருந்ததால் பிறர் அறியாதவாறு தீர்த்தமாடப் போக நினைந்து அவள் தங்கி இருந்த இடமான குமாரத்தி பள்ளத்தில் இருந்து தீர்த்தக் கரைவரை ஒர் சுரங்கப் பாதை வெட்டுவித்து அதன் வழியே சென்று

சென்று தீர்த்தமாடி வருவாளாயினாள். நாட்கள் செல்லச் செல்ல இவளது முகம் மாறப் பெற்று, நோயும் நீங்கப் பெற்றது. விகாரமடைந்த அவளது உடம்பு சுகமடைந்து அழகுடன் கூடிய யௌவன சொரூபத்தைப் பெற்றது. நகுல முனிவரதும இன்னும் சில இருடிகளினதும் ஆசிகளோடும் தெய்வத் திருவருளினாலும் சுகமடைந்த மாருதப் புரவல்லி இவ்விடத்தை மகா புண்ணிய நகரமாக்க வேண்டும் என்றும் மக்கள் அனைவரும் சுகமாக வாழ வேண்டும் என்று கருதி அதற்கேற்ற கருமங்களைச் செய்தாள். இவ் வேளையில் ஒரு நாள் நகுலேஸ்வரப் பெருமான் கனவில் தோன்றி "பெண்ணே நீ உனது எண்ணத்தை நிறைவேற்றவும் எல்லா உயிர்களும் சுகம் பெறவும் கதிரேசன் கோவிலைப் புதிதாக நிர்மாணி என திருவருள் பாலித்தார்.இளவரசி தான் தினமும் வணங்கிவந்த கதிரேசன் கோவிலைப் புதுப்பித்து புனர்நிர்மானஞ் செய்ய ஆரம்பித்தாள். குதிரை முகமாக விகாரமடைந்து இருந்த இளவரசியின் முகம் மாறப் பெற்ற காரணத்தால் இவ்விடத்திற்கு "துரகானை விமோசனபுரி" என பெயரிடப்பட்டது. அக்காலத்தில் இருந்து இன்றுவரை இக் கோவிலில் அனுஷ்டிக்கப்படும். பூஜை வழிபாடுகளை கொண்ட சுலோகத்தில் துரகானை விமோசனபுரே என்று குறிப்பிடப்பட்டுள்ளதை கீழ்வரும் சுலோகங்களில் காணலாம்.

ஸ்ரீ மத் காவேர்யாஹ தஷிணதீரே
ஸமுத்தரஸ்ய பஸ்சிமதடே பாஸ்கரரே
துரகானை விமோசனபுரே அஸ்யதேவ
தேவஸ்ய மஹாவல்லி கஜவல்லி ஸமேத
சுப்பிரமண்ய பரமேஸ்வரஸ்ய.

துரகானை விமோசனபுரே என வடமொழியில் வழங்கப்பட்ட அதே பொருள்பட மாவிட்டபுரம் எனத் தமிழில் வழங்கலாயிற்று. எனவே "மாருதப்புரவீகம்"பிணியகற்றும் இடமாகும். மாருதப் புரவல்லி தம் கோயில் நிர்வாகத்தையும்ஆதியாம் பொறுப்புக்களையும் தீட்சிகள் பெரியமனத்துளார் வசம் ஒப்படைத்தார். இவ்வாறு பூஜை நிர்வாகங்களை சிறப்புறச் செய்துவரும் காலத்தில் பெரியமனத்தளார் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வருதல் கண்ட மாருதப் புரவீகவல்லி தீட்சிதருக்கு ஏற்ற பெண்ணை தேட முற்பட்ட வளை கீரிமலை சாம்பசிவஐயர் மகள் வாலாம்பிகையை தீட்சிதருக்கு திருமணம் செய்வித்து பெண்ணின் பெயரை "தில்லை நாயகி" என மாற்றி கோவில் தெற்கு வீதியில் உள்ள அக்கிரகாரத்தில் "குடியேற்றி வசதிகள் பலவும் செய்தாள். எனவே கசாத்துறையில் வந்து இறங்கிய மூர்த்தியை மாருதப் புரவீகவல்லி கட்டிய ஆலயத்தில் புனருத்தாரணம் செய்து சிறப்பாக பூஜைகள் நடைபெற்றது என்பதே வரலாறு.

கலியுகத்தில் போர்த்துக்கேயரால் அழிவுற்ற கதிரை ஆண்டவா் ஆலயத்தின் மூல விக்கிரகத்தை மாவிட்டபுரம் ஆலயம் என இன்று வழங்கும் திருக்கோயிலில் எழுந்திருக்கச் செய்து கலியுகவரதனுக்கு ஆதீனகா்த்தா பரம்பரையில் பிறந்த பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் தலைமையில் பூஜைகள் நடைபெற்று இன்று அன்னாா் மகனிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. கலியுகவரதன் மாவைக் கந்தன் அருளாட்சி புரிகின்றான்.

## உ. மாவிட்டபுரம் வீணியவரைப்பதி ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி ஆலய சிறப்புக்கள்.

மாவை கந்தன் ஆலயத்தின் தென்பாகத்தில் யாழ்ப்பாணம் செல்லும் வீதியில் அன்னை பராசக்தி இராஜராஜேஸ்வரி என நாமம் கொண்டு கோயில் கொண்டிருக்கிறாள். இக் கோயிலைச் சுற்றி அன்னையின் அருளால் அந்தணர் குடும்பங்கள் மிக சிறப்பாக வாழ்ந்து கொண்டு இருந்தன. நாளடைவில் மிகவும் துயரந் தோய்ந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டதும் பின் அந்தணர் அம்பாளின் துணை கொண்டு துரைசாமி ஐயா 1965ல் இல்லம் அமைக்கும் வேலையை அன்னையின் அருள்வாக்கு கேட்டு ஆரம்பித்தார். இவருக்கே கார்த்திகேசு ஐயா,சின்னையர், முத்து ஐயர், பிள்ளை ஐயர் , செல்ல ஐயர், சுந்தர ஐயர், சபாபதி குருக்கள்,அப்பாதுரைஐயர், பின் சிலகடாட்ச ஐயரும் பூசை செய்தனர்.

மாவிட்டபுரம் ஆலயம் அருகில் இருப்பது சிறப்பம்சம். அதைவிட மாவை ஆதீனம் ஆதீனகர்த்தாக்கள் இவ் ஆலய விழாக்களில் பங்குபற்றுவது புனிதமானதாகும். இதில் கும்பாபிஷேக விழாக்களில் சண்முகநாதகுருக்கள், வைத்திய நாத குருக்கள் அதைவிட நயினை ஐ. கைலாச நாத குருக்கள் போன்றோர் முன்பு கும்பாபிஷேக கிரியை நடாத்தி வைத்தனர். வேத சாஸ்திரங்கள் ஒலிக்கும் இணுவில் தர்மகார்த்தா குருகுல அதிபர் மகாதேவ குருக்கள் ,மாணவர்களும் இங்கு கிரியைகளில் பங்குபற்றி முறையாக வேதாகம முறைகளை வழிநடத்தின. தர்மபுர வேதாகம பள்ளியில் கல்வி கற்ற மாவை ஆதீன வி.இரத்தின சபாபதி சர்மாவும் இங்கு கிரியைகளில் கலந்து கொண்டார்.

வைகாசி விசாக நாளில் ஆண்டு தோறும் இக் கோயிலில் பொங்கல் நடைபெறும். நாட்டிலே நோய் நொடி ஏற்பட்டாலும் குளிர்ச்சி நடைபெறும் இதனை பொது மக்கள் குளிர்த்தி என்பர். அம்மையார் திரு உள்ளம் குளிரக் கஞ்சி வார்த்தல் முதன்மையானது. தாயின் உள்ளம் குளிர்ந்தால் வெப்பம் நீங்கும் வறட்சி போகும். மழை பெய்யும், நோய் அகலும். இது அக்கால மக்களின் நம்பிக்கை, பொங்கலுக்கு முதல் நாள் இக் கோயிலை சேர்ந்த தலையாரியார் சிறுவர்களை அழைத்து கொண்டு புறப்பட்டு தெருத்தெருவாக அவரும் அக்கிராமத்தினரும் படிப்பர். ஊர் மக்கள் பொங்கலுக்கு தேவையான பச்சை அரிசி, வெல்லம், பழம், பாக்கு, தேங்காய் கொடுப்பர். விணியவரை அம்மன் ஆரம்பப் பெயராக இராஜராஜேஸ்வரி பிரதிட்டை செய்து சிவஸ்ரீ. ச. குமாரசாமிகுருக்கள் அச்சுவேலி வேதாகம பூஷணம் பாலசுந்தரக்

குருக்கள் ஆலோசனைப்படி கண்ணகை அம்மன் தனியான கோயில் வருணன், வாயு திசைகளுக்கு இடையில் நிறுவப்பட்டது. இதுபோல ராஜராஜேஸ்வரி ஆலயத்தை சன்னதி வீதியில் இடைக்காடு பகுதியில் காணலாம்.

வைகாசிப் பொங்கலில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பந்தக்கால் நட்டு விறகு தேடி வெள்ளை தட்டி சோடித்து அண்டாவைத்து எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு குலத்தவரே பொறுப்பாக இருந்தனர். இதில் கிராம ஒற்றுமை எடுத்துக் காட்டப்பட்டு கஞ்சி வார்ப்பு இடம்பெறும். இல்லை என்று கூறாமல் அனைவருக்கும் கஞ்சி வார்க்கப்படும். ஒரு பக்கத்தில் பொங்கியவர்கள் பொங்கலை மற்றவர்களுக்கு வழங்குவர்.

இங்கு இடம்பெறும் பாடலை தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி ஆசிரியர். கி. ஆறுமுகம் பாடுவார். இவர் அருகில் வசித்தவர். பாடலை சீராக்கி எழுதியது. இவர் மகன் சண்முகசுந்தரமும் இவ் ஆலயத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராவர். கஞ்சி வார்ப்பு தண்டற்பாட்டு எனும் பாட்டு இடம்பெறும்.

இங்கு யாகசாலை ஒத்திகை ஸ்ரீ சக்கர வடிவில் அமைக்கப்பட்டு அதில் கும்பங்கள் வைக்கப்பட்டு அன்னையை எழுந்தருள செய்வார்கள். ஆலயத்தின் தொண்டர்கள் சேவைகளை நோக்கும் போது காரியதரிசி ஜெகநாதன் பணிகளை மறக்கமுடியாது. திரு. க. இராசரத்தினம் கேட்ட போதெல்லாம் டிரக்டர் வண்டியை தந்து உதவி வருகிறார். திருமதி. கனகம்மா வேலுப்பிள்ளை வீதி விசாலிப்புக்கென காணி வழங்கி முன்மாதிரியாக தொழிற்பட்டதுடன் வடக்கு வீதி விசாலிக்க தில்லைநாதன் குடும்பத்தினரின் பணியும் நல்லுள்ளமும் பாராட்டற்குரியது. கோயிலின் முன்புறம் 3 பரப்பு காணியை பிரம்ம ஸ்ரீ தா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அன்புள்ளத்தை மறக்க முடியாது. யாகசாலை அமைத்த பெருமை திரு. செ.கந்தையாவையே சாரும். இன்று ஆலயத்தின் திருப்பணி வளர்ச்சியையும் இராஜகோபுர வளர்ச்சிக்கு இங்கு மட்டுமல்ல புலம்பெயர்நாடுகள், நல்ல உள்ளங்களின் பணஉதவி பொருள் உதவியை மறக்கமுடியாது. என்பதுடன் அன்னையின் அருளை வாரிவழங்கிய வண்ணம் உள்ளார். அத்துடன் ஆலயத்தின் துரைச்சாமி ஐயாவின் பணியும், சுறுசுறுப்பும், விடாமுயற்சியும் இன்று இவ் ஆலய வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதுடன் இன்றைய நிர்வாகத்தினரின் செயல்திறனும் இவ் ஆலய வளர்ச்சிக்கு உரமூட்டுவதை காணலாம். இவ் ஆலயத்திற்கு இராஜராஜேஸ்வரி மாலையை அருட்கவி. சீ. விநாசிதம்பி பாடியதுடன் திருவூஞ்சலை பிரமஸ்ரீ வ. குகசர்மாவும் எழுதியுள்ளார்.

இவ் ஆலயத்தில்தான் சிறுவனாக இருக்கும் போது திருவெண்பா பாடியதும் எனது தந்தையார் அவர்களது சகோதரர்களுடன் இணைந்து விழாக்களில் பங்குபற்றியது மறக்க முடியாதது. இன்று ஒவ்வொரு பூரணையிலும் அன்னதானம் அபிஷேகம் நடைபெறுவது சிறப்புடையதாகும். மீள்குடியேற்ற கிராமமாக இருந்தும் இவ் ஆலய துரைச்சாமி ஐயாவின் பிள்ளைகள் கொழும்பில் இருந்து நிதி திரட்டி இங்கு அனுப்பி அன்னையின் ஆலய வளர்ச்சியை காண துடிப்பது எம்மை மெய்சிலிர்க்க வைப்பதுடன் அவர்களே முதுகெலும்பாக இருந்து இவ் ஆலயத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தி வருகின்றனர்.

1977ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. 3 கால பூசையும், நவராத்திரி, திருவெம்பாவை,பௌர்ணமி அன்று ஸ்ரீசக்கர பூஜையும் ஒவ்வொரு திங்களும் சோமவார உற்சவம், ஆவணி மாதத்தில் அலங்கார உற்சவம்,பங்குனி திங்கள் குளிர்த்தி மற்றும் வைகாசி விசாகப் பொங்கல் என்பன சிறப்பாக நடைபெற்று வந்தது.

1985ல் சில திருப்பணி வேலை நடைபெற்றன. வசந்த மண்டபம், யாகசாலை, மணிக்கூட்டுக் கோபுரம்,வைரவர் ஆலயம் அமைக்கப்பட்டு கொடி தம்பம் ஸ்தாபிக்கப்பட்டது. 1987லிருந்து சித்திரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவம் வருமாறு 10 நாட்கள் மகோற்சவம் 1990 வரை இடம்பெற்றது. 1990ல் நாட்டின் யுத்தம் காரணமாக மக்கள் முற்றாக இடம்பெயர்ந்தனர். அப்போது ஒரு நேரப் பூசை நடைபெற்றது. 1992ல் ஐப்பசிக்குப் பின் கோயிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. பின் 1997ல் மீண்டும் ஆலயம் செல்ல இராணுவ அனுமதி கிடைத்தது. அப்போது ஒரு நேரப் பூஜையும் சிறப்பான விசேட உற்சவங்களும் இடம்பெற்றன.

2010,2011ல் மீண்டும் அலங்கார உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு தேர், சப்பறத்திற்கு தேவையான பொருட்கள் இந்தியாவில் இருந்து வரவழைத்து சிறப்பாக நடைபெற்றன. 2012ல் பாலஸ்தானம் செய்யப்பட்டது. இக்கால கட்டத்தில் கோயில் விக்கிரகங்கள், சிம்ம வாகனம், குதிரை வாகனம், எருது வாகனம் திருடப்பட்டது. இது வருந்தத்தக்க செயலாகும். இக்கால கட்டத்தில் இராஜ கோபுர அத்திபாரம் இடப்பட்டு சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டது. பரிவாரத்தில் முருகன், நடராஜ சந்நிதி அமைக்கப்பட்டது. அத்துடன் உள்வீதி தூண்கள் எழுப்பப்பட்டு கூரைகள் நிலையோலை என்பன சிறப்பாக நடைபெற்றன.

தற்போது கோபுர வாசலின் முன் வில்லு மண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் பங்குனி மாதத்தில் குடமுழுக்கு செய்வதாக உத்தேசித்து வர்ணப்பூச்சு வேலைகள் நடைபெற்று வருகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. கண்ணகி அம்மன் கஞ்சிவார்ப்புத் தண்டல் பாட்டு
   த. சண்முக சுந்தரம்
   அருள் வெளியீட்டகம்.
   மாவை கந்தசாமி கோயில்.
2. கும்பாபிஷேக மலர்
   இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்
3. நேர்காணல்
   திரு. திருமதி. கெங்காதர சர்மா

## 3. மாவிட்டபுரம் வீணியவரை கண்ணகி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு

**காப்பு**

**கண்ணகியாள் கஞ்சிவார்ப்புத் தண்டற் கவிபாட**
**எண்ணும் விநாயகனே எங்காப்பு- மண்ணில்வரு**
**துன்பத் தொடரறுமே தூயவின்பம் சேருமே**
**மனபதையில் என்றுந்தான்.**

**நூல்**

குஞ்சரியின் புத்திரனைத் தொழுது நாமே
    கஞ்சி வார்ப்புத் தண்டல் செய்ய வாறோம்
மூத்த சிவன் மைந்தனைப் பாடியே நாமே
    வீதியெங்கும் தண்டல் செய்ய வாறோம்
பரமசிவனருகி லிருந்தெல்லே எங்கள் தாய்
    அருண் மழை பொழிந்தெம்மைக் காத்திடுவாள்
முத்துக் குமனை மடியில் வைத்தெல்லோ
    மூவுலகும் காத்தருளும் செய்வாளெங் கள்தாய்
அருண் மழை பொழிந்தெம்மைக் காத்திடுவாள்
    முருவுமாவை வீணியவரைக் கண்ணகியாம் தாய்.

துன்பம் போக்கும் அம்மன் கஞ்சிக்கு
    இன்பம் பெருக வந்து பாடிப்பாடி
பச்சை அரிசியும் பழம்பாக்கு அடையும்
    இச்சையுட னெடுத்து வழங்கு வீரே
மாங்கான நல்ல பருபபுடனே வெல்லம்
    தேங்காயும் பணமும் மனமுவந்து தாரீரே
பேரான எங்கள் வீணியவரை அம்மன்
    பேரருளைப் பெற்றுய்ய எல்லீரும் வந்து
தாராள உதவிகளைத் தந்தின்பம் பெறுவீா
    தரணிமகிழ் மாவை நகர் வீணியவரைத் தாயாம்
பீரணியின் பொற்பாதம் தொழுது நின்றோமே.

மங்கள நாயகியின் புன்னகையிலே
தங்கமருள் பொங்கியெழும் புண்ணியர்களே
கொதித்தமுள்ளம் குளிர்ந்துவிடும் குளிர்த்தியைச் செய்ய
கதித்தெழுந்து வாருங்களேன் கண்ணகியாள் வாசல்
பட்டினத்து மங்கையெல்லோ கண்ணகிப் பாவை
தொட்டுப் பாதம் சூட்டவாரீர் தொண்டருள்ளீரே
சீறும் வினைத்தொடரைச் சாடிடுவாள் அம்மை
மாறும் பிறவியுமே கஞ்சிவார்ப்புச் செய்ய
கூறுபகழ் மாலைநகர் வீணியவரைத் தாயாள்
வீறுபுகழ் பாடிப்பாடிச் சேர வாருமே.

மாநாய்ககன் புதல்வியெல்லோ கண்ணகித் தாயாள்
நானுளும காத்திடுவாள் அமிர்தவல்லித் தாயாள்
சாநாளும் வாணாளும் தைகொடுக்கும் கருணையாள்
போநாளில் புகல்தருவாள் கண்ணகித் தாயாள்
நீலிமனம் நொந்தெல்லோ நீணிலத்து வந்தாள்
சூலிமனம் குளிர்ந்துவிட்டால் சூழ்வினைகள் போமே
கொடும்பாடு இழைத்த மன்னன் கொடியவினை
வடிவோடு வந்தாளே கண்ணகித் தாயாள் போக்க
பட்டதுன்பம் விட்டுவிடும் கஞ்சிவார்ப்புச் செய்ய
தொட்டதெல்லாம் துளிர்த்துவிடும் சேர வாருமே.

சாத்தவனின் மகனெல்லோ கலைக்கேள்வன் கோவலனார்
ஏத்துபுகழ் கோவலனை கைப்பிடித்தாள் கண்ணகியாள்
கற்பிருந்த கண்ணகியாள் வீட்டரசி ஆனாளே
சொற்பிரியா இல்லறத்தைச் சீராகக காக்கையிலே
மலர்க்குழலி மின்னம்மை மாதவியாள் கலையழகில்
குலமகனாம் கோவலனார் மயங்கிவிட்டான் ஊழ் வினையால்
தென்னவனின் பழிதுடைக்க தேன்மொழியைச் சேர்ந்தானே
மன்னன் அறங்காக்க மாதவியாள சேர்நதானே
அழியா அழகுடையாள் கருணை அலை எறியும்
விழியா கண்ணகியாள் இல்லுறையும் கறிபின்மிக்காள்
கறிபின்மிக்க கண்ணகியின் மணங்குளிர குளிர்த்தியைநாம்
அற்பினொடு செய்திடவே அரும்பொருளைத் தந்துதவீர்

அல்லியங் கோதையம்மை கண்ணகியைக் கோவலனார்
மெல்ல மெல்லா் தான் மறந்தார் மேலவரும் தான் மகிழ்ந்தார்
வண்டார் பூங்குழலம்மை வனிதை மாதவிபால்
கொண்டல் கோல் பொருளெல்லாம் கொடுத்து மகிழ்ந்தானே
கொற்றவனுக் குற்றபழி குறுக்கிட்ட அதினாலே
மற்றொன்று மறியாத மாதவியும் கானல் வரிப்
பாடல் தனைமறந்து இசைக்கையிலே கோவலனும்
ஊடிப் புலனொந்து மாதவியைப் பிரிந்தானே
பிரிந்தவனைப் புரிந்தவளே கண்ணகியாம் எங்கள் தாய்
விருப்புடனே வீணியவரைக் கோயிலிலே கொலுவுற்றாள்.

அல்லியங் கோதையம்மை கண்ணகியைக் கோவலனார்
மெல்ல மெல்லா் தான் மறந்தார் மேலவரும் தான் மகிழ்ந்தார்
வண்டார் பூங்குழலம்மை வனிதை மாதவிபால்
கொண்டல் கோல் பொருளெல்லாம் கொடுத்து மகிழ்ந்தானே
கொற்றவனுக் குற்றபழி குறுக்கிட்ட அதினாலே
மற்றொன்று மறியாத மாதவியும் கானல் வரிப்
பாடல் தனைமறந்து இசைக்கையிலே கோவலனும்
ஊடிப் புலனொந்து மாதவியைப் பிரிந்தானே
பிரிந்தவனைப் புரிந்தவளே கண்ணகியாம் எங்கள் தாய்
விருப்புடனே வீணியவரைக் கோயிலிலே கொலுவுற்றாள்.

கொலுவுற்ற கண்ணகியாள் கொண்டவனித் பெருந்தெய்வம்
நிலவுலகில் இல்லையெனும் வாய்மை கடைப்பிடித்து
வண்டுறங்கு கூந்தலுடன் வளநாடு நீத்தகன்று
ஆண்டகையாம் கணவனுடன் கூடல்நகர் சேர்ந்தாளே
தான்தனியக் கோவலனார் தனிச் சிலம்பு விலைகூற
தஞ்சனைய வஞ்சநெஞ்சன் பொற்கொல்லன் வஞ்சனையால்
மிஞ்சுபுகழ் கோவலனும் கொலைப்பட்டான் அது கேட்டுச்
சினந்தெழுந்த கண்ணகியும் நினைந்தழுது அறங்காக்க
மன்னன்பால் சென்றாளே மனங்குளிரக் கஞ்சிவார்ப்போம்

கஞ்சிவார்க்க வாருங்கள் கண்ணகியாள் மனங்குளிர
தஞ்சமென இவள்பாதம் தொழுதுய்ய வாருங்கள்
பாண்டியனின் பழிதீர்க்க வந்தவளே கண்ணகியாள்
தொண்டுசெய்தால் அவள்சீற்றம் தணிந்திடுமே வாருங்கள்
கொற்றவன்முன் வந்துநின்ற கற்பிருந்த தெய்வமன்னாா்
பொற்றொடியின் நிலைகண்டான் கொற்றவனும் வெய்துயிர்த்து
விரிகூந்தல் விழிநீரும் தனிச் சிலம்பும் கண்டன்றோ
பார்வேந்தன் தோற்றுவிட்டான் திருவாரூர்க் கடலிலே
பாருள்ளீர் வாருங்கள் பாவையிவள் சினமாற.

சினங்கொண்ட நாயகியின் சீற்றமது கொழுந்துவிட
மனங்கொண்ட மாதேவி மருவார் குலமழியத்
தீத்திறமே படர்கவென தீக்கடவுள் தீக்கொழுவி
விதிமலி கூடலையே வேதித்தான் கண்ணகியும்
கூடல்விட்டு வஞ்சிநகர் தஞ்சமெனச் சென்றிட்டாள்
பாடலமை கலைக்கோயில் கற்கோயில் பெற்றிட்டாள்
தமிழிச்சி கண்ணகியாள் தமிழ்நாடு ஒப்பற்று
இமமிழ்கடல்சூழ் வையத்து தனித்துவமும் பெற்றதுவே
கடப்பாடு மறவாமல் கண்ணகியாள் மனங்குழிர
கடல்போல வாருங்கள் குளிர்த்தியை நாம் செய்வோமே.

கருணை கருக்கொண்ட உத்தமியாள் கண்ணகிக்கு
மருவார் குழல்மடவீர் கஞ்சிவார்க்க வாருங்கள்
எல்லா உயிர்கட்கும் கண்மணியாம் கணமணிக்கு
கல்லார் புயமுடையீர் கஞ்சிவார்க்க வாருங்கள்
பொன்னூஞ்சல் கட்டிப் பொலிந்தசெழும் தாதிநைத்து
அன்னக் கிளிமொழியார் அருகிருந்து யாழிசைப்ப
பணியாரம் பொங்கல் கனிவகையும் தான்படைத்துத
கா்ப்பூர பேரொளியில் கண்ணகியைக் கொலுவிருத்தி
ஈா்ப்புறவே நெஞ்சம் கஞ்சிவார்க்க வாருங்கள்.

மாவைநகர் வீணியவரை வந்தவயே ஓலம்
மதுரை விட்டு மாவைநகர் வந்தவளே ஓலம்
கற்புக் கடம்பூண்ட கண்ணகியே ஓலம்
கண்ணகிக்கு வாழ்வழிக்கும் வயிணவியே ஓலம்
வாழுநெறி வகைதந்த கண்ணகியே ஓலம்
குலமக்கள் நிறை காக்கும் பராபரையே ஓலம்
நோய்நொடிகள் நீக்கிடுவாய் ஓலம் ஓலம்
பாலகர்க்கு வீற்றிரப்பாய் ஓலம் ஓலம்
வீணியலரை வீற்றிருப்பாய் ஓலம் ஓலம்
மாவைநகர் மக்களுக்கு வாழ்வளிப்பாய் ஓலம்

## 4. வலி- வடக்கு- பளை- வீமன்காமத்தின் கத்தோலிக்க பாரம்பரியமும் மகப்பேற்று சுதேச வைத்திய பாரம்பரியமும்.

வலிகாமம் வடக்குப் பகுதியில், தெல்லிப்பளைக் கோவிற் பற்றில் பளை - வீமன்காமம் இறை பன்னெடுங்காலமாகப் பல சிறப்பம்சங்களோடு விளங்கிய பழம் பெரும் பகுதியாகும். தற்போதைய யா/வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலை 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை (1950க்கு முன்) " பைலிங்கல் ஸ்கூலாக " காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி நிறுவுனர் மனேஜர் தம்பிப் பிள்ளையின் வீட்டுக்கருகாமையில் " டச் " வீதியின் கிழக்குப் புறமாக அமைந்து வீமன் காமத்துச் சிறார்களின் அறிவுப் பசியையும், தையல், பன்னவேலை, ரேந்தை, கலை, கலாசார விழுமியங்களையும் வளர்த்து "தையல் ரீச்சர்மாரின் ஒப்பற்ற தன்னலமற்ற தேவையினால் நீங்காப் புகழ் பெற்றார். யாழ் பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தராக இருந்த பேராசிரியர் . சு. வித்தியானந்தனின் தந்தையார் சுப்பிரமணியம் என்பவரால் தாபிக்கப்பட்டதாகும். பின்னர் 2ம் உலக மகா யுத்தத்தால் சின்னாபின்னமான மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குக் கிழக்குப் புறமாக யா/வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலையாக நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. நிறுவுனர் சுப்பிரமணியத்தின் புதல்விகள் இருவரும் (வாலாம்பிகை, இந்துமதி) அதிபராகவும் ஆசிரியராகவும் சேவையாற்றியமையும் குறிப்பிடற்பாலது. இவர்களும் பின் செல்லப்போகும் வைத்திய பரம்பரையோடு சமய வேறுபாடு இன்றி ஒட்டி உறவாடியமையும் நோக்கற்பாலது. புகழ் பூத்த பல கல்விமான்களும், பேராசிரியர்களும் உருவாகி இப் பாடசாலைக்கும் தமக்கும் சிறப்புச் சேர்த்தனர். த.தே. கூட்டணியின் செயலாளர் மாவை சேனாதிராஜாவும் இப் பாடசாலையின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியர் வருகையோடு கத்தோலிக்க மதமும் (R.C) வளர்ச்சி பெற்று மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திற்குக் கிழக்கே புனித யுவானியார் (St. Jhon The Baltist) தேவாலயம் அமைத்து அதனைச் சூழவரப் பல கத்தோலிக்க குடும்பங்களும் வாழ்ந்தன. கத்தோலிக்க குருக்கள் அருகிய காலமாதலால் " ஊறணி மீசானோடிணைந்த செயற்பாடுகள் மூலம் வருடாந்த யுவானியர் நவநாள் விழாக்கள் அவர் பிறந்த தினமான ஆனி மாதம் 24ந் திகதியிலும் இறந்த தினமான ஆவணி 29ந் திகதியிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுவதோடு ஞாயிறு திருப்பலிகளும்

விவாக, மரண திருப்பலிகளோடு சமய அனுட்டானங்களும் சிறப்புற நிறைவேறி மக்கள் சந்தோசமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்தனர். இப் பங்கை சேர்ந்த பல கத்தோலிக்க குடும்பங்கள் காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலைக்கருகில் “மாங்கொல்லை” (நெறிலகட்டி) எனும் கிராமத்திலும் “பாவிலு கடவை” “சிங்கம்பரை” போன்ற பகுதிகளிலும் வாழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், தெல்லிப்பளை புகையிரத நிலையத்திற்குத் தெற்கேயும் சம்பேதுருவானவர் (ST.Peter Church) தேவாலயமும் அமைந்து பல கத்தோலிக்க குடும்பங்களும் வாழ்ந்ததோடு வழிபாடுகளும் ஒழுங்குற நடந்தேறின. ஐரோப்பியர் வருகைக்கு முன்பே கத்தோலிக்க பாரம்பரியம் பளை வீமன்காமத்தில் தளைத்தோங்கியிருந்தமை புலப்படுகின்றது.

பளை வீமன்காமத்தில் சைவ சமயம் தளைத்தோங்கியிருந்தமைக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், பிள்ளையார் கோயில், முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் வைரவ கோயில் போன்ற இன்னோரன்ன கோயில்களும் சான்று பகர்கின்றன. இவைகள் யாவும் மக்களுக்கு அருள் பாலித்து ஆன்மீக வழியில் ஈடேற வழிசமைக்கின்றன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மக்கள் அனைவருமே இடம் பெயர்ந்து வாழ இறைவன் அருள்பாலிப்பாராக.

வைத்தியத் துறையை நோக்குவோமாயின் வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலைக்கு வடகிழக்கே கண்வைத்திய பரியாரி பரம்பரை ஒன்று புகழ் பெற்றிருந்தது. (பெயர் அறியமுடியவில்லை) கண்பரியாரி என அழைக்கப்பட்ட குடும்பம், எவ் வித கண்பிரச்சனையாலும் சொட்டு மருந்து கழிம்பு, தைலம் போன்றவற்றின் மூலம் குணப்படுத்தி விடுவர். டச்சு வீதி முத்துமாரி அம்மன் கோயிலுக்கருகாமையில் ஆயள் வேத மருத்துவர் “வல்லிபுரம;” என்பவர் அருஞ் சேவையாற்றினார்.மற்றும் கதிரேசுப் பாரியார், சின்னத்தம்பிப் பாரியார் என்பவரும் காளி கோயிலடியில் சிறந்த வைத்தியர்களாக இருந்து சேவையாற்றினார்.

சில்லாலையில் “ அத்தனாசிரியர் பரம்பரை” - முறிவு, தறிவுக்கு ஒட்டகப் புலம் “ சமத்தர் “ பரம்பரை போன்ற “ பளைப் பிள்ளைத் தாச்சி வைத்திய பரம்பரை” எனப் புகழ் பெற்ற “ மரியார் “ (மரியாம்பிள்ளை) பரம்பரையை நோக்குவோமாயின் முதல் மகனாக அறுங்காச்சிப்பிள்ளை பிறந்த கையோடு தாயார் காலமாகவே மறுமணம் புரிந்து பிரான்சிஸ் பிள்ளை (பிறஞ்சர்) அவதரித்தார். மூத்த மகன் அறுக்காங்சருக்கு சவரிமுத்து (தம்பிப் பிள்ளை) நேசமுத்து (லோறன்ஸ்) மேரி மாகிறேற் (கட்டுரை ஆக்கியோனின் மாமியார்) பொன்னையா (அம்புறோஸ்) ஆசிரியர், யோசப்

மாஸ்ரர்) ஆகியோரும் " அல்கொக்" என்பவரும் பிறந்தனர்.மூத்த மகனாக சவரிமுத்து பரம்பரை வைத்தியத்தையே மேற்கொண்டார். பிறங்சருக்கு (பிரான்சிஸ் பிள்ளை) வலி- மேற்குப் பெரிய விளானில் "நீக்கிலார் " (நீக்கிலாப் பிள்ளை) " பளைப் பரியாரி " எனப் புகழ்பெற்றவர் ஆனையிறவு உப்பளத்தில் "யாக் கோப்புவும் பளை வீமன்காமத்தில் இராசேந்திரம் வைத்தியரும் யாழ் கொய்யாத் தோட்டத்தில் "ஆட்டிறைச்சிப் பரம்பரை வைத்தியத்தையே மேற்கொண்டனர். தற்பொழுது பழைய பூங்கா வீதி கொய்யாத் தோட்டத்தில் பெறாமகன் சந்தியாப்பிள்ளை அன்ரன் (Dr.Anton) சந்ததியின் வாரிசாக வைத்தியத்தில் கைதேர்ந்தவராக திகழ்கின்றார். இரண்டாம் மனைவியும் இறக்கவே மூன்றாம் தாரத்திற்கு ஒன்பது பிள்ளைகளுமாக மொத்தம் பதினாறு பிள்ளைகளும் இலங்கையிலும் உலகின் மூலை முடுக்கெல்லாம் வியாபித்துச் சீர்சிறப்புடன் வாழ்கிறார்கள். இவர்களின் விபரம் ஒழுங்குறத் தெரியாததால் குறிப்பிடவில்லை. இவ் விதம் பதினாறு பிள்ளைச் செல்வங்களோடு சிறப்புடன் "மரியார்" பரம்பரை வாழ்ந்தமை போற்றற்பாலதே.

இவ்வாக்கம் முக்கியமாக பளைவீமன் காமத்தில் இருபதாம் நூற்றாண்டில் " பளைப்பரியாரி"யாக எம் மத்தியில் வாழ்ந்து மறைந்து போன "இராசேந்திரம்" வைத்தியர் 1930களில் மறைந்து போக 1940களிலிருந்து C.Y. 4104 B.S.A (2.5.H.P) மோட்டார் சைக்கிளில் சிட்டாக வலம்வந்து குடாநாடு முழுவதும் ஏன் இலங்கைத் தீவு முழுவதுமே வலம் வந்த " பளைப் பிள்ளைத் தாச்சிப் பரியாரி" "அருளப்பு" வைத்தியர் பற்றி நோக்குவோம். எனது சகோதரியின் திருமணத்தோடு 1947 முதல் நானும் அவர்களின் கைப்பிள்ளையாகி அவர்களுடனே சங்கமமாகி வாழத்தொடங்கினேன். இளவாலை சென். கென்றீஸ் கல்லூரியில் கல்வி கற்றதால் பாடசாலைக்கு ஏற்றி இருக்கும் வேலையையும் அப்பாவே செய்யவேண்டியிருந்தது. ஏலவே "வபூங் அப்புகாமி மாட்டீன் " என்ற சிங்களப் பையன் அவர்களுடன் சேர்ந்திருந்தார். அவர் மருந்துகள் அரைக்கின்ற வேலைகள் பொறுப்பாகச் செய்வதோடு "பவர் ஸ்ரேசனில்" வேலையும் பெற்றுக் கொடுத்து வீடும் கட்டிக் கொடுத்து திருமணமும் செய்து வைத்து சந்தோசமாக வாழ்ந்தனர். மூத்த மகன் யேசுதாஸ் இறந்து விட்டார். மகள் நீற்றா இளைய மரியதாஸ் ஆகியோர் அங்கேயே திருமணமும் செய்து வாழ்கிறார்கள். 1950களில் B.S.S 3.5 H.P மோட்டார் சைக்கிளில் E.Y.5504 காகின்ஸ் தாபனத்தில் புலவர் பார்வதிநாதசிவத்தின் மைத்துனர் எம். சின்னத்துரை மூலம் பெறப்பட்டது. அக்குடும்பங்களும் அதிக ஈடுபாடு கொண்டன.

கரையோர கிராமங்களைவளலாய், மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை , கீரிமலை, வலுத்தூண்டல், சேத்தாங்குளம், மாதகல் ஈறாக குடாநாட்டின் அனைத்துப் பிரதேச மக்களாலும் அறிந்து சிறந்த உத்தம வைத்தியராக போற்றப்பட்டவர். "வழியில் கண்டால் வா போ என்பர். கருங்கண்ணி பட்டால் கண்ணிலும் காட்டார் "என்ற பழமொழியைப் பொய்யாக்கிச் சிறந்த மீன்வகைகளையே கர்ப்பவதிகளுக்கு மா.மா தூள் (மாதா மாதம் சாப்பிட) லேகியம் மற்றும் குழம்பு வகைகளும் வாய்வுரோகத்துக்கு வெண்காயக்குளிகை, பெருங்காயக் குளிகை பீனிசத்துக்கு "பத்திலைச் சாற்றெண்ணெய் , எக்சிமாவுக்கு கோழி ."அவரைச் சாற்றெண்ணெய்:,வாதத்துக்கு "தாழங்காய் எண்ணெய்" கர்ப்பவதிகளுக்கு உழுந்தெண்ணெய், பொண்ணாங்கண்ணி எண்ணெய் மற்றும் முக்கூட்டுக்குளிகையும் பற்பங்கள் போன்றனவும் நூற்றுக்கு நூறு வீதம் கண்கண்ட ஔடதங்கள் (முறைப்படி தயாரித்தால்).

வைத்தியத் துறையில் மாத்திரம் " அருளப்பு வைத்தியா;" மேன்மை பெறவில்லை. சமூக சேவையிலும் தனக்கெனத் தனியாக தடம் பதித்தவர். 1950களிலிருந்து " மயிலிட்டி கிராம சபையில்" அது உள்ளூராட்சி மன்றமாக மாற்றம் அடையும் வரையான காலப் பகுதியில் தலைவராக "சுவாமி நாதன் ஸ்ரீ பாஸ்கரன்" இருந்த காலத்தில் வீமன் காமம் தெற்கு வட்டாரத்தின் அங்கத்தவராக இருந்து வீதிகளைப் புனரமைத்து சௌகரியமான போக்குவரத்துக்கு வழிசமைத்ததோடு மக்களின் தேவையறிந்து அவற்றுக்கு நிவாரணங்களும் பெற்றுக் கொடுத்துச் சமூக சேவையிலும் எல்லோர் மனங்களிலும் நீங்கா இடம்பிடித்த பெருந்தகையானார். சமூகத்தின் அத்தனை "அருளப்பு வைத்தியர்" இன்று எம்மத்தியில் இல்லை. அந்த வெற்றிடத்தை நிரப்ப இங்கு இனி யாருளர்?

1963ம் ஆண்டு வைகாசி 8ந்திகதி நடந்த எனது திருமணத்தின் போது சற்றும் எதிர்பார்த்திராத விதமாக மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கிழக்கு வீதியிலிருந்து நீலபாவாடையில் வீடுவரை மணமக்களாக எம்மை அப்பாவும் அம்மாவும் ஆசிரிய நண்பர்கள் உறவினர்கள் சுற்றம் சூழ மேளதாளங்களுடன் அழைத்து வந்த கண்கொள்ளாக் காட்சியை எப்படி மறப்பது? எமது கண்கண்ட தெய்வங்கள். 1973ம் ஆண்டு மாசி மாதம் 3ம் நாளில் "பளைப் பரியாரி" என எல்லோராலும் போற்றப்பட்டவர். பூதவுடல் நீத்துப் புகழுடம்பெய்தினார். அவர்களை எம் மனதிலிருந்து இறையருள் வேண்டுவோமாக.

A.M.இராஜேந்திரம்
இளைப்பாறிய ஆசிரியர்

## 5. தமிழர் பண்பாடும் யாழ்ப்பாணமும்

தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும் தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும் தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள் கலைகள் ஊடாகவும் சமூக, பொருளாதார அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்ட்டு திருத்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே.

" தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது(culture depending) அதாவது தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தைத்தரக்கூடிய புறக்கூறுகள் பண்பாடு சார்ந்தும் அவற்றின் "அகக் கூறுகள்"உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும்."பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது. தமிழர் பண்பாடு இதுவல்ல என்று தெளிவாக வரையறைப்பது கடினமாகிலும் ஒரு அறிவு சார் மதிப்பீடு செய்யமுடியும

### தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள்

தமிழர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர். என்பதை சங்க கால இலக்கியங்கள் உணர்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். தமிழர் வாழ்வை அகவாழ்வு. புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாக கருதப்படுகிறது. தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை தமக்குக் காட்டி நிற்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும்சங்க இலக்கியங்களிலிருந்து தமிழர் பண்பாட்டை நன்கு அறிகிறோம். பண்பாட்டின் கூறுகள் சிலவற்றைப் பற்றி இங்கு காண்போம்.ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உள மொத்தத் தூய காதல் வாழ்க்கையாகும்.

**நட்பு**
சங்க கால தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நன்று"

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மையான நட்பாகுமென்றார்.

**விருந்தோம்பல்**
" விருந்து" என்ற சொல்லுக்குப் "புதமை" என்பது பொருள் உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை "விருந்து" என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

இத்தகைய தமிழர் பண்பாட்டில் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு முன்னர். யாழ்ப்பாணப்பிரதேசத்தின் அமைவிடம் பற்றியும் புவியியல் பற்றியும் விளங்கிக் கொள்வது அவசியமாகும். சில அறிஞர்களை பண்பாட்டை புவியியல் அடிப்படையில் நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக இலங்கை பண்பாடு, இந்தியப் பண்பாடு, என குறிப்பிடுவதைப் காணலாம். எனினும் இவற்றிற்கு இடையே பல்வேறு வகையான வேறுபாடுகள் இருப்பது உணரப்பட்ட போதும் பொதுவாக இவ்வாறு அழைக்கும் வரலாறு இன்று வரை தொடர்கிறது. பண்பாடு என்பது பன்மைத் தன்மை கொண்டது.

யாழ்ப்பாண பிரதேசம் என்னும் பெரு வட்டாரத்திற்குள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று முதலிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. இப் பிரிவுகளுக்கிடையே பண்பாட்டுக் கோலங்களிற் சிற்சில நுண்ணிய வேறுபாடுகள் அல்லது தனித்தன்மைகள் காணப்படுவது உண்மையே, எனினும் எல்லாப் பிரிவுகளுக்கும் உரித்தான பொதுவான பண்பாட்டு அம்சங்களையே இவ்வுரையில் குறிப்பிடப்படுகின்றன. பண்பாடு என்ற சொல் வாழ்க்கை முறை அல்லது வாழ்வியல் என்ற அர்த்தத்திலும் பயின்று வருகிறது. தமிழிலே பண்பாடு என்ற சொற்பயன்பாடு மிக அண்மைக் காலத்திலேயே அறிமுகமானது. Culture என்ற ஆங்கிலப் பதத்திற்கு நாகரிகம் என்ற சொல்லே பெரு வழக்கமாக இருந்தது.

பழந்தமிழ் இலக்கியங்களிற் பண்பாட்டினை குறிக்கச் சால்பு என்ற பதமே கையாளப்பட்டுள்ளது என்பர். Culture என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பண்பாடு என்ற சொல் மிகப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கின்றது. என்பதை மறுப்பதற்கில்லை. பண்பாடு பற்றிய ஆய்வினைச் செய்தவர்கள் பண்பாட்டை பொருள் சார், பண்பாடு பொருள் சாராத பண்பாடு என இரண்டாக பாகுபாடு செய்வார். ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள் சார் பண்பாட்டினைப் பற்றிய தரவுகள் மிகவும் பயனுள்ளவை.வீடுகளின் அமைப்பு , செய்பொருள்கள், வீட்டுச் சாமான்கள்,உடைகள்,அணிகலன்கள்,போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற்கருவிகள்,சடங்குப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களைப் பற்றிய தரவுகள் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறியப் பெரிதும் உதவும். இந்த வகையில் நோக்கும்போது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருள்சார் பண்பாடுகள் யாவற்றையும் இவ்வுரையிலே விபரித்துக் கூறுவதுகடினமானது. குறிப்பட்ட சில பொதுமைப் பண்புள்ள அதேவேளை முக்கியமானவை எனக் கருதும் பண்பாட்டுக் கோலங்கள் சில இங்கு குறிப்பிடப்படுகின்றன.

இங்கு நான் சுட்டிக்காட்டப்போகும் பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றை நாம் இழந்து விட்டோம். சிலவற்றை மாற்றத்தோடு பேணி வருகின்றோம். இன்னும் சிலவற்றை " பொய்யாய், பழங்கதையாய், மெல்ல மெல்ல போக விட்டு விட்டோம். பண்பாடு என்பது ஒரு ஓட்டம். அது இயங்கியற் சாத்தியமுடையது. அதுமாறுவது அல்லது மாற்றப்படுவது தவிர்க்க முடியாதது. பண்பாடு என்பது மாறாத தன்மை கொண்டது. என்ற கருத்தியலாளர்களும் உள்ளனர். இத்தகைய யாழ்ப்பாண பண்பாடு சீரழியவில்லை. என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் பண்பாடு என்பது ஒரு இனத்தின் உடைய கலாச்சாரம் (பண்பாடு) அந்த இனத்தை காட்டிவிடும். தமிழர் என்ற இனம் பலத்த அழிவை கண்டது. தமிழர் என்ற இனம் பலத்த அழிவை கண்டது. தமிழர் ஆகிய நாம் எம்முடைய கலாச்சாரத்தை வளர்க்க வேண்டும்.

காலத்திற்கேற்ப தமிழர்களுடையகலாச்சாரம் மாற்றங்கள் கண்டுள்ளன. இல்லை என்று சொல்ல முடியாது. உள்ளத்துடைய மாற்றங்களுக்கு ஏற்ப கலாச்சாரங்கள் மாற்றங்கள் காணுவது சகஜம் தமிழர்களுடைய கலாச்சாரமாகிய வேட்டி இன்று நீளக் கால்சட்டை என்று போட்டு திரிகிறோம். அது மட்டுமல்ல மேற்கத்திய இசைக்கருவிகளை பெரும்பாலும் பயன்படுத்துகிறோம். உணவு வகைகளில் கறிகள் என்று இல்லாமல் பீசா என்றும் நூடில்ஸ் என்றும் மேற்கத்திய

உணவுகளையும் உண்கிறோம். எம்முடைய கலாசாரங்கள் மாற்றங்கள் காணுவது ஆரோக்கியமே கெட்டது அல்ல நாம் யார் என்ற அடையாளத்தை மாற்றம் செய்வது கலாசாரத்தை அழிப்பதற்கு சமன்.

எம்முடைய கலாச்சாரத்தை அழியாது பாதுகாக்க எம்மை வருங்கால சந்ததியை கலை கலாசார நிகழ்வுகளில் பங்கு எடுக்க வைக்க வேண்டும் கணனி, கையடக்க தொலைபேசி, மற்றும் Face Bookஇல் இருக்காமல் கலைகளில் பங்கெடுக்க பெற்றோர்களுடன் பிள்ளைகளையும் ஊக்கமெடுக்க முன்வர வேண்டும். கலாச்சாரம் தானாக அழிவது கிடையாது நாம் தான் காரணம். எமது கலாசாரத்தை அழியாது பாதுகாக்க வேண்டும் என்றால் பற்று வைப்பது மட்டுமன்றி அதில் ஈடுபட வேண்டும். சமையலை ஒரு உதாரணமாக எடுப்போம் இன்றுஇந்திய உணவு என்றால் உலகுக்கே தெரியும்.

யாழ்ப்பாணத்தினுடைய உணவு என்று எதை சொல்லுகின்றோம் நிச்சயமாக எம்முடைய உணவு வகை தனித்துவமான வித்தியாசம் உள்ளது. வெள்ளையனுக்கு இந்திய உணவைப் பற்றிய அறிவு உள்ள மாதிரி யாழ்ப்பாணத்து உணவுகளைதெரியாது. எமது உணவு வகைகளை உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும். இதன் மூலமும் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முடியும். முதலில் சொன்ன போல மற்ற சலாசாரங்களை பார்த்து நாம் மாறுவது பிழையில்லை. ஆனால் எம்முடைய கலாசாரத்தை தூக்கி எறிவது கலாசாரத்தை சீரழிப்பதாகும். எம்முடைய வருங்கால தலைமுறை எம்முடைய கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும். என்றால் இன்று நாம் கலாசாரத்தை இன்றைய தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டும். எம்முடைய கலாசாரத்தின் மூலமாக எம்முடைய கலாசாரத்தை வளர்க்க வேண்டும்.

பாரம்பரிய கலாசாரத்தை பேணி வந்த இலங்கை தமிழர்கள் இன்று கலாசாரத்தை எப்படி பேணுவது பற்றி யோசிக்க வழி தேட வேண்டியுள்ளது.இன்று யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவுகள் பற்றி தினமும் கேட்டுக் கொண்டுதான் இருக்கறோம். கலாசார சீரழிவுகள் என்னும் போது தகாத உறவுகள் மது, புகை பிடிப்பது, போதை மருந்துகளுக்கு அடிமையாவது மட்டுமல்லாது கொலை, கொள்ளை, சண்டைகள் மற்றும் தொழில்நுட்பத்தினால் வரும் பிரச்சனைகளைத்தான் குறிப்பிடுகின்றோம்.உண்மையைச் சொன்னால் இப்படியான பிரச்சனைகளைச் கலாச்சாரச் சீரழிவுகள் அல்லது வன்முறைகள் என்றுதான் பார்க்க வேண்டும். ஏன் என்றால் இப்படியான பிரச்சனைகள் உலகம் முழுவதும் இருக்கும் ஒரு பொதுவான பிரச்சனை.

சமூக வன்முறைகளைக் குறைப்பதுஎன்னும் போது நாம் என்ன செய்யலாம். விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எம்முடைய கலாசாரங்களை பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் இந்த சமூக வலையமைப்புக்கள் பெரிதும் உதவும். சமூக வலையமைப்புக்களால் வரக்கூடிய நன்மைகளை விட தீமைகளை விழிப்புணர்வுகள் மூலம் மாற்றங்கள் கொண்டு வர முடியும். ஆனால் எம்முடைய மனம் என்பது நன்மைகளை விட தீமைகளைத்தான் இலகுவாக உள்வாங்கும்.

விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினாலும் என்ன அனுபவம்தான் பல விடயங்களைத் தெளிவுபடுத்தும். இப்படியான காரணங்களை அரசாங்கங்கள் மிக நுணுக்கமான சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். ஏன் என்றால் ஒருவருடைய பொறுப்பற்ற சுயநலமிக்க மற்றும் சிந்தனையற்ற மனம் மற்றவர்களை பெரிதும் பாதிக்கின்றது. இதனால் தான் அரசாங்கங்கள் சட்டங்களை உடைத்து உடைத்து சட்டங்களை உருவாக்கிக் கொண்டு, அல்லது மாற்றங்களை ஏற்படுத்திக கொண்டு இருக்கிறார்கள.

என்னைப் பொறுத்த வரை சமூகத்தில் மீது வைக்கப்படும் அக்கறையே சமூக வன்முறையைக் குறைக்க முடியும். என்று நினைக்கிறேன். சமூகத்தில் நடக்கும் வன்முறைகளைப் பொதுவாக எல்லாத்தையும் அழிக்கும் தன்மை கொண்டது. நான் முன் சொன்னது போல ஒவ்வொரு மனதில் என்ன நடக்கிறது. என்று சொல்ல முடியாது. சமூக வன்முறைகளைத் தூண்டும் எண்ணங்களை மாற்ற வேண்டும். அப்படியான இடத்தில் கலாசாரம் பெரிதும் உதவும் தீய எண்ணங்களில் இருந்து மனதை மாற்றும் வல்லமை கலைக்கும், கலாசாரத்திற்கும் உண்டு.

## ௬. வலி வடக்கு எங்கள் வாழ்விடமாகும்.

வலிவடக்கு எங்களது வாழ்விடமாகும்
வண்ணத்தமிழ்ப் பூமியெனத் தமிழிசைபாடும்
கலியிதனால் கைவிட்டும் அவரவரோடி
கலிவிலக வந்தநிலம் இதுவெனப்பாடும்

ஆண்டுபல வாகவிங்கு அமைதிகெட்டுமே
அடுசமரின் கோலமதால் எறிகணைதாங்கி
மாண்டவர்கள் பற்பலரும் மறைத்திடவிங்கு
மனைகளுமே உருக்குழைந்து சிதைந்தகோலமே

அகதியெனும் முத்திரையைக் கையிலேந்தியே
அரிசிமா சீனிபருப்பு என்றுவாங்கியே
உகந்தவிடம் இன்றிமர நிழல்களில்தங்கி
வாழ்ந்தநிலை தனைமறந்து போவமோநாங்கள்?

ஆண்டுபல வலைந்தலைந்து வாடியகோலம்
அகன்றமைதி பூத்ததெனக் கண்டுமேவந்தும்
உண்டுவீடு உண்டெனவே கண்டுவந்தபின்
உச்சிகூரை ஓடுவீழ்ந்து உடைவதுமேனோ?

இத்துயரம் தனைமறந்து வாழ்ந்திடும்வேளை
இனியநீரும் எண்ணெய்ப்படை தன்னிடைச்சிக்கி
அத்தனையும் பாழாக வைத்ததுவென்றால்
ஆண்டவனே நாங்கள்வாழும் இடமெதுசொல்லும்?

வெற்றிலைநல் வெங்காயம் மரவள்ளிநல்ல
உற்றதோடை எலுமிச்சை பாகல்பப்பாசி
ஏற்றமுறும் பயிரினங்கள் எழுந்திசைபாடும்
எங்கள்நிலம் வலிவடக்கு எனத்தமிழ்பாடும்

## 7. ஆலயமும் ஆன்மீகமும்

" அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது
அதனினும் அரிது கூன், குருடு, செவிடு
நீங்கிப் பிறத்தல் அரிது"

என்கிற ஔவையின் பொன்மொழிக்கிணங்க மானிடப் பிறவி என்பது மகத்தான ஒன்று இம் மானிடப் பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனதும் நோக்கம் முத்தி அடைவதாகும். முத்தி அடைதல் என்கிற இலட்சியத்தை அடைகின்ற வழிகளில் ஒன்றுதான் ஆலயவழிபாடு.

ஆலயம் என்றால் என்ன? ஆன்மீகம் என்றால் என்ன? இதுதான் இன்றைய எமது கருப்பொருள் ஆகும். இன்றைய எமது சமூகத்தின் இளைஞர், யுவதிகள் மத்தியில் இவற்றுக்கான பதிலும் இல்லை. இவற்றுக்கான பதில் கிடைக்குமாயின், எமது பண்பாடு, கலை, கலாசாரம் என்பன மோலோங்கி காணப்படும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

ஓர் காலத்திலே எமது கலாசாரம் "கந்தபுராண கலாசாரம்" என்று போற்றப்படுமளவிற்கு கொடி கட்டிப் பறந்தது. எமது சமய விழுமியங்கள் போற்றுகின்ற அத்தனை பண்பாடுகளும் சிறப்புற கடைப்பிடிக்கப்பட்ட காலம் அது. ஓர் ஆண் ஆலயத்திற்குச் செல்வானாயின் வேட்டி, சால்வை அணிந்தே செல்வான். பெண் புடவை அணிந்தே செல்வாள்.

அதனால் இன்றைய கால எமது பண்பாடு, கலாசாரம் சிதைவடைந்துகொண்டே செல்கிறது. எமது இளைய சமுதாயம் திசை திருப்பப்பட்டுக் கொண்டே செல்கிறது. ஆலய வழிபாடும் ஆன்மீகமும் அருகிக்கொண்டே செல்கின்றது. காரணம் தான் என்ன? ஆம், இவற்றுக்கான தேடலுக்கு முன் ஆலயம் எனப்படுவது ஆன்மா வயப்படுகின்ற இடம் என்று வரையறை செய்து கொள்வார்கள். அதாவது, ஒரு ஆன்மாவினுடைய சிந்தனைகள் சிதைவடையாமல ஒரு வழிப்படுத்துகின்ற இடம் தான் இந்த ஆலயம், ஆலயத்திலுள்ள "விக்கிரகம்" எனப்படுவது "வி+கிரகம் என பிரிக்கப்பட்டு "வி"என்பது மேலான என பொருள் கொள்ளப்பட்டு "கிரகம்" என்பது இருப்பிடம் எனவும் பொருள் கொள்ளப்பட்டு இறைவனது மேலான இருப்பிடம் எனப்படுகின்றது.

ஆக, இறைவன் அருள்பாலிப்பதற்காக எழுந்தருளியிருக்கின்ற சிறப்பான இடமே ஆலயம் ஆன்மீகம் எனப்படுவது, ஓர் ஆன்மா தனது இறுதி இலட்சியத்தை அடைகின்ற வழிகளில் ஒன்றாகும். அதாவது, ஆன்மாவின் இலட்சிய வழியை கற்றுக் கொடுப்பது இந்த ஆன்மீகத்தை பெற்றுக் கொள்ளுகின்ற இடம் தான் இந்த ஆலயம் ஆகும்.

எனவே, தான் ஆலய வழிபாடும் ஆன்மீகமும் என்ற பொருத்தப்பாடான தலைப்பை தேர்ந்தெடுத்தோம். இவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை பிரிக்கப்பட முடியாதவை, வேறுபாடற்றவை, ஆலய வழிபாட்டை சரிவர செய்து ஆன்மீக வழிநின்று முக்திபேறு அடைவோமாக!

வயலையூர். எம்.எஸ். தாஸ்
குரும்பசிட்டி கிழக்கு

## 08. சமத்துவமாய் வாழ வழி வேண்டும்.

மண்ணுலகில் மானிடராய்ப் பிறந்ததாலே
மாதவமே செய்திட்டோம் என்றார். இங்கு
பண்ணுகின்ற பஞ்சமா பாதகங்களால் வாழ்க்கைப்
பாழாக்கிப் பண்புகளை இழந்தே நின்றார்!
எண்ணுவதும் செய்வதும் தீதேயன்றி வாழ்வில்
ஏற்றமுற வழிவகைகள் வகுத்தாரில்லை!
உண்மையில் இவர் வாழ்வில் அர்த்தம் இல்லை! இங்கு
உருப்படியாய் எதையுமே செய்தாரில்லை!

அறிவியலில் உயர்ந்து விட்டோம் என்றே கூறி
ஆர்ப்பரிப்போர் பலபேர்கள் உண்டு! பெற்ற
அறிவிலே அழிவு செய்து உலகை ஆள
அனைவரும் மமதை கொண்டிங்கு அலைவோருக்கு!
அறவழியை மறைத்தலும் இவர்களாலே
அமைதி நிலை இம் மண்ணில் எங்கு தோன்றும்! இங்கு
துறவறமே பாண்டவரும் மமதை கொண்டதால்
துண்ட நிலையன்றோ தொடர் கதையாய் ஆகும்.

எங்கெங்கு வாழ்ந்திட்டபோதும் மக்கள்
எல்லோரும் மனித இனத்தாரே என்று
இங்கெண்ண மறுக்கிறார் இதயம் இல்லார்!
இவ்வுலகில் சிலகாலம் வாழும் மட்டும்
பங்கமுற்றுப் பகை வளர்த்து வாள் எடுத்து போர்புரிந்து
பரிதவித்து மடிகின்றார் வீணே! ஏனோ
தங்களைப் போல் பிறரை எண்ண நினைத்தாரில்லை!
தன்னலங் கொண்டார்! இவரால் பெருகும் தொல்லை!

உள்ளத்தால் நாமெல்லாம் ஒருதாய் மக்கள்! எனும்
உண்மையினை உணர்ந்து விடில் உறவுக்கேன் தடைகள்
கள்ளமிலா அன்போடு பழகிடலாம் வாரீர்!
காலமெலாம் பகை மறந்து களித்திடலாம் கேளீர்!
வெள்ளமெனப் பெருகிவரும் துயரம் போக்க
வேற்றுமையைக் களைந்திடுவீர் ஐக்கியத்தைக் காக்க!
வள்ளுவனார் உலகப் பொதுமறையில் சொன்ன
வழிகளிலே வாழ்ந்துவகை கொள்வோம் வாரீர்!

தள்ளாத வயதினரும் நோயுற்றோரும்
தமது மதப்பேற்றை எதிர்பார்ப்போர் தாமும்
உள்ளத்தில் பெரும் கவலை கொண்டே வாழ்வார்!
உயிர்காக்க எங்கவர்கள் ஓடிச் செல்வர்
பொட்டிழந்து பூவிழந்து மகளிர் பல்லோர்
புலம்பி தினம் வாழுகின்ற நிலைமை கண்டோம்!
இட்டமொடு தமைக்காத்த பெற்றோர்தம்மை
இழந்து பல குழந்தைகளும் தவிக்கக் கண்டோம்!

என்னைப் போல் பிறரை எண்ணும் தன்மை வேண்டும்! இங்கு
தன்னலமும் பகைமையதும் நீங்க வேண்டும்
இன்னலுறும் மனிதரிடம் இரங்கல் வேண்டும்
நன்னெறியைப் பின்பற்றி ஒழுகல் வேண்டும்
தமக்குள்ளே ஒற்றுமையை வளர்த்தல் வேண்டும்
எந்நாளும் சாந்தி சமாதானத்தோடு
சமத்துவமாய் வாழ வழி காணல் வேண்டும்
கருணையுள்ளம் கொண்டவராய் வாழ்ந்து போவீர்!

திருமதி. வற்சவா.துரைசிங்கம்
பன்னாலை.

## ௯. காலனித்துவப்பார்வையில் பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் நாட்டவன் நகர வாழ்க்கை நாடக எழுத்துரு ஓர் பார்வை.

இலங்கையின் முன்னோடி நவீன நாடக ஆசிரியராக விளங்கும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்து சமூதாய பேச்சு வழக்கு மொழியில் முதன் முதல் நாடகங்களினை படைத்து நாடக உலகில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியவர். சமூகத்தில் உள்ள விடயங்களினை காலத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சமூகப்பிரக்ஞையுடன் நாடக எழுத்துருப் படைப்புக்களை உருவாக்கி நாடக உலகில் மாறுதல்களினை ஏற்படுத்தியவர். இவ்வகையில் பேராசிரியர் அவர்களினால் படைக்கப்பட்ட நாடக எழுத்துருக்களில் காலனித்துவப் பார்வையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாட்டவன் நகரவாழ்க்கை என்னும் எழுத்துருவை நோக்கும் போது முதலில்

1. காலனித்துவம் என்றால் என்ன
2. இலங்கையிற் காலனித்துவம்
3. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள்
4. நாட்டவன் நகர வாழ்க்கை எழுத்துரு போன்ற

விடயங்களின் அடிப்படையில் நோக்குதல் பொருத்தமாக அமையும்.

### காலனித்துவம்

16ம் நூற்றாண்டில் கடல்பயணம் பிரித்தானிய சாம்ராச்சியம் உலகை அரசியலுக்குள் உட்படுத்தியது. காலணித்துவத்திற்கு உட்பட்டநாடு சுதேச தன்மையை இழக்கத்தொடங்கியது. காலணித்துவம் சுதேசியம் கலந்த வேறு பண்பாடு வளரத்தொடங்கியது. இதன் பிற்பாடு காலணித்துவத்திற்கு உட்பட்ட நாடுகள் சுதந்திரம் அடையத் தொடங்கியது. காலணித்துவத்தில் இருந்து விடுபட்ட நாடுகள் அணுகும் கோட்பாடாக பின்காலணித்துவம் அறியப்படுகிறது. இதன் காரணமாக சுதேசிகள் மேலைத்தேய வாதிகள் என்ற பகுப்பை இனம் காணக்கூடியதாக உள்ளது.

ஆட்சியாளர் அடக்கப்பட்டவர் என்பதை பகுத்து விளக்கும் கோட்பாடு இதன் காரணமாக சுதேசிகள் அவர்களுடைய நாடு பண்பாடு என்பவற்றின் சொந்தவரலாறுகளை சுதேசிய மொழியில் எழுதத் தொடங்குகிறார்கள்.(சுதந்திரத்திற்கு பிறகு) மொழி தடைநீக்கலாக அமைகின்றது.

காலணித்துவத்திற்கு பின் உடன்நிகழ்காலத்தை பார்த்தல் கலாச்சார ரீதியான இனம் காணல் படைப்புகளில் வெளிப்படுகிறது. எப்படி மக்கள் காலணித்துவ விதிகளுக்கு அமைவாக செயற்பட்டார்கள் என்பதையும் இணம் காணுகின்றனர்.

**இலங்கையில் காலணித்துவம்**

ஆங்கிலேயர் வருகை பெருந்தோட்ட காலணித்துவத்தை இலங்கையில் ஏற்படுத்தியது. இவர்கள் தமது அரசியல் தளத்தை ஸ்திரப்படுத்துவதற்காக கலாச்சார ஆக்கிரமிப்பில் ஈடுபட்டனர். இதன் பிரதான வெளிப்பாடாக ஆங்கில மொழிக்கல்வி மூலமும் கிறீஸ்தவ மதப்பரம்பல் மூலமும் சுதேசிகளை ஐரோப்பிய மயமாக்கும் முயற்சி இடம்பெற்றது. இவர்கள் ஆங்கில அரசின் நிர்வாக இயந்திரத்தை இயக்குவதற்கு உரிய லிகிதர்களாகவும் ஆங்கிலக்கல்வியை போதிக்கும் ஆசிரியர்களாகவும் இருந்தனர்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மிசனறிப்பாடசாலைகள் ஆங்கிலப்பாடசாலைகள் இதற்கு மிகவும் உதவி வந்தன. மத்திய தரவர்க்கம் எழுச்சி பெற்றது. இதற்கு இவர்கள் காரணமாக இருந்தனர். இவர்கள் உத்தியோகம் தேடி நகர்ப்புறம் சென்றனர். நகர்ப்புறத்திலே வாழவும் விரும்பினார்கள். கலாச்சாரப்பண்பாட்டு சுதேசியத்தன்மையின் சீரழிவின் மையமாக கொழும்பு விளங்கிது. இவ் மத்திய தரவர்க்கத்தினர் தமக்கென ஒரு நாடக வடிவத்தினை தமது வசதிக்கும் வாய்ப்பிற்கும் ஏற்ப நாடியதில் வியப்பில்லை. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய நிறுவனமயம் அரங்கவரலாற்றிலும் நிறுவனங்களின் தோற்றத்திற்கு வித்திட்டது. இதனூடாக ஈழத்திலும் நவீன நாடகம் பிரக்ஞை பூர்வமாக தோற்றம் பெற்று வளர ஆரம்பித்தது.

## பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடகங்கள்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட நாடகங்கள் சில தொகுதிகளாகவும் தனித்தொகுதிகளாகவும் வெளிவந்துள்ளன. நாடகம்(1930) இரு நாடகம் (1952) என்பன தொகுதிகளாக வெளிவந்தன. தனித்தனியாக வெளிவந்தவை மாணிக்கமாலை(1952) சங்கிலி (1956)

உடையார் மிடுக்கு முருகன் திருகுதாளம், நாட்டவன் நகரவாழ்க்கை, என்பனவும் இருநாடகத்தில் பொருளோ பொருள் தவறான எண்ணம் என்பன அடங்குகின்றன.

## கணபதிப்பிள்ளையின் நாடகத்தின் பொதுப்பண்புகள்

1936 முதல் இலங்கைப்பல்கலைக்கழகத்தில் இவரது நாடகங்கள் மேடையேறின. இதற்கு பல்கலைக்கழகம் சிறந்த களமாகியது. இவரது நாடகங்கள் சமூகப்பண்பு கொண்டனவாக காணப்பட்டன. யாழ்ப்பாண மத்தியதர குடும்பப்பிரச்சினைகள் சமூகப்பிரச்சினைகள் என்பவற்றை தனது நாடகங்களில் கொண்டு வந்தார்.

ஆங்கிலப் பொருளாதார சமூக அமைப்பிற்கும் பழையவிவசாயப் பொருளாதார அமைப்புத்தந்த சிந்தனைக்குள் அகப்பட்டிருந்த பழைய வாதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை அங்கதச்சுவையுடன் இவரது நாடகங்கள் வெளிக்கொணர்ந்தன. சரிந்து கொண்டு வந்த நிலமானிய உறவுகளையும் நகர வாழ்க்கை மனித உறவுகளைப் பாதிக்கும் விதத்தினையும் இவரது நாடகங்கள் எடுத்து காட்டின. சமகால அரசியல் பிரச்சினைகளும் சமூகப்பிரச்சினைகளும் இவரது நாடகங்களின் பின்னனிகளாகும்.

ஈழத்து நாடக உலகில் முதலில் யாழ்ப்பாணத்து சாதாரண கதாபாத்திரம் உலாவத்தொடங்கியது. சாதாரண பேச்சு மொழியை பிரக்ஞை பூர்வமாகக் கையாண்டார்.

யாழ்ப்பாணத்தில் பொதுவாக பருத்தித்துறைப்பகுதிக்கு சிறப்பாக உள்ள மொழி நடையை கையாண்டார்.

நிஜபாத்திரங்களான சாதியாசாரம், மரபு, பழமைபேணும் உடையார், விதானையார், மணியகாரர், ஆகியோரையும், கிராமத்து குடியானவன் சீனிக்குட்டி, கிழவி, வள்ளிப்பிள்ளை, தற்பெருமை பேசும் யாழ்ப்பாணத்து பிரக்கிராசிமார், அரசியல் வாதிகளையும் உலாவவிட்டார்.

சமூகமாற்றம் அவர் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருந்தது. பழமையும் புதுமையும் மோதிக்கொண்டிருந்தன. இவரை தமிழ் இயற்பண்பு வாத நாடக உலகின் முன்னோடி என அழைத்தல் பொருந்தும்.

**நாட்டவன் நகர வாழ்க்கை எழுத்துரு.**

இவ் எழுத்துருவை நோக்கின் இதன் மூலம் காலணித்துவத்தின் மையமான கொழும்பையும் சுதேசிய பிரதேசமான கிராமத்தையும் (யாழ்ப்பாணம்) ஒப்பியல் நோக்கில் பார்க்கிறார். நகரத்தையும் கிராமத்தையும் ஒப்பியல் நோக்கில் பார்க்கிறார். பருத்தித்துறையில் ஒரு கிராமம் தும்பளை கதை நிகழும் களமாகியது.

இவ் நாடக எழுத்துருவில் வரும் கதாபாத்திரங்களாக சங்கரப்பிள்ளை(சங்கர் டாக்டர்) , பரிமளசுந்தரி, (சங்கரப்பிள்ளை மனைவி), விசாலாட்சி(சங்கரப்பிள்ளை மச்சாள்), சிதம்பரப்பிள்ளை (சங்கரப்பிள்ளையின் தமையன்), சிவகாமி(சிதம்பரப்பிள்ளை மகள்) வேலுப்பிள்ளை ( சிதம்பரப்பிள்ளை மகன்) வள்ளிப்பிள்ளை (அயல்வீட்டுக்கிழவி), அன்னபூரணம்(அயல்வீட்டுக்காரி), செல்லையா( அயல்வீட்டுக்காரன்) மற்றும் வடிவாம்பிகை, சுந்தரகாந்தி, வல்லி, ஆழ்வார், சின்னவி, கட்டாடி, கார்த்திகேசு,மருந்து கலப்பவர், டாக்குத்தர் மாட்டின், மாணிக்கம் போன்ற கதாபாத்திரங்கள் காணப்படுகின்றன.இவ் எழுத்துருவை வெறுமனே

நாடகப்பகுப்பாய்வாக நோக்காது காலணித்துவத் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

1. காலணித்துவ வாதிகளைப் பின்பற்றுவோர்
2. சுதேசிகள்
3. நகரம், கிராமம்
4. பேச்சுமொழி
5. நடைஉடைபாவணை என்பவற்றை அடிப்படையாக கொண்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

காலனித்துவத்தை பின்பற்றும் கதாபாத்திரங்களாக சங்கரப்பிள்ளை (டாக்டர் சங்கர்) பரிமள சுந்தரி வடிவாம்பிகை , சுந்தரகாந்தி போன்றவற்றை குறிப்பிடலாம்.

**சங்கரப்பிள்ளை** : ஆங்கிலேய கல்விக்கு உட்பட்டவராகவும் லண்டன் சென்று படித்த னுசஆகவும் காணப்படுகின்றார் .படித்து பெரிய நிலைக்கு வந்தவுடன் அன்னிய கலாச்சாரத் தாக்கத்தால் ஊர் உறவுகளை மறந்தவராக காணப்படுகின்றார். ஆடம்பர பகட்டு வாழ்க்கைக்கு உட்பட்டு கொழும்பு பெண் பரிமள சுந்தரியை மணம் முடிக்கிறார். காலணித்துவம் விதைத்து விட்ட போலியான வாழ்க்கைக்கு உட்பட்டவராக காணப்படுகின்றார். ஆங்கில வைத்திய முறை செய்பவராகவும் ஆங்கிலத்தில் பேசுபவராகவும் காணப்படுகின்றார்.

உ-ம் Attendan Send him out

**பரிமள சுந்தரி** : நகர்ப்புற காலனித்துவ சிந்தனைக்கு உட்பட்ட கலாச்சாரச் சிந்தனையுடன் கொழும்பில் வசிப்பவளாக காணப்படுகின்றாள். போலியான ஆடம்பர வாழ்வை விரும்புவளாகவும் சுதேசிகளை கிண்டல் செய்பவளாகவும் மேலைத்தேய பண்பாடு கலாச்சாரம் தான் நாகரீகம் என கருதுபவளாகவும் காணப்படுகின்றாள். மாதத்துக்கு ஒரு கார் கிழமைக்கொரு சாரி, றெனிஸ்ஜாக்கெட், கெக்றெயில் பாட்டியல் சோசலுகள் ,லேடிஸ் லீக்குகள், என்று திரிபவளாக காணப்படுகின்றாள். இதனூடாக சுதேசிய வாதிகளை கிண்டல் செய்யும் தன்மை மதியாத்தன்மை காணப்படுகிறதது.

உ-ம்: நாட்டவத்தியலை மரிபண்ணிக்கொண்டிருக்கிறது. கறட்டியூர். அங்கையாரும் சிவிலை செட்டான ஆக்களும் இருப்பினமே. பணங்கொட்டையள். அவையின்ர பெண்டுகள் ஏன் பேசுவான் ? உடுக்கத்தெரியாது. மனிதரோட பேசத்தெரியாது.

வள்ளிப்பிள்ளை சின்னவி உரையாடல் ஊடாக நடை உடை பாவனை காட்டப்படுகிறது.
வள்ளி : .... பொம்பிளை வடிவாமோடா?
சின்னவி... உதுகலெலல்லாம் வடிவில்லை எங்கடை பெட்டயளின்ர கால் தூசுக்கும் பெறாது. புதுப்புது மொடியாத்திரியுது. மோடியில மயங்கித்தான் உவங்கள் போய்விழுறது. சின்னவி: பெடியளைப்போல கிறில் வெட்டிக்கொண்டு ஒரு அலவல் சீலையும் கட்டிக்கொண்டு கார் விட்டுத்திரியிறாவாம். ஆரைக்கண்டாலும் இங்கிலீஸ் தான் தமிழ் இல்லை.

வள்ளி : நாளைக்கொரு காற்சட்டையும் போட்டுக்கொண்டு திரிவாவாக்கும். என்பவற்றின் ஊடாக காலணித்துவதாக்கத்தின் நடைஉடை பாவனை காட்டப்படுகிறது.

இவருடைய பேச்சு மொழி உரையாடலிலும் காலனித்துவ தாக்கம் மிகுந்து காணப்படுகிறது. ஆங்கில உரையாடல் ஆங்கிலம் தமிழ் கலந்த உரையாடல்.

உ-ம்: 7 8 9 4 Please Hollow It is 7 8 9 4, Hello Darling என்ன வேலை கடுமையோ இந்த சான்சை விடக்கூடாது. எங்கட ஸ்ரேற்றற்றை பார்க்க வேண்டாமே

சாதரண கடைகளில் பொருட்களை வேண்டாது Supper market இல் அந்தஸ்து கருதி பொருட்களை வாங்கல் பொருட்களின் பொருட் கொள்வனவில் செக் பயன்படுத்தல் உ-ம்: எங்கட ஸ்றேற்றஸ்சுக்கு வேற இடத்தில என்னெண்டு போய் வாங்குதல். டின்னர் செற்றும் வாங்கினான்.

காட்ஸ் விளையாடுதல். English Daily News வாசித்தலை குறிக்கலாம். சுதேசிய கலாச்சாரத்துக்கு மாறாக விவாகரத்து வேண்டுபவளாகவும் காணப்படுகின்றாள். காலணித்துவத்தின் அடிமைப்பதவியான கவுன்சிலார் பதவிக்கு கணவரை போட்டி போடும்படி கூறுதல்.

வடிவாம்பிகை சுந்தரகாந்தி : பரிமளத்தின் தோழிகள் கொழும்பு நகரில் வசிப்பவர்கள். காலணித்துவ நாகரீகத்தையே பெரிதாக நினைப்பவர்கள் ஆங்கிலம் பேசுபவராக காணப்படுகின்றனர்.

மேற்கூறியவை காலனித்துவத்திற்கு உட்பட்ட பாத்திரங்களாக காணப்படுகின்றது. இவர்களுடைய வீட்டு தளபாடங்கள் மேலைத்தேய காலனித்துவத்தை பின்பற்றுவனவாக காணப்படுகின்றன.

**சுதேசிய பாத்திரங்களான கிராமத்து பாத்திரங்களை நோக்குவோம்**

•

**சிதம்பரப்பிள்ளை:** பழமைவாத விவசாய சிந்தனையில் உள்ளவராகவும் வேளாண்மையை பிரதான தொழிலாக கொண்டவராகவும் காணப்படுகின்றார். கல்வி கற்றாலும் கிராமத்து ஊர் சூழல் பண்பாட்டுடன் வாழ்பவராகவும் காணப்படுகின்றார். இவருடைய வீட்டு அமைப்பு பயன்படுத்தும் தளபாட அமைப்பு சுதேசிய தன்மையுடன் காணப்படுகின்றது. வந்தவர்களை வரவேற்பதற்காக வெற்றிலை தட்டம் கொடுக்கும் பண்பாடு காணப்படுகின்றது.

**வேலுப்பிள்ளை** : சிதம்பரப்பிள்ளை மகன் விவசாயம் செய்பவராக காணப்படுகின்றார். செல்லையா ஊர் நடப்பு காரணாக காணப்படுகின்றார். இவருடைய வீட்டு அமைப்பு சுதேசிய தன்மையை காட்டுகின்றது. விருந்தினர் தங்குவதற்கு வீட்டுக்கு பக்கத்தில் மால் அமைக்கப்பட்டுள்ளது.

வள்ளியார் மரநிழலில் பனங்காய்க்காய் விற்றல். மண் சுங்கான் பிடித்தல். அன்னபூரணம் சருவக்குடம் பயன்படுத்தல். சின்னவி பீலிப்பட்டையுடன் தோட்டத்துக்கு போதல் வேலுப்பிள்ளை பட்டை நார்க்கட்டு என்பவற்றை குறிப்பிடுதல்.

**விசாலாட்சி:** யாழ்ப்பாண மண்வாசனையில் வாழ்பவராக காணப்படுகிறாள். ஒருவரை நினைத்தால் அவரைத்தவிர வேறொருவரை மணம் முடிப்பதில்லை என்ற பிடிவாதத்துடன் வாழ்பவர்.

**கட்டாடி:** சுதேசிய சலவைத்தொழிலாளி. சாதிய வகுப்பை காட்டுகிறது. வல்லி சாதியத்தில் தாழ்ந்த பாத்திரமாக காணப்படுகின்றார். மாராப்புடன் வருதல் உடையமைப்பை காட்டுகிறது. செட்டியார் பாத்திரம் இந்திய வம்சாவழியாகவும் மஹுமாத்கனி முஸ்லீம் கதாபாத்திரமாகவும் குறிக்கப்படுகின்றது. இவர்கள் தங்களுக்குரிய சுதேச மொழிநடையை கொண்டவராக காணப்படுகின்றனர்.

சுதேசிய பாத்திரங்களுக்குரிய உரைநடை உரையாடல் அமைப்பு வடமராச்சிக்கே உரிய மொழிநடையை கொண்டு விளங்குகின்றது. இவ் உரையாடல் ஊடாக மண்வாசனை சுதேசத்தன்மை காட்டப்படுகின்றது.

அடுத்து காலணித்துவத்தின் தாக்கத்தால் வந்த உயர்பதவிகளை குறிப்பிடலாம். பிரக்கிராசியார் வேலை கவுன்சில் தெரிவு கச்சேரி நிர்வாக மையம். வோட் பண்ணும் முறை உ-ம்: கவுன்சில் தெரிவுக்கு சிவத்தை கடுதாசி பச்சை கடுதாதசிக்கு புள்ளடி என்ற போலியான ஜனநாயகம் காட்டப்படுகின்றது. நிர்வாக ஆட்சி மையம் கொழும்பு காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தவர் தெரிந்து கொண்டே போலியான பண்புகளை ஏற்றுக்கொள்ளும் பண்பு கூறப்படுகின்றது. உ-ம் : கந்தர்-- யாழ்ப்பாணத்தான் கெட்டிக்காரனென்டு தனக்குள் சொல்லிக்கொண்டு இருக்கிறது. மற்றவன் வந்து புலுடாப்போட்டு தன்னை விளையாடிக்கொண்டு போறதை நினைக்கிறேலை.

உணவு வகைகள் கூறப்படுகின்றது. எமது பண்பாட்டிற்குரிய உணவு வகைகளாக தினை, சாமி, பனங்காய்பணியாரம் , ஒடியள்பிட்டு, பினாட்டு போன்றன கூறப்படுகின்றது. எமது சுதேசிய உணவுகளை விடுத்து மேலைத்தேய உணவுகளை உண்பதால் வரும் கேடு காட்டப்படுகிறது. உ-ம்: இப்ப சம்பா சாப்பிட்டு சலரோகம் வருது என்ற உரையாடல் ஊடாக அறியலாம். சுதேசிய உணவு காலணித்துவம் அறிமுகப்படுத்திய சம்பா அரிசி இதனால் வரும் விளைவு காட்டப்படுகின்றது.

குடிவகைகள் ஊரில் கள்ளு காலனித்துவ தாக்கம் சாராயத்தையும் குறிப்பிடகின்றது. உ-ம்: கவுன்சில் தெரிவுக்கு புள்ளடி போட சாராயப் போத்தல் வழங்குதல். உறவு முறைகளை சொல்லி அழைத்தல் உ-ம் : சீனியம்மா சீனியப்பு போன்ற உறவு முறைகளை குறிப்பிடலாம்.

தொழில் முறைமைகள் காட்டப்படுகின்றது. சுதேசிய தொழிலான விவசாயம் காட்டப்படுகின்றது. உ-ம்: சிதம்பரப்பிள்ளை — மோனை பரந்தனிலை இந்த முறை எப்பிடி வேளாண்மை எங்கட வயல் ஏதும் விளைஞ்சிருக்குதோ, கந்தர் -- வெட்டு விதைப்பு காலம் பாருங்கோ மூச்சு விடமுடியாத வேலைபாருங்கோ.

வைத்திய முறையாக சுதேசிய தமிழ் வைத்தியமும் காலணித்தவ ஆங்கில வைத்தியமும் காட்டப்படகின்றது. சின்னவி ஆழ்வார் உரையாடலில் மண்டி அடைஞ்சு வயித்து குத்து மானிப்பாய் ஆசுப்பத்திரிக்கு போனான். வயிறு வெட்டி சுகப்படுத்துறம் எண்டவை. ஆழ்வார்-- கோழி இறைச்சியும் ஒடியல் கூழும் குடிச்சால் தீரும் என்பதன் ஊடாக நாட்டு வைத்தியம் காலணித்தவ வைத்தியமுறை என்பன கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தவரது நம்பிக்கை காட்டப்படுகின்றது. நாவுத்து பார்க்கிறது. உ-ம்: நாவுறு பார்த்த அடுப்பு சாம்பலை பிள்ளை நெற்றியில் போடுதல். வைரவருக்கு தலைமாட்டில் அரைரூபா முடிஞ்சு விடுதல். நோயை வைத்தியரிடம் காட்டுவதற்கு நாள் பாாத்தல் என்பனவும் சமய நம்பிக்கையின் சின்னமாக சாமியார் பாத்திரம் காட்டப்படகின்றது. கிரகநிலை கைரேகை பார்த்தல் இதை காலனித்துவத்தின் தாக்கத்ததிற்கு உட்பட்ட பரிமள சுந்தரியும் ஏற்கும் தன்மை காட்டப்படுகின்றது.

சீதன முறைமை பிள்ளை குட்டிக்கு சீதனம் கொடுத்து உத்தியோகத்தர்மாரை கட்டுதல். சீதனமாக காசு கல்வீடு தரும்படி கேட்டல் என்பன காலணித்துவ தாக்கத்தின் நிலைமைகளை காட்டுகின்றது. சுதேசிய நம்பிக்கைகளில் ஒன்றான விதியை நம்புதல் காட்டப்படுகின்றது. விசாலாட்சி உரையாடலில் “ நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம் விதியின்பயன் எண்டது போல” என கூறப்படுகிறது.

காலனித்துவ தாக்கத்தின் பிரிப்பு சீமை உள்ளூர் என்ற பிரிப்பை காட்டுகிறது. தபால் எழுதுதல் தந்தி அடித்தல் தொலைபேசியில் கதைத்தல் காட்டப்படுகின்றது. காலணித்து வளர்ச்சி வேட்டிஉடுத்தவருக்கு மரியாதை இல்லை.

காற்சட்டை போட்டவரை கதிரையில் இருத்தல். துரை எண்டு அழைத்தல் போன்ற நிலைமைகள் காட்டப்படுகின்றது.

இவ்வாறு நோக்கும் போது பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையினுடைய நாட்டவன் நகர வாழ்க்கை என்னும் நாடக எழுத்துருவானது கலனித்துவ உடனடி நிலைமைகளை புலப்படுத்துவனவாக விளங்குகின்ற தன்மையினை அவதானிக்கலாம்.

எஸ். ரி. குமரன்
இயக்குனர்.

## 10. நாட்டார் கலைகள் ஒரு நோக்கு.

மனிதன் நாகரிகமடைய ஆரம்பிப்பதற்கு முன்னரே கலைச் செயற்ப்பாடுகளில் ஈடுபட்டான் என்பதினை வரலாற்று தடங்களில் இருந்தும் ஆய்வாளர்களது ஆய்வுகளில் இருந்தும் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.மனிதர்கள் தம்மிடையே உணர்வியல் ரீதியிலான கருத்துக்களினை பகிர்ந்து கொள்வதற்கும் தமது செய்திகளினை வெளிப்படுத்திக கொள்வதற்குமாக பயன்படுத்திக்கொண்ட ஊடகங்கள் கலைகளாகும்.

இதனடிப்படையில் ஆதிகால மனிதன் தனது உணர்வுகளினை ஆரம்பத்தில் ஓவியங்களின் வாயிலாக வெளிப்படுத்தியதாக குறிப்பிடப்படுகின்றது. அதாவது வேட்டையாடச்சென்றபோது கொடிய விலங்குகளிடம் அகப்பட்டுகொள்வதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்ட போது அவற்றில் இருந்து தப்பி வந்த மனிதர்கள் தாம் பட்ட துன்பங்களினையும் தாம் எதிர்கொண்ட இடர்பாடுகளினையும் தமது சக குழுக்களிற்கு தெரிவிப்பதற்கும் தமது உணர்வினை வெளிப்படுத்துவதற்கும் குறிப்பாக தமது பய உணர்வினை வெளிப்படுத்திக்கொள்வதற்கும் ஓவியங்களினை வடிகாலகக்கொண்டிருந்தனர். இதனை மெய்ப்பிக்கும் வகையில் இன்று ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட குகை ஓவியங்கள் சான்றாகின்றன.

இவ்வகையில் ஒவ்வொரு கலைகளும் தமது உணர்வுபகிர்தலிற்கும் தமது நம்பிக்கை முறைமைக்கும் வாழ்வியல் எத்தனங்களிற்கும் ஏற்ற வகையிலும் கலைகள் வடிமைக்கப்பட்டதுடன் புதிய புதிய வடிவங்களும் பிரசவிக்கபப்ட்டன.

கலைகளின் அரசி எனக்குறிப்பிடப்படுகின்ற நாடகக்கலையின் தோற்றம் பற்றி பல்வேறு அறிஞர்களும் பல்வேறு பட்ட கருத்து நிலைகளினை குறிப்பிடுப்படுகின்றனர். அவற்றில் ஒரு கருத்து நிலையாக வேட்டை சடங்கில் இருந்து தோற்றம் பெற்றது எனும் கருத்து காணப்படுகின்றது.

**அச்சடங்கினை பின்வருமாறு குறிப்பிட்டு கொள்ள முடியும்.**

வேட்டைக்கு செல்லும் போது கொடிய விலங்குகளிடம் தமது சக பாடிகள் அகப்பட்டுக்கொண்டமையினால் கொடிய விலங்குளிடம் இருந்து எவ்வாறு தப்பித்து கொள்வதெனவும் வேட்டையின் போது பல விலங்குகளினை எவ்வாறு வேட்டையாடி கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் முன் ஆயத்தமான சில செயற்பாடுகளினை மேற்கொண்டனர்.

அவற்றில் குறிப்பாக கொடிய விலங்குகள் தம்மை தாக்க வருகின்ற போது அவற்றினை எவ்வாறு எதிர்கொண்டு அவற்றில் இருந்து தப்பித்து கொள்வதுடன் வேட்டையில் பல விலங்குகளினை வேட்டையாடிக்கொள்வதற்கான முன் ஆயத்தமான செயற்ப்பாடாக இது அமைந்தமையினால் வேட்டையில் பல விலங்குகளினை பெற்றுக்கொண்டதுடன் கொடிய விலங்குகளின் தாக்கத்தில் இருந்தும் தம்மை இயன்றவரையில் பாதுகாத்துக்கொண்டனர்.இத்தகைய செயற்பபாட்டிற்கு தாம் மேற்கொண்ட செயற்பாடு என்பதினை நம்பிய மனிதர்கள் வேட்டையின் பின்னரும் இச்செயற்ப்பாட்டினை மேற்க கொண்டனர். இது தொடர் செயற்பாடாக மக்களிடையே பரவலாக ஆரம்பித்தது.இத்தகைய நம்பிக்கைகளில் இருந்து நாடக செயற்பாடுகள் உருவானதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய நம்பிக்கையான விடயங்கள் கலைகளின் பிறப்பியலுக்கான அடிப்படையாக அமைந்தன.

கலைகள் என்பது பொழுது போக்கிற்காகமட்டுமன்றி சமூகத்தின், வாழ்வியல் கூறுகளினை வெளிக்கொணர்கையிலும் பாரம்பரியம், விழுமியம், போன்றவற்றினை வெளிப்படுத்துவதிலும் முனைப்புக்காட்டுகின்றன.

ஒருவர் முன்பு அநுபவித்த ஓர் உணர்வைத் தன் உள்ளத்தில் மீண்டும் எழுப்பி அசைவுகள் , கோடுகள், வர்ணங்கள் ,ஒலிகள், அல்லது சொல் வடிவத்தின் மூலம் அந்த உணர்வை உணரும் படி செய்ய வேண்டும் இதுவே கலையின் செயலாகும் என டால்ராய் எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

எமது முன்னோர்கள் தமது நம்பிக்கைகள் எண்ணங்கள் , சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றினை கலைகளின் மூலம் வெளிப்படுத்தினர்.

இதனடிப்படையில் நோக்கும் போது ஒவ்வொரு இனத்திற்கும் தமது தனித்துவமான அடையாளங்கள் என பலவற்றினை கொண்டியங்கும். அடிப்படையில் அவ் இனங்கள் தனித்துவமாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழில் நுட்பத்தின் வளர்ச்சியும் இயந்திரமயமான வாழ்வு முறையும் மனிதர்களது வாழ்வு முறையில் மாற்றங்களினையும் கலையியல் மாற்றங்களினை கொண்டுள்ளபோதிலும் ஆரம்பகால கலைகள் முதன்மை பெறுகின்றன.

நாட்டார் கலைகள் என பழங்காலத்து கலைகள் அழைக்கப்பட்டன. பழங்காலத்து கலைகள் என அழைக்கப்ட்டமைக்கான காரணங்களாக பழைமையான கலைகளாக காணப்பட்மையினால் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

நாட்டார் கலைகள் பற்றி ஜோன்ஸ் பாலிஸ் எனும் அறிஞர் குறிப்பிடும் போது உலகில் மனித இனம் தோன்றிய நாளையே நாட்டார் வழக்கியலின் துவக்க நாளாக குறிப்பிடலாம் இதன் தெளிவான காலம் பற்றி அறிந்து கொள்ள முடியாமையினாலே பழங்காலத்து படைப்புக்கள் என குறிப்பிடுகின்றனர் என்கின்றார்.

நாடடுப்புற மக்கள் தமது உணர்வுகளினை நகை ,காதல், வீரம் ,சோகம், அச்சம்,விருப்பு வெறுப்பு போன்ற உணர்வகளினுடாக வெளிப்படுத்தினர்.

இவ் நாட்டுப்புற மக்கள் குழு நிலைப்பாரம்பரியங்களினை கொண்டிருந்தனர்.காவடியாட்டம் ,ஒயிலாட்டம், கரகாட்டம் , கோலாட்டம், கும்மி போன்ற பலவற்றினை குறிப்பிடலாம். மக்கள் தமது வேண்டுதல்களினையும் தமது உள்ளத்து உணர்வுகளினையும் மதரீதியிலான வெளிப்படுத்தல்களின் மூலம் கடவுளர்களிடையே பக்தி பூர்வமாக வெளிப்படுத்த தலைப்பட்டனர் அவ்வெளிப்படுத்தல்கள் மேற்படி கலைகளுக்கான பிறப்பியலாக காணப்படுகின்றன என்பதினை அறியக்கூடியதாக உள்ள வகையில் காவடியாட்டம் எனும் கலை வடிவம் தொடர்பாக பின்வருமாறு நோக்க முடியும்.

**காவடியாட்டம்**

இக்கலைவடிவமானது முருகக்கடவுளருடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. தமது நேர்த்திக்கடனை தீர்த்துக்கொள்ளும் முகமாக காவடியாட்டத்தினை மேற்க்கொள்வதாக குறிப்பிடப்படுகின்றது. முருக பக்தர்கள் யாத்திரை செல்லும் போது பல மைல் தூரங்கள் நடக்க வேண்டியிருக்கும் அவ் வேளை முருகப்பெருமானது புகழினை பாடிய வண்ணம் செல்வர் முருகக்கடவுளுக்கு காவடி எடுப்பதற்கான ஐதீகக் கதையொன்று காணப்படுகின்றது. அவற்றினை பின்வருமாறு நோக்கலாம்.

தமிழ் கடவுளான முருகப்பெருமானுக்கு செய்யப்படுகின்ற முக்கியமான வேண்டுதல்களில் ஒன்றாக இது விளங்குகின்றது. இக்காவடி எடுப்பதற்கான காரணமாக அகஸ்திய முனிவர் சீடர்களில் ஒருவனான இடும்பனை அழைத்து தனது வழிபாட்டிற்காக கயிலை சென்று அங்கு முருகனுக்கு கந்த மலையில் உள்ள சிவசக்தி கொருபனான சிவகிரி, சக்தி கிரி எனும் சிகரங்களையும் கொண்டுவரும்படி கூறியதாகவும் அகஸ்தியரின் கட்டளைக்கமைய கயிலை சென்று அவ்விரு மலைகளையும் இருபுறமும் தொங்க காவடியாக கட்டி கொண்டுவந்ததாகவும் அவ் வேளை முருகன் இவ்விருகிரிகளையும் நிலைபெறச்செய்யவும் இடும்பனுக்கு அருளவும் விரும்பி ஒரு திருவிளையாடலை நிகழ்த்தியதாகவும் இடும்பன் வழி தெரியாமல் திகைத்த போது முருகன் குதிரை மேல் செல்லும் அரசனைப்போன்று தோன்றி இடும்பனை ஆவினன் குடிக்கு அழைத்து சென்று அங்கு ஓய்வு எடுக்கும் படி குறிப்பிட்டதாகவும் அதற்கேற்ப்ப இடும்பன் காவடியை இறக்கி வைத்துவிட்டு ஓய்வெடுத்துவிட்டு புறப்படும்போது காவடியினை தூக்க முடியாமல் திண்டாடியதாகவும் அவ்வேளை ஏன் தூக்க முடியாமல் உள்ளது

என சிந்தித்து பார்த்த போது சிவகிரியின் மேல் சிறுவன் ஒருவன் கோவணாண்டியாக கையில் தடியுடன் நிற்பதை கண்டான்.இடும்பனும் சிறுவனை மலையில் இருந்து இறங்கும் படி வேண்டினான். ஆனால் அச்சிறுவனோ இந்த மலை எனக்கே சொந்தம் எனக்குறிப்பிட்டதாகவும் அவ் வேளை கோபம் கொண்ட இடும்பன் அச்சிறுவனை தாக்க முயன்ற போது இடும்பன் வேரற்ற மரம் போல சரிந்து கீழேவிழுந்ததாகவும் இதை கண்ட அகஸ்தியர் இடும்பன் மனைவியுடன் சென்று முருகப்பெருமானிடம் வேண்டஇடும்பனுக்கு அருளாசி புரிந்ததுடன் இடும்பனை தனது காவல் தெய்வமாக நியமித்ததாகவும் அன்றுமுதல் காவடி எடுக்கும் வழக்கம் ஆரம்பித்து விட்டதாகவும் ஐதீக ரீதியான கருத்தினை கூறுகின்றனர்.

இவற்றினை தாண்டி நோக்குகின்ற போது யாத்திரையாக செல்லுகின்ற தூரம் சுமக்கின்ற பாரம் என்பன ஆன்மீகம் எனும் தளத்திலும் பக்திபூர்வமாக செயற்படும் போது எளிமையாக காணப்படுவதுடன் இத்தகைய நேர்த்திக்கடன்களினை ஆற்றுகின்ற போது அம்மக்கள் வாழ்வில் தமது பிரச்சினைகளினை எளிதாக அணுகிக் கொள்ள முடியும் என்பதினை உளவியல் ரீதியான அணுகுதுறையின்பால் குறிப்பிட்டு கொள்ள முடியும்

இத்தகைய நம்பிக்கையின்பால் இக் காவடியாட்டம் எனும் கலை வடிவத்தின் தோற்றத்தினை குறிப்பிட்டாலும் காலப்போக்கில் அதன் தன்மையிலும் வெளிப்பாட்டு வடிவங்களிலும் மாற்றங்களினை அச்சமூகங்களே ஏற்படுத்திக் கொண்டன. இக்காவடியாட்டத்தினை ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் காலப்போக்கில் ஆடியதுடன் வெறுமனே கோவில்களில் நேர்த்திக்காக ஆடுகின்ற முறைமையாக மட்டு மன்றி பழகி கலைத்துவத்துடன் நிகழ்வுகளிற்காக ஆடுகின்ற சூழ்நிலைகளும் பிற்காலத்தில் ஏற்ப்படுத்தப்பட்டு இக் கலை வளர்சியடைந்ததது ஆயினும் இன்றும்குறிப்பாக முருகன் கோவில்களிலும் பிற கோவில்களிலும் மிகவும் பக்தி பூர்வமான வகையில் இடம் பெற்று வருகின்றன.

காவடி எனும் சொல்லானது அதன் பொருள் கொள்கையில் காவுதடி என வகுத்து கொள்கின்றனர். காவு என்பதினை சுமத்தல் என பொருள்கொள்கின்றனர். சுமத்தல் என்பது தோற்சுமையினை குறித்தாலும் நேர்திக்காக மேற்கொள்ப்படுவதினையே குறித்து நிற்கின்றது.சமயத்தோடும் நம்பிக்கையுடனும் தொடர்புடையதான இக்கலை வடிவமானது பல்வேறு வகைப்பாட்டினை உடையதாக விளங்குகின்றது.

இப்பின்னனியில் கவடியாட்டத்தினை அதன் நோக்கம் , ஆடப்படுகின்ற முறைமை என்பவற்றின் அடிப்படையில் பல் வேறு பெயர் கொண்டு அழைக்கின்றனர்.அவற்றினை பின்வருமாறு நோக்க முடியும். அன்னக்காவடி ,பறவைக்காவடி,பன்னீர்க்காவடி.˙. பால்காவடி,செடில்காவடி,ஆட்டக்காவடி,தூக்குக்காவடி,பறவை க்காவடி என்பனவாக விளங்குகின்றன.

பாற்காவடி பெரும்பாலும் சிறுவர் அல்லது சிறமியர்கள் எடுப்பர்.இக்காவடி ஆடப்படுவதில்லை மாறாக தோளிலே சுமந்த படி சென்று நேர்த்திக்கடனை முடித்துக்கொள்வதாக அமையும் செடிற் காவடி என்பது வெள்ளியாற் செய்யப்பட்ட செடில்களை பக்தர்களின் முதுகில் குத்தி கொக்ககளின் அடியில் உள்ள நூல்களினை ஒன்றாக சேர்த்து ஒருவர் பிடித்திழுக்க காவடி எடுக்கும் பக்தர் காவடியினை தோளில் சுமந்தபடி ஆடுவார் .தூக்குக்காவடி என்பது தூக்குத்தண்டனை பெற்ற ஒருவர் மேல் முறையீடு செய்து விடுதலை பெற்ற போது நேர்த்திக்கடனுக்காக ஆடப்பட்டதாக குறிபிடப்படுகின்றது. பறவைக்காவடி காவடி எடுப்பவரை படுக்க வைத்து தோள் ,தொடை ,கால் ஆகிய ஆறு இடங்களில் முட்களை கெழுவி முள்ளின அடியில் உள்ள கயிறுகளை ஒன்றாக இணைத்து கட்டித் தொங்க விடுவர். இவர் தொங்கும் போது பறவை பறப்பதினைப் போன்று காணப்படுவதினால் இதனை பறவைக்காவடி என அழைக்கப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

கூத்துக்காவடி என்பது பிற்காலத்தில் வந்து சேர்ந்த வடிவமாக கொள்ளப்படுகின்றது.இது ஆட்டக்காவடி முறைமையில் இருந்து வேறுபாடு உடையதாக காணப்படுகின்றது.இது பல தாளக்கட்டுகளிற்கேற்ப ஆடப்படுகின்றன.

இவ்வகையில் தனித்துவமானவையாக இக்கலைகள் விளங்குவதினையும் நம்பிக்கையும் சமயத்தோடினைந்த செயற்பாடாகவும் காணப்படுகின்றமையினால் எத்தகைய தளங்களிலும், சூழ்நிலையிலும் இவை அழியாது காணப்படுகின்றன.

காவடி எனும் கலைவடிவம் எத்துணை செல்வாக்கினை நாட்டார் கலைகளில் முதன்மையானதாக விளங்ககின்றதோ அவ்வகையில் கரகாட்டம் எனும் கலைவடிவமும் முதன்மையானதாக காணப்படுகின்றது. அக்கலைவடிவம் சமூகவியல் பெறுமானத்தில் ஏற்படுத்திய தாக்கம் தற்காலத்தில் அது கொண்டுள்ள தாக்கம் என்பனவற்றினை நோக்கும் போது அக்கலைவடிவங்களின் உயிர்ப்பினை கண்டு கொள்ளக்கூடியதாகவுள்ளது. நம்பிக்கைகளின் அடிப்படையில் வெயற்ப்படுத்தப்பட்ட கலைவடிவங்கள் பெரும்பாலும் மதவிழுமியங்களினையும் கடவுளருக்காக மேற்கொள்ளப்படுகின்ற நேர்த்திகளின் அடிப்படையிலும் அம்மக்களது உளநிவர்த்தியினையும் அடிப்படையாக கொண்ட வகையில் இக்கலைவடிவத்தின் எழுச்சியினையும் உயிர்ப்புடன் கூடிய வெளிப்பாட்டினையும் அறிந்து கொள்ள முடியும் என்பது எதார்த்தமாகும்.

மக்களது வாழ்வியல் கடவுள் நம்பிக்கை என்பது பிரிக்க முடியதா கூறாகஇருந்தன. அக்கடவுளருக்கு தம் வாழ்வு சிறக்கவேண்டும் தாம் எத்தகைய துன்பங்களில் இருந்தும் தம்மை காப்பாற்றி கொள்வதற்காகவும் பல்வேறு செயற்ப்பாடுகளினை மேற்க்கொண்டனர். அத்தகைய செயற்ப்பாடுகள் இக்கலைகளில் உயிர்பிக்கான வாய்ப்பினை எற்படுத்தியது.

இப்பின்னனியில் மாரியம்மன் எனும் பெண்தெய்வத்திற்கான நேர்த்திக்கடன்களும் அவற்றிக்கான செயற்ப்பாடுகளும் கரகாட்டம் எனும் கலைவடிவத்தில் முதன்மை பெறுகின்றது. தொற்று நோய்,பஞ்சம்போன்றவற்றினை நீக்கும் பொருட்டு மேற்க்கொள்ளப்பட்ட செயற்ப்பாடுகள் ஆடல் முறைகள் பிற்க்காலத்தில் தொழில் முறைக்கலைகளாக மாற்றமடைந்தன. கரகத்தில் புனிதநீர் எடுத்தவரப்பட்டு உழவர்கள் ஏர்மங்கல விழாவின் போது எடுத்து செல்லப்பட்டு

ஒண்ணகரகமடி எங்கமுத்துமாரி
ஒசந்த கரகமடி எங்க முத்துமாரி
எனத்தொடங்கி
ஒன்பதாங்கரகமடி எங்க முத்தமாரி
ஒலகம் செழிக்க வேனும் எங்க முத்துமாரி என பாடல்கள் பாடப்படும்.

கரகாட்ட முறையில் பின்வருமாறு நோக்கப்படுகின்றது
சக்திக்கரகம்
ஆடுகரம்
சக்திக்கரகம் பக்தியுடன் எடுக்கப்படும் கரகமாகும் ஆடவர்மட்டுமே இக்கரகத்தினை எடுப்பபர்.அதே வேளை ஆடுகரகமானது தொழில்முறைக்கலைஞர்களினால் நிகழ்த்திக் கொள்வதாக காணப்படுகின்றது. ஆடுகரகமானது சடங்குத்தன்மைகளிலிருந்து விடுவித்து அபிநயங்களில் முதன்மைப்படுத்தி தாம் மகிழவும் பிறர் மகிழவும் கூடியவகையில் ஆடு கரகம் உருவாக்கப்பட்டது.கரகவடிவமைப்பானது நடுத்தர அளவுள்ள செம்பு அல்லது மட்குடம் தெரிவு செய்யப்பட்டு அக்குடம் அலங்கரிக்கப்பட்டு குடத்தின் மேற்புறத்தில் பூவேலைப்பாட்டுடன் கூடியவகையிலான மூடி போன்ற அமைப்பு

கரகாட்டம் மூவகை ஆட்ட நிலைமைகளினை உடையதாக காணப்படுகின்றது.

தொடக்க நிலை

வேக நிலை

அதிவேக நிலை

தொடக்க நிலை என்பது ஆயத்த நிலையும் ஆரம்ப நிலையுமாகும் நையாண்டி மேள இசையோடு ஏனைய தாள வாத்தியக்காரர்கள் தத்தம் இசை பொருந்துகின்றதா என வாசித்து பார்க்க கரகக்காரரும் மெல்ல ஆடி கரகத்தை தலையில் சீராக வைத்துக்கொள்வர். இதன்பின் படிப்படியாக இசை வளர்ந்து கொண்டு செல்ல ஆட்டத்தின் வேகமும் வளர்ந்து கொண்டே செல்லும்.

வேக நிலையில் தாள, சுருதிக்கும் வாசிக்கும் இசைக்கும் எற்ப்ப எவ்வித வேறுபாடுகளும் தெரியாமல் கலைஞர்கள் ஆடுவர் இதனை சமநிலை எனக்குறிப்பிடுவர்.அதி வேக நிலை என்பது பாம்பின் சிற்றத்தினை போன்று ஜதி முறியாமல் தாளம் முறியாமல் பம்பரம் போல சூழன்று ஆடுவதினை குறிக்கும் இவ்வாட்டத்தில் கலைஞர்கள் ஓய்வெடுத்துக்கொள்ளும் முகமாக கோமாளி எனும் பாத்திரம் வந்து உரையாடல்களினை மேற்க்கொள்வான் இவ்வேளையினை பயன்படுத்தி நடிகர்கள் ஓய்வெடுத்துக்கொள்வார்கள். இவ்வகையில் கரகாட்டமானது முதன்மைப்படுத்தப்படுவனவாக காணப்படுகின்றது. எமது வாழ்வியலில் நாட்டார் கலைகள் காத்திரமானவையாக காணப்படுகின்றன.

## 11. வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்களின்

வரலாறு.

ஆரம்ப காலத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் நான்கு
சபைகள் அமைந்திருந்தன.அவையாவன

காங்கேசன்துறை (பட்டின சபை)
தெல்லிப்பழை (கிராம சபை)
மல்லாகம் (கிராம சபை)
மயிலிட்டி (கிராம சபை)1980ம் ஆண்டு யாழ் மாவட்ட சபை உதயமாகியது

அப்போது யாழ்ப்பாணத்திலுள்ள கிராம, பட்டின நகரசபைகள் யாவும்(53)ம் அதன் உப அலுவலகங்களாக மாறியது. பின்னர் 1990ம் ஆண்டு திரும்பவும் அவையாவும் ஒவ்வோர் பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒரு பிரதேச சபை உருவாகியது. எமது பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்கள் எல்லாவற்றினதும் வரலாற்றை ஆராய்வோம்.1. அளவெட்டி பொதுசன நூலகம்மல்லாகம் கிராமசபையானது அளவெட்டி மல்லாகம் ஆகிய இரு கிராமங்களையும் உள்ளடக்கியது.இச் சபையின் நீண்டகால வரலாற்றில் 1969ம் ஆண்டு சபையின் தலைவராக இருந்த அமரர் திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் எமது சபையின் கீழ் ஒரு நூலகம் அமைக்க வேண்டும். என சபையின் கூட்டத்தில் முன்மொழிந்த சபை ஏகமனதாக ஏற்று அனுமதியைப் பெற்றுக் கொண்டார்.அடுத்ததாக நூலகம் கட்ட ஒரு இடம் தேவைப்பட்டது.அளவெட்டி டச்சு வீதியில் முன்னொரு காலத்தில் கீழிச்சந்தை என்னும் பெயருடன் ஓர் சந்தை நடந்து வந்தது. பிற்காலத்தில் அங்கு சந்தை இடம்பெறாது வெறுமனே இருந்தது. அப்போது இருந்த அரசாங்கம் இந்த அரச காணியான கிராம சபைக்கு சொந்தமான காணியில் ஒரு சமாஜ மண்டபம் கட்ட அரச நன்கொடையாக ரூபா 6 ஆயிரம் தருவதாக தலைவர்கள் கூட்டத்திலும் சொல்லப்பட்டது. அதை சாதகமாக பாவித்துதலைவன் பொன்னம்பலம் அந்த நிதியை அரசிடம் பெற்றுக்கொண்டார்.

அந்தப் பணத்தை ஆரம்ப நிதியாக வைத்து ஊர் பிரமுகர்களான திரு. தோமாறுப் பிள்ளை அவர்கள் ரூபா ஆயிரமும் காலம்சென்ற திரு. சு. வேலுசாமி அவர்கள் ரூபா இரண்டாயிரமும் பணமாக அன்பளிப்புச் செய்தனர். அத்துடன் ஊர்மக்கள் பலரும் பொருளாக அன்பளிப்புச் செய்தனர்..

அளவெட்டி மல்லாகம் பல நோ.கூ. சங்கம் ஒப்பந்தம் எடுத்து தாங்களும் இலாபம் இல்லாமலும் நிதியும் உதவி நூலகம் கட்டி முடிக்கப்பட்டது. அப்போது இருந்த பாராளுமன்ற சபாநாயகர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கிராம சபையில் இருந்த சிறு தொகை நூல்கள் முதலில் கிராம சபையில் தற்காலிக லிகிதராக இருந்த வி. அனாதரட்சகன் அவர்களும் பயிற்றப்படாத நூலகப்பொறுப்பாளராக நியமனம் வழங்கப்பட்டது.நூலகத்தை மையமாக வைத்து எமது கிராமசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் எல்லோரும் மாதம் ஒருமுறை சமாஜ நூலகத்தில் கூடி கலந்துரையாடல்களை நடாத்தியும் நூலகத்தின் செயற்பாட்டை 1969ல் நூலகம் ஆரம்பமாயிற்று. விளங்கச் செய்தும் நூல்களை இரவலாக வழங்கியும் சிறுவர், மாணவர், பொதுமக்கள், விவசாயிகள், தொழிலாளிகள், பெண்கள் எல்லோரும் பயன்பெறும் வகையில் பி.பகல் 1 மணியிலிருந்து பி.பகல் 8 மணிவரை நூலகத்தை சிறப்பாக இயங்கச் செய்தனர். நூலகம் மெல்ல மெல்ல புதிய புத்தகங்களைகொள்வனவு செய்து சிறப்புடன் இயங்கி வந்தது.

1975ம் ஆண்டு நூலகப் பொறுப்பாளராக இருந்தவர் வேறுவேலைக்கு சென்விட்டார். அந்த இடத்திற்கு பயிற்றப்பட்ட நூலகப் பொறுப்பாளராக க.சண்முகநாதன் நியமிக்கப்பட்டார்.நூலகம் வளர்ந்து சிறப்பாக வரும் காலத்தில் 1987ம் ஆண்டு வலி வடக்கில் இராணுவ நடவடிக்கையால் நூலகமும், இந்தபகுதியும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இந்தக் காலப்பகுதியில் நூலகங்கள் பெரும் சேதத்திற்குள்ளாகியது. 1997ம் ஆண்டு திரும்பி வந்து பார்த்தபோது நூலகக் கட்டிடம் பெரும் சேதமாகி இருந்தது.

அந்தக் கால கட்டத்தில் எமது பிரதேச செயலகத்தில் விஷேட ஆணையாளராக இருந்த திரு. நா. வேதநாயகன் அவர்களும் பின் திருமதி. பத்தினியம்மா, திலகநாயகம் போல் அவர்களும் நூலகத்தை புனரமைக்க பெரும்துணை புரிந்தனர். இந்தக் கால கட்டத்தில் பிரதேச சபையின் தலைவராக வந்த அமரர் திரு. ஸ்ரீ பாஸ்கரன் அவர்களும் தொடர்ந்து முயற்சி செய்து நூலகக்கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்து மிகவும் நல்ல முறையில் நூலகம்இயங்குகின்றது.

நூலகம் இடம்பெயர்வுக்கு முன் 5000 பக்கங்கள் இருக்க யுத்தத்தால் இடம்பெயர்வில் சேதமாகியவை போக மிகுதிப் புத்தகங்களுடன் இயங்க ஆரம்பித்தது.

2003ம் ஆண்டு நூலகர் சண்முகநாதன் வேலணைப் பிரதேச சபைக்கு இடமாற்றலாகி சென்றபோது அந்த இடத்திற்கு திரு. பா. விஜயகுமார் நியமனம் பெற்றார். தொடர்ந்து பல நூலகர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுதற்சமயம் திருமதி மீரா பார்த்தீபன் நூலகராக கடமையாற்றுகின்றார். இங்கே சிறுவர்பகுதி, உடன் உதவும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி,வாசகர் பகுதி மற்றும் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அமைதியாக இருந்து தமது பாடங்களைப் படிப்பதற்கும்தேவையான தீசிஸ்(Thesis) போன்றவற்றை எழுதவும் சகலவிதமான புத்தகங்களையும் பயன்படுத்துகின்றார்கள். முகாமைத்துவ பரீட்சை, S.L.A.S, S.L.E.S ,பொது பரீட்சைகளுக்கான I.Q, பொது அறிவு, பொது உளச்சார்பு நூல்களை ஏனையோரும் வந்து படித்து பயன் பெறுகிறார்கள் என்பனவும் பார்த்து சந்தோசமடைகின்றோம். இங்கே நூல்கள் யாவும் தூயிதசாம்ச முறைப்படி பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து செவ்வனே நூலக சேவை இடம்பெற்று வருகின்றது. 2015ம் ஆண்டில் எமது நூலக கட்டடத்தில் பிரதேச சபையின் ஒரு சேவையான இலவச ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றையும் அமைத்து மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றிவருகின்றது.

மக்கள் சேவையே, மகேஸ்வரன் சேவையாகும்.

க.சண்முகநாதன்
மல்லாகம்.

## 12. என் கடைசி ஊர்வலம்

நான் இறந்தால்
என் உடலை
புதையாதீர்!...
அழுகும் பின்
துர்நாற்றம் அடிக்கும்
அது
பூமியுடன் போர் செய்து
சிறுசிறு துகழ்களாய்
சிதறும்
என் உடம்பில் இருக்கும்
ஒவ்வொரு
உணர்வுள்ள கிருமியும்
நச்சரிக்கும்!
என் ஆசையின்
அங்கமெல்லாம்
குடைந்து கொள்ளும்
பூச் சொரியும்
பூச் செடியாய்
புடைத்துவிடும்!
என்னாலே முளைத்தது
செடி!...
ஆதலால்
பூத்துவிடும் கொடி!
என் மேனியில்
பூத்த பூவை - நீ
பிடுங்காது போனால்
மறுபடியும் பூத்த பூ
பிணமாகும் உன்னாலே!
ஆதலால்

எனக்கு வேண்டாம்
கல்லறை!
என் கல்லறையைக் கூட
குடைந்துவிடுவீர் என்
முகவுரையை!...
குடைந்ததில் தெரிகிறது
என் அச்சுவடு!...
நீ விடும் மூச்சுக்கூட
என் கல்லறையின்
முகத்தினிலே வீசிடுமே

மறுகணமும் நான்
கல்லறையில்
கலவரம் செய்திடுவேன்!...
என் மனம் குமுறியழும்
வேதனையை நான்
கல்லறையிலும் காண்பதா?வேண்டாம்
என்னைப் புதைக்காதீர்!...
புதைத்தால் நான்
மீண்டும் அழுதுகொண்டிருப்பேன்
கல்லறைக்குள்!
காதலின் சின்னம்
கல்லறையா?...
காணிக்கை போடுங்கள்
எனக்கு
இறுதி ஊர்வலத்தில்
கொடுக்கின்றேன்
உமக்கு...
கண்ணீர் கண்ணீர் கண்ணீர்....
அது யாருக்காக
என்பதை
நீங்களும் அழும்போதே
சிந்தியுங்கள்!
கொண்டு போங்கள்
கோடரிப்பிடியால்
கொத்தியெடுத்த
விறகையும் கொண்டு போங்கள்
என்னை சுமக்கும் போது
கனக்கும்!
அந்த கனத்தில்
பல அர்த்தங்கள்
இருக்கும்!

குடைந்து பார்க்க எண்ணாதீர்கள்
அது....
ஒருவரின் வாழ்க்கையை
சித்தரிக்கக்கூடும்
தாமதம் ஏன்
கொண்டு செல்லுங்கள்
விரைவாக கொண்டு செல்லுங்கள்!
என் கவிச் சுமைகளையும்
கொண்டுசெல்லுங்கள்

ஐயரை அழைக்காதீர்
அவர் ஓதும் மந்திரத்தில்
நான் ஜனனமாகக் கூடும்
பூமாலை வேண்டாம்
பூவிலுள்ள தேன்கள்
அவள்
உமிழ் நீரென பலருடன்
சண்டை போட்டிருக்கிறேன்!
வெடியோசை வேண்டாம்
அவள்
என்னைப் பார்த்து
வேடிக்கையாய் சிரித்தது
ஞாபகம் வரக்கூடும்!
சிநேகிதங்களே,

எனக்காக
சந்து பொந்துகளில் நின்று
கதைக்காதீர்
என் ஜடத்திற்கும்
ஒரு முறை ஆசைவரலாம்!
மந்திரம் வேண்டாம்
மாதர் கூடிநின்று
கதைக்க வேண்டாம்
கவிதை வேண்டாம்
பாடல் வரிகள் வேண்டாம்
எனக்காக
கண்ணீர் அஞ்சலியும்
வேண்டாம்
யாரும் அழவும்
வேண்டாம்
உங்கள் கண்ணீர் துளி
என் மயக்கத்தை கெடுத்துவிடும்!

விரைந்து செல்லுங்கள்
என் உணர்வுகள்
வீதியிலே சிந்திப்பறக்க முன்னர்
விரைந்து செல்லுங்கள்!
அடுக்குங்கள்....
என் மேனியெங்கும்
கட்டைகளை அடுக்குங்கள்
யார் கொள்ளிவைப்பதா?

ஐயகோ....
தாமதிக்காதீர்!
கடைசியில் என்னால்
விரும்பப்பட்ட பெண்
அழக்கூடும்!....
அதுவும் உறவினன்
இறந்துவிட்டான்
என அழக்கூடும் !
அவள் கண்ணீர்
நிலத்தில் விழமுன்
எல்லோரும் சேர்ந்து
கொள்ளி வையுங்கள்
தாமதப்படுத்தாதீர்!
எரியும் உஷ்ணத்தில்
கருகிப் போகட்டும்
என் காணிக்கைகள்!
என்னோடே எல்லாம்
போகட்டும்.

யாரங்கே!...
எதற்காக
என் பொடிகளை
பொறுக்கிறீர்கள்!
எனக்காக
கடலில்
கரைக்கவா?
வேண்டாம்....
இரும்புப் பெட்டகத்தில்
போட்டு கடல் நடுவே
வீசிடுங்கள்!
அழிந்து போகட்டும்
என் கடைசி ஞாபகங்கள்!
விரையுங்கள்
யார் அழுவதென்று
விசாரியுங்கள்!.....
அவளே
நான் விரும்பிய
காதலியாக இருக்கக்கூடும்
வினாவாதீர்!....
அன்றுதான் என் காதலை
அவள்
புரிந்திருக்கக்கூடும்!.....

ஆக்கம் வரதராசா.பிரபு
மாவைகலட்டி.தெல்லிப்பளை

# 13. அறிவோம் ஆன்மீகம் வினாவிடைத்தொகுப்பு

1. வீட்டு மனையின் பூஜையறை எவ்வாறு அமையவேண்டும்?

சாஸ்திரப்படி பூஜையறை கிழக்குப் பார்த்து இருப்பதுதான் மிகச் சிறந்தது அவ்வாறு இருக்கும் போது வடக்குப் பார்த்து அமர்ந்தபடி பூஜசெய்யலாம ஆனாலும ் பூஜையறை வடக்குப் பார்த்து இருந்தால் நாம் கிழக்குப் பார்த்து அமர்ந்துபூஜை செய்ய வேண்டும்.

2. தீபம் ஏற்றும் முறையைக் குறிப்பிடவும்?

தீபம் ஏற்றும் போது சாதாரண நாட்களில் ஒரு முக தீபம் ஏற்றுவதே போதுமானது. விசேஷ தினங்களில் பஞ்சமுக தீபம் ஏற்றுவது மிகவும் சிறப்பானது மூன்று ஆகாது. தீபத்தைபெண்கள் ஏற்றுவது மரபு. மற்றப்படி ஆண்கள் ஏற்றக் கூடாது. என்றில்லை. தீபம் அம்பாளின் சொரூபம் என்பதால்பெண்கள் ஏற்றுவது உயர்வானது. வீடுகளில் காலையில் சூரியன் உதயமாகும் வேளையிலும் மாலையில் சூரியன் மறையும் வேளையிலும் அதாவது காலையும ் மாலையும் ஐந்தரைமணிமுதல் ஆறு மணிக்குள் தீபமேற்றி வழிபடல் சிறந்தது தீபத்தைத் தேவியின் அம்சமாகப் போற்றுவதால் வாயினால் ஊதி எச்சில் துகள்பட்டு மாசடையும் வகையில்அணைக்கக்கூடாது. மலர் இதழினால் அணைக்கலாம்.

3. வீட்டில் கோலம் போடும் முறை பற்றிக் குறிப்பிடவும்?.

சாஸ்திரப்படி கோலம் போடப் பச்சையரிசி மாதான் பயன்படுத்த வேண்டும். கோலமா, வெண்கட்டி பயன்படுத்தக் கூடாது. பச்சையரிசி மாவால் கோலமிடும் போது இரு நன்மைகளைப் பெறுகின்றோம். ஒன்று எமது வீடு அழகையும் தெய்வீகத்தையும் பெறுகின்றது. மற்றையது எம்மையறியாமலே நாம் போட்டகோலத்திலுள்ள அரிசி மாவை எறும்பு முதலிய ஜீவராசிகள் உணவாகப் பெற்றுக்கொள்கின்ற பயன் எமக்குக் கிடைக்கின்றது.

4. கோவில்களில் துவாரபாலகர்கள் என்ற சிலைகளை வைப்பது ஏன்?

எல்லாம் வல்ல துவாரம் என்றால் வாயில், பாலகர்கள் என்றால் பாதுகாப்பாளர்கள் என்று பொருள், அவர்கள் நுழைவாயிலில் நின்று கொண்டு நம்மைப் பாதுகாப்பவர்கள், திருக்கோவில்களில் நின்று கொண்டு காட்சியளிக்கின்ற துவாரபாலகர்களில் ஒருவர்

ஆட்காட்டி விரலைக் காட்டி நிற்பது உள்ளே வழிபடச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்றும் கடவுள் ஒன்றைத் தவிரவேறொன்றுமில்லை. என்பதையும் நிலையான அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபடவேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற துவாரபாலகர்களையும் நாம் வழிபடவேண்டும்.

5. கிரியை ஒன்று மேற்கொள்ளமுன் பவித்ரம் அணிதலின் நோக்கம் என்ன?

பவித்ரமானது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது ஆகும். இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களிலிருந்து நம்மைக் காப்பதாகும்.

6. கடவுளைக் கும்பம் வைத்து ஆவாஹணம் செய்வது எதற்காக?

கடவுளைக் கும்பத்தில் உருவகப்படுத்தும் போது வாழையிலையை அதன்தலைப்பகுதி வடக்கு அல்லது கிழக்குப் பார்த்தபடி வைத்துஅதில் நெல் அல்லது அரிசி (பச்சையரிசி) இட்டு, தண்ணீர் நிறைந்த நூல் சுற்றிய கலசம்வைத்து ஐந்து அல்லது ஒன்பது மாவிலைகளை வைத்து, தேங்காயையும் வைத்து கும்பம் வைக்கலாம். இதில் கும்பம் என்பது ஒரு உடலின் வெளிப்பாடாகத் தேங்காய் தலையாகவும மாவிலைகள் தலைமுடியாகவும் குடம் தசையாகவும் நூல் நாடிகளாகவும் கட்டிய பட்டு தோலாகவும் தண்ணீர் இரத்தமாகவும் உருவகிக்கப்படுகிறது.

7. அங்குரார்ப்பணம் என்றால் என்ன?

அங்குரார்ப்பணம் என்பது மங்கள காரியங்கள் அனைத்திலும் நிகழப்பெறுவதாகும். முளைப்பாலிகை இடும் செயற்பாடாகிய இந்நிகழ்வு படைத்தலைக் குறிப்பதுடன் தாவரங்களுக்கு அதிபதியான சந்திரனைப் பூஜிக்கும் கைங்கரியமாகும். சந்ததி மற்றும் செல்வம் பெருகும் பொருட்டு நவதான்யம் எனப்படும் முளைப்பாலிகைகள் விதைக்கப்படும்.

8. கற்பூர தீபாராதனையின் விளக்கம் என்ன?

கற்பூர ஆரத்தி என்பது ஆத்மா, பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும். கற்பூரம் வெள்ளையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும்.

கற்பூரம் எரிவது ஆன்மாவானது மலநீக்கம் பெற்று சிவகரணம் அடைவதையும் இறுதியில் ஒன்றுமில்லாமல் கரைந்து போவது ஆன்மா உடலிலிருந்து நீங்கி இறைவனோடு ஒன்றிணைவதையும் காட்டுவதே கற்பூர தீபாராதனை ஆகும். கற்பூர ஆரத்தியின் போது கண்திறந்து கடவுளைக் கண்டு வழிபடவேண்டும். கண்மூடக்கூடாது.

09. வாழையிலையில் உணவு உண்ணும் முறைபற்றிக் குறிப்பிடவும்?

.இலையின் தலைப்பக்கம் சாப்பிடுபவரின் இடப்பக்கம் இருக்க வேண்டும். இலையில் நீர் தெளித்த பின்னரே பரிமாற வேண்டும். வலது கீழ்ப்புறத்தில் முதலில் இனிப்பும்(பாயாசம்) வலது மேற்புறத்தில் பச்சடி வைத்த பின் ஏனைய கறிகளை வைக்க'வேண்டும். இடது புறத்தில் அப்பளம், பொரியல் இடம்பெற வேண்டும். தண்ணீர் இடப்பக்கத்திலேயே இருக்க வேண்டும்.

10. ஸ்வாமிக்குச் சாத்திய கரிப்பொட்டு (ரக்ஷை) வைத்துக் கொள்வதன் மகத்துவம் என்ன?

தர்ப்பையினால் பொசுக்கப்பட்டு நெய்யுடன் கலந்து ஸ்வாமிக்கு நேத்ரமந்திரத்தைச் சொல்லி அணிவித்த பின் மனிதர்கள் அதனைத் தாம் அணிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் பிணியகல்வதுடன் தீர்க்காயுள், புகழ் கிடைக்கும்.

11 பஞ்ச கௌவியம் என்றால் என்ன?

கோசலம், சாணம், பால், தயிர், நெய் இவை ஐந்தும் சேர்ந்து பஞ்ச கௌவியம் எனப்படும். கோசலத்திற்கு வருணனும் பசுஞ்சாணத்திற்கு அக்னியும் பாலுக்குசந்திரனும் தயிருக்கு வாயுவும் நெய்யுக்கு விஷ்ணுவும் தேவதைகள் என்று ஸ்மிருதிகள் கூறுகின்றனர். இதனை ஒருவர் மந்திர பூர்வமாகக் கலந்து உண்டால் சகல பாவத்தினின்று நீங்கிச் சுத்தம் செய்கிறான்.

12. பிராணாயாமம் என்றால் என்ன?

பிராணாயாமம் என்பது பிராணவாயுவைத் தடுத்துச் சில ஒழுங்கு முறைப்படி போக்குவரவு செய்ய விடுதல் ஆகும். இதன் மூலம் மனம் சலனங்களின்றி ஒரு முகப்படுவது நடைபெறும். பிராணாயாமம் என்பது வெளியே உள்ள சுத்தமான வாயுவை

உள்ளே நிரப்பி, சிறிது நேரம் உடலின் உள்ளேயே வைத்துக் கொண்டு, பின்னர் உள்ளே நிரப்பிய மீளவும் வெளியில் விடுவதுடன் மூலம் மேற்கொள்ளப்படும்.

13. கோவில்களில் பிரசாதம் வழங்குவதன் நோக்கம் என்ன?

தெய்வங்களுக்கு நைவேத்யம் சமா்ப்பிக்கும் போது அத் தெய்வங்கள் கண்களாலேயே உணவை ஏற்று ஸ்பரிசிக்கின்றன. இதனால் தான் திருஷ்டி யோகம் என்றசொல் எழுந்தது. பிரசாதம் என்றால் மனத்தெளிவு என்பது பொருள். இறைவனுக்கு நைவேத்யம் செய்த பொருளைத் தரித்தாலும் புசித்தாலும் உடலும் உள்ளமும் பரிசுத்தமாகி மனதில் தெளிவும் அன்பும் வளரும் என்பது இந்துக்களின் நம்பிக்கை ஆகும்.

14. புண்ணியாகவாசனம் என்பது எதற்காக மேற்கொள்ளப்படுகிறது?

தண்ணீர் பஞ்சபூதங்களுள் ஒன்று. எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவும்அனைத்தையும் தூய்மை செய்வதாகவுமுள்ள தண்ணீர் தெய்வீகமானது இடத்தைதூய்மை செய்வதற்காக இக்கிரியை நிகழ்த்தப்படுகின்றது. வேதமந்திர ஜெபம் சொல்லி வருணகும்பத்தில் வருணனை எழுந்தருளச் செய்து, உத்வாசனம் செய்த பின், அந்த வருணகும்ப நீரை அனைத்து இடங்களிலும் தெளிப்பதன் மூலம் எல்லா இடமும் புனிதம் பெறும்.

15. பேரிதாடனம் (மந்திரசகிதமாக மேளமடித்தல்) என்றால் என்ன?

இறைவன் நாத வடிவானவன் இவனது கரங்களிலுள்ள உடுக்கின் ஒலியிலிருந்தே சிருஷ்டி தொடங்குகின்றது. என்பது ஐதீகம், கிரியைகள் தொடங்கும்போது மணியைப் பூசித்து ஒலியெழுப்புவதும் நாதவடிவமே. இதேபோலவே பேரீ எனப்படும் தவிலைச் சிவாச்சாரியார் பூஜை செய்து அதனைத் தாம்வாசித்து அதன்பின் தவிற்கலைஞரை உபசரித்த பின் அவரிடம் தவிலைக் கொடுத்து,விநாயகர் துதியை லயம் வாத்தியத்துடன் வாசிக்கவேண்டும்.

16. கோ- பூஜையின் மகத்துவம் என்ன?

கோமாதா என்பது பூலோகக் காமதேனு, பசுவின் உடம்பில் சகல தேவர்களும்வாழ்கின்றனர். பசு வாழ்ந்தால் உலகம் வாழும். எனவே தான் கோமாதா பூஜையின் போதுஅனைத்து தேவர்களும் பூசிக்கப்பட்டு கோ- பூஜமேற்கொள்ளப்படுகிறது.

17 இறைவனைப் பிரதட்சனம் செய்வது எவ்வாறு?

அபிஷேக காலங்களில் பிரதட்சனம் ஆகாது, சிவனை மூன்று தரமாயினும் ஐந்து, ஏழு, ஒன்பது தரமாயினும் பிரதட்சனம் பண்ணல் வேண்டும். விநாயகரை ஒரு தரமும் அம்மனையும் விஷ்ணுவையும் நான்கு தடவைகள் பிரதட்சனம் செய்ய வேண்டும்.

18. தினசரி படுத்துக் கொள்ளும் போது எந்தத் திசையில் தலை வைத்துக் கொள்ள வேண்டும்?

இரவில் நாம் படுத்துக் கொள்ளும் போது தலையைக் கிழக்கு திசை அல்லதுமேற்குத் திசையில் தலை வைத்துப் படுக்க வேண்டும். மிகத் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் தெற்கில் தலைவைத்து கொள்ளலாம். ஒரு இடத்திலும் ஒரு போதும் வடக்குத் திசையில் தலை வைத்துப் படுக்கக்கூடாது. என தர்ம சாஸ்திரமும் வாஸ்து சாஸ்திரமும் குறிப்பிடுகின்றன.

19. சுவாமி திருவீதியுலா வரும் வேளையில் வைக்கின்ற நிறைகுடத்தை உடனேயே சுவாமிக்கு முன்பாக பூமியில் சொரிகின்றனரே. இது சரியா?

இது மிகத் தவறான செயல், பரவலாக நம்மிடையே நாளாந்தம் நடைபெறுகிறது.நிறைகுடம் என்பது நிறைவானது. மங்களமானது. மங்களப் பொருளாக மகாலட்சுமியாக உருவகித்து வைக்கப்பட்ட நிறைகுடத்தின் நீரை ஊற்றுதல் அதனைக் காலால் மிதித்தலும்ஒரு போதும் ஆகாது. ஆனால் அதனைச் சிலர் பாததீர்த்தம் வழங்குகின்றோம் என்கின்றனர். அதற்கு அதிகாரம் உடையவர் குருவே, சுவாமி வீதிவலம் நிறைவு பெறமுன்னரே பாததீர்த்தம் கொடுக்க இயலாது. எவ்வாறாயினும் இறைவன் வரும்போது நிறைகுடம் வைத்து வரவேற்று நிவேதனம் செய்து அர்ச்சனை செய்தபின் அதே நிறைகுட நீரை ஊற்றாமல் அப்படியே வைத்திருந்து பின்னர் கால்படாத இடங்களில் ஊற்றுவதே முறையாகும்.

20.. தெய்வங்களுக்கு உகந்த மலர்கள் யாவை?

சிவன் - அத்தி, கொன்றை, தாமரை, மந்தாரைவிநாயகர் - மந்தாரைமுரகன் - கடம்புவிஷ்ணு - அலரி, தாமரைஅம்மன் - நீலோற்பலம்சூரியர் - தாமரைலஷ்மி - செந்தாமரைசரஸ்வதி - வெண்தாமரை

21.கல்லில் தெய்வச்சிலை வடிப்பது ஏன்?

கல்லில் ஒளி, ஈரம், காற்று, பூமி இருப்பதால் பஞ்சபூதங்கள் அடங்கியதும்மின்காந்தப்புலம் கொண்டதுமான கருங்கல்லில் தெய்வச்சிலைகளை வடிக்கின்றனர்.

நா. சிவமனோகரசர்மா
மயிலணி.

## 14 இது தேவை

சிவநெறியே தவநெறியாய் விளங்கிய நாடு ஈழவளநாடு அதனையே சிவபூமி எனத் திருமூலர்நாயனார் பாடியருளினார். இந் நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்டகாலத்து ஆதிக்குடி மக்களாய் இயக்கர்,நாகர் வாழ்ந்தனர். இவர்களின் வாழ்வு சைவவாழ்வு என்பதனை இலங்கையர் கோன் பெருவிரல் அழுந்தியோன் என்னும் சிவபக்தனாம் இராவணன் ஆண்ட நாடாகும். சிவப்பொலிவு பெற்ற நாட்டின் வடபால் திருத்தம்பலேஸ்வரம் கண்டகிரிதீர்த்தம் சாபம், நோய் பாவம் போக்கிடும் வகையில் இன்றுவரை விளங்குகிறது. அதனால் சோழ வளநாட்டின் சோழஇளவரசி மாருதப்புரவீகவல்லி சாந்தலிங்கசுவாமிகளின் வழிகாட்டலில் ஈழத்தின் வடக்கே வருகை தந்தார்.

இவர் குமாரத்திபள்ளத்தில் குடியிருந்து நகுலகிரியை தரிசனம்செய்து குன்மநோய் குறைவடைய முழுமையாகத் தீரவில்லை என்றும் மனக்கலக்கம் விநாயகர் தரிசனத்தை கடைப்பிடிக்கவும் என்பதற்கு அமைய கொல்லங்கலட்டிப் பிள்ளையார் முதலாக தெற்கு நோக்கி ஆனைக்கோட்டை அதிகரபிரான் பிள்ளையார் கோயில் வரை ஒன்பது விநாயகர் ஆலய தரிசனமும் அடியார்களின் தொண்டுக்கு வழிகாட்டியவர் ஆவார். அவ் ஆலய வரலாறுகள் கூறுவதைக் காணலாம். சீரிய சிவநெறியை வடபால் நிலைபெறச் செய்த மாருதப்புரவீகவல்லியின் நாமத்தோடு சமய,சமூக, பண்பாட்டுக் கலைகளை சமூகத்திற்கு நன்னெறி காட்டும் இலக்கியமாக அமைகிறது.

இன்றைய சமூகத்திற்கு நல்லறிவும், நலமான சமூக செயல்களும் துரிதகதியில் செயற்படும் விஞ்ஞான உலகில் பணிவு, பண்பாடு பழக்கவழக்கம் என்பன செல்லாக் காசாய் விளங்குவது போல் வளருகிறது. என்று எண்ணி ஆன்றோரும், சான்றோரும் எதிர்காலத்தின் வாழ்வுகள் பல சவால்களை எதிர்கொண்ட வாழ்வு வாழவேண்டிய சமூகமாக அமையப் போகிறதே என்கிறார்கள். அதாவது, பத்திரிகை முதலாக தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏராளமான ஊடகங்கள் எழுந்தன மகிழ்ச்சிக்குரியனவாகும். ஆனால் அத்தனையிலும் போற்றுதற்குரிய செய்திகளிலும் பார்க்க மனம் பேதலிக்கும் செய்திகளும், செயல்களும் நாளொன்றுக்கு வேதனையினையும் சோதனையும் தந்த வண்ணம் அமைகிறது. அவற்றினைப் போக்கிக் கொள்ள " தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் " என்ற ஆன்றோர் கூற்றுக்கு அமைய தானும் தனது குடும்பம் தனது தொழில் புரியும் இடம், ஒன்று கூடும் இடம் , பயனிக்கும் இடம்,

அனைத்திலும் அகமும் புறமும் ஒருவழிப்பட்டு செயலாற்றுதல் வேண்டும். பல சந்தர்ப்பங்களை பணியுடன் கூடிய நன்நெறிகளாய் உணர்வு பூர்வமாய் அமைத்தல் அவசியம் என முன்னவர்கள் அறம் எனக் கூறினர்.

அழுக்காறு அவா வெகுளிஇன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

- திருக்குறள்

என்பதற்கு அமைவாக ஆசை அதிகரிக்க பொறாமை அதிகரிக்கும் அதனால் கோபம் ஏற்பட இனிமைஅற்ற கொடுஞ்சொல் விளைந்தால் பணிவுடன் கூடிய அறம் அழிந்துவிடும். இன்னமும் நீங்கினால்அறம் மேலோங்கும் அன்பர்களே!
எம்மை இன்றைய கலியுகம் நெறிதவறவைத்து விடும் என்று என்றைக்கோ உணர்ந்த பெரியோர் சொல்லிவைத்த வாசகம் உண்மையாகி நிகழ்காலமாய் பராருத்த வினைநிகழ்கிறது.

கொலைகளவுகட் காமம் கோபம் விட்டாலன்றோ
மலையிலக்கா நின்னருள் தான் வாய்க்கும் பராபரமே

- தாயுமானசுவாமி

பஞ்சமாபாதகம் விலகிய ஒருவனே தனக்குமேலான பரம்பொருளை உணரப் பெறுவான். ஆனால் கோபம் என்பது குழந்தை முதல் முதியோர் வரை விளைந்துள்ளது. அதனாலே கொலை என்பது பிறரைக் கொல்லுதலும் தாமாக அறியாமையால் இறத்தல் ஆத்திரக் காரனுக்கு புத்திமத்திமம் என்பார்கள். இவற்றால் பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டு துன்பத்தில் துவளுகிறார்கள். அதனாலே தொட்டில் பழக்கத்திலே துடுக்குதனத்தை அடக்கிவிட வேண்டும். அதனால் நன்நெறிக்கு வழிபடுத்தினால் எதிர்காலம் பெரும் பண்பாளன் என்பார்கள்.

சுவாமி விவேகானந்தர் ஆவர்.அவர் போன்ற சமூக வாழ்வு அமைவது மிகமிக அவசியம் சிவ சிவ என்ற சொல்லியவாறு செயற்படுத்த வேண்டுமே ஆனால் ஆனால் ஆங்கிலம் பேச வேண்டும். என்றே தாய் எண்ணுவது தப்பல்ல. நல்ல பண்பாளனாக வேண்டும் என எண்ணுங்கள் அதே வேளை இன்றைய காலம் ஆங்கிலேயர் சிவா சிவா சொல்லி தோப்புக்கரணம் போட்டு குட்டிக் கும்பிட்டு (அப்பியாசம்) யோகாசனம் வழிபாடு என்று போற்றுகிறார்கள். இவ் வழிபாடு நம்வாழ்வில் முதல்வணக்கமாக அமைவதை மருத்துவமாக விஞ்ஞானிகள் போற்றுகிறார்கள். நாம் அதனை முறைப்படி காலையில் எழுந்து கடமைகள் முடித்து சிவன்கழல்

தொழுவோம். என்று போட்டிக்காக பிள்ளையைப் பாடமாக்கி வெற்றி பெற்றால் மட்டுமல்ல கற்றாங்கு ஒழுகு என்றுகூறுதல் ஒழுகுதல் வேண்டும் அன்பர்களே! இவ்வழிபாடு பழக்கப்பட்டு வழமையாய் அமையுமானால் பழக்கவழக்கம்என்பது சரியாக அமையும.

மேலும் குழுகுக் குறியாய் தமிழ் இலக்கணம் சொல் விளம்பி என்று கள் (மதுசாரம்) கூறப்படுகிறது. இன்று சிறுபருவம் முதலாக நன்றாகச் சொல்விளம்புகிறார்கள். அதற்கான பொருள் வளம் (பணம்) கிடைக்கிறதா கொடுப்பார் யார் கெடுப்பார் யார் இதற்குரிய விற்பனைச் சாலைகள் இன்று அமோகவளர்ச்சியும் காசேதான் கடவுளப்பா என்ற சமூகம் இன்று மலர்ந்ததால் பண்புகள் அன்புகளை மறைந்துவிட்டன. குடி குடியைக் கெடுக்கும் என்ற வாசகம் மூத்தோர் தந்த சொத்து கேட்டுத் திருந்திய சமூகமாக இன்றுவரை தெரியவில்லை. அறிவு சிந்தனை வளர்ந்த சமூகமே மதுக்கிண்ணத்தையே ஏந்துகின்றனர். அதாவது உடல்நலம் உளநலம் பாதிப்படையும் என்பது தெரிந்தும் செயற்படுகிறார்களே என்பதை எண்ணிப் பாருங்கள். அதுமட்டுமல்ல எத்தனையோ குடும்பங்கள பாதிக்கப்பட்டு இன்று வரை இருக்கிறது.

இவர்களின் களையகற்ற மெல்ல மெல்லதொழில்படுத்த விரதமே சிறந்தசாதனம் கேதாரகௌரி ஈஸ்வர நோன்பு, விநாயகர் சஷ்டி இன்றைய காலத்தில் ஐயப்பன் விரதம் இவற்றை ஆசார முறையில் ஈடுபடுத்தி அதன் நியதிகளையும் கற்றுக் கொடுத்து சரியான குருவின் வழிகாட்டலும் செயற்படுமானால் காயமுற்ற உடல் கட்டுப்பட்டு மனம் ஒரு நிலைப்பட்டு சிந்தனை மலர வாக்கு தூய்மையான இணைவார்த்தை மலரும் வகையில் அகப் புறத் தொழிற்பாட்டினை நெறிப்படுத்தி வரும்போது பஞ்சமாபாதத்தில இருந்து விலக்கப்படுவர். இன்றைய சமூகத்தில் மனிதன் மனிதனாகச் செயற்படுவதாக இல்லை என்பார்கள். விலங்கினை விட வெறித்தனமாகச் செயற்படுகின்றனர். பகுத்தறிவுடைய மனிதனுக்கே அறிவியல் ரீதியான வளர்ச்சி என்பார்கள். ஆனால் இன்றையகாலம் அப்படிச் செயலாற்ற தவறிச் செல்வதை நாளுக்கு நாள் பயபக்தி இல்லாத தன்மையே ஆகிறது. சகோதர அன்பு, தாயன்பு, குருஅன்பு என்பன மறைந்து அசிங்கமான அதாவது சொல்லப் பார்க்க முடியாத உறவுகளாய் காம மோகத்தால் (ஆணவம்) பண்பாடுகள் சிதைவதை என்றைக்கோ திருமூலனார் கூறியுள்ளார்.

" ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங்காளையர்
காச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்றவாறே."

இன்றைய சமூகம் இல்லறத்தில் இனிய பலாப்பழம் போல் மனைவி இருக்க அற்ப ஈச்சம் பழம் போன்ற இடத்தில் வாழும் பெண்ணிடம் இன்பம் பெறுதல் ஈச்சம் முள்ளுக் குற்றி ஆறுமாதத்தில் காய் கையில் வளர்வது போல் இன்று (h.i.v) எயிற்ஸ் நோய் அதிகரித்துள்ளது.

இதனாலேதான் வாழ்க்கைத் துணைவராய்உள்ளார்.உருவமாகிய உடலாலும், உருஅருவமாகிய உள்ளத்தாலும் அருவமாகியஉணர்வாலும் அப்பாலாகியஉயிராலும் ஒருவருக்கொருவர் துணைவராவர். உள்ளத்தால் காத்தல் கற்புநிறை வழுவாது ஒழுகுதலாகும். உணர்வால் காத்தல் ஒத்த பண்புடையராய் நண்பர்களாய் நடத்தல் ஆகும். உயிர்க் காவல் என்பது பெரியபுராணம் கூறும் திருநீலகண்ட நாயனாருக்கும் அவர் மனைவியும் அகத்துப் புறத்தும் நீங்காது அருளாற்றிய சிவவழிபாட்டுத் தவவாழ்க்கையாகும்.

இதனைச் சித்தாந்த சாத்திரம் தெளிவுபடுத்தியுள்ளது. அதாவது வழிநூலாய் அமையும் சிவஞான சித்தியாரின் இரண்டாம் சூத்திரத்தில் இரண்டாம் அதிகரணம் பணிகளாக தொடருவன அறங்களாய் அமையும். அத்தகைய நிலையில் இறைசிந்தனை அவசியமாகும். இதனை சிவஞான போதம் பத்தாம் சூத்திரம் "இறைபணி நிற்க " சுட்டிக் காட்டும் போது ஜீவன் சிவனாய் இருந்து செயற்படுதல் "அன்பே சிவம்" மிளிர வேண்டும். வள்ளுவப் பெருந்தகை உயிரிலும் மேலானவன் இறைவன் இறைவனுக்கு நிகரான ஒழுக்கம் அவசியமாகும். ஆனால் இன்றையசமூகத்தில் ஒழுக்கம் என்பது ஜடத்திற்கு ஒப்பிட்டு விட்டார்களோ! என வேதனை அடைகிறார்கள். இதனையெல்லாம் செயற்படுத்த ஒழுக்கமே மேலான அத்திவாரம் ஆகும். அதனையே சான்றாககொண்டு பதினாறு நன்னெறிகள் தெளிவுபடக் கூறுகிறது. அவை ஒவ்வொன்றிற்கும் பெரு விளக்கம்அமைகிறது. அவற்றினை நம் வாழ்வில் அத்தியாவசியப் பொருள் போன்று நாம் பேணுவதுடன் பிறரையும் பேணவைத்து வாழுதலே ஆகும். அதாவது மனிதன் மனிதனாக வாழ இது தேவை அன்பர்களே!ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவுசீலம் வழுக்கிலாததும் தானங்கள் வந்தித்தல் வணங்கல்
வாய்மை அழுக்கில்லா துறவு அறிவு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கில்லாத அறங்கள் ஆனால் இரங்குவான் பணிஅறங்கள் "

சைவப்புலவர். சைவசித்தாந்த பண்டிதர்
க.நித்தியதசீதரன் எம்.ஏ
இந்து தர்மாசிரியர்.

## 15. வெறுங்கழுத்து

"அடி நீயென்னடியப்பா.... வெறுங்கழுத்தோடை போப்போறனென்டு, வெறும் புளிமண்டிக் கதைகதைக்கிறாய்? சும்மா சச்சுப்பிச்சான... இடமா... என்ன? வடமராட்சியல்லோ..? நாளைக்கி... நீ... சாவேக்கை, வெறுங்கழுத்தோடை, நிண்டதுக்காகக், கண்டியோ.... உன்ரை மச்சான்காறி வீட்டு சாமத்திய சடங்குக்கு வந்துபோன... அங்கத்தையில், அத்தனை வூமன்சும்... உன்ரை மச்சாளை தான் கிண்டல் கிண்டி, பெரிய, என்னம்பொரு ராக்கிங்கெல்லாம்..."

இந்தவிதமாகவெல்லாம்... சிவகாமி கடும் உணர்ச்சி வசப்பட்டால் போல் மூக்கை விரித்து, வாயை நெளித்து, கைகளை உதறியெல்லாம் கதைத்துக்கொண்டவள்.

"எடி வியாசகி... நாளண்டைக்கிப் புதன்கிழமைதான் ... தண்ணியாப்பெண்டா.. எப்பிடியும் நீ அவையள் வரச் சொன்ன மாதிரி ரியூஸ்டே ஈவினிங்கே இஞ்சையிருந்து போயிடவேணும்.. அப்போதைக்கி நானென்ர கொத்தமல்லிச் சங்கிலியை கொண்டாந்துதாறன். யோசிக்காமல் போட்டுக்கொண்டு போ. இடேலை மடேலை கண்காடர் பறிச்சா அது வேற கதை...! அரிசியடிப்பிலை நான் போறனப்பா.?

இப்படியாய் தனது வெளியீட்டுரையையும் கச்சிதமாய் பினிஸ் பண்ணிக் கொண்டவளாய் சிவகாமி பிள்ளையைக் கிணற்று மிதியில் கிடத்திவிட்டு வந்தவளாய்... வியாசகி வீட்டு நல்ல தண்ணீரையும் கும்பகோணக்குடத்தோடு அலாக்காய் நாரியில் தூக்கி வைத்துக் கொண்டே ஓட்டமும் நடையுமாய் கேற்றடியில் போய் மிதிப்பதற்கிடையில்... சிவசங்கரனின் ஆட்டோவும் மத்தியானச்சாப்பாட்டு நேரத்து ரைம் பிடித்து கேற்றடியில் வந்து ஸ்ரொப் பண்ணிவிடுகின்றது..!

"சாப்பாடு காச்ச வேணும் நிக்க நேரமில்லைப் போறனென்று கண்டகண்ணுக்கு கீழ்மிடத்தால், அனுங்கிக்கொண்டே சிவகாமி சிவசங்கரனை விலத்திக்கொண்டே, நடையைக்கட்டியதும்

சிவசங்கரன் சும்மா வாயில் வந்தபடிக்கு, "அன்ரி என்னவாம்"என்றபடியே துறுவாக, அடுப்படிக்குள்ளே போய்... ஒரு முக்கிய ஐடியாவோடு நுழைந்தும் விடுகின்றான்? அந்த நேரமாய் சிவகாமி அன்ரி.. சொல்லிவிட்டுப்போன அந்த குட்நியூசையும் சங்கரனிடம், சங்கையாகச் சொல்லி அவனையும்"சாப்பாடு காச்ச வேணும் நிக்க நேரமில்லைப் போறனென்று கண்டகண்ணுக்கு கீழ்மிடத்தால், அனுங்கிக்கொண்டே சிவகாமி சிவசங்கரனை விலத்திக்கொண்டே, நடையைக்கட்டியதும் சிவசங்கரன் சும்மா வாயில் வந்தபடிக்கு, "அன்ரி என்னவாம்" என்றபடியே துறுவாக, அடுப்படிக்குள்ளே போய்... ஒரு முக்கிய ஐடியாவோடு நுழைந்தும் விடுகின்றான்? அந்த நேரமாய் சிவகாமி அன்ரி.. சொல்லிவிட்டுப்போன அந்த குட்நியூசையும் சங்கரனிடம், சங்கையாகச் சொல்லி அவனையும் சந்தோசப்பட வைத்து தானும் சந்தோசப்பட வேண்டுமென்ற ஐடியாவோடு அடுப்பில் வேகிக் கொண்டிருந்த கறியை அவசரமாய்த் துளாவிக் கொண்டிருந்த வியாசகி... அதனைச் சொல்லவென்று வாயெடுத்த நேரமாய் ...சங்கரனின் வாயிலும் அவதி அவதியாக இப்படியொருக்கால் சிவகாமி அன்ரியிடம் நகை இரவல் கேட்டுப் பார்த்தாலென்ன என்ற வகையான கேள்வியொன்றும் பெரிய அங்கலாய்ப்போடு பிறந்து விடுகிறது. " கேட்டுப்பார்த்தாலென்ன.... கேட்டுப்பார்க்காமலே அன்ரி தன்வலியவே தாறனென்டு ஓமெண்டு சொல்லியும் போட்டாவே.என்று இன்னும் பல மடங்கான மேட்டிமையோடு சங்கரணைத் திணறடித்துவிடும் ஐடியாவோடு அந்த நகை விடயத்தை பெண்ணிற்கே உரித்தான அழகான புன்னகையோடு வெளிப்படுத்தியும் விடுகின்றாள். சங்கரன் பெரும் புதினப்பட்டு வாயைப் பிளந்த நேரம் கோலொன்று அவன் வாய்க்குள் வந்து உள்ளட்டுவிட்ட கணக்காய் வந்தும் விடுகின்றது.

" ஹலோ.... ஹலோ...?

" நான்தான் மாலதி கதைக்கிறன்... ஆர் அண்ணைப் பிள்ளையோ கதைக்கிறீங்கள்"

"ஓமடி மாலு நான்தான் கதைக்கிறன் என்னெண்டு சொல்லன்ரியப்பா"

“ மச்சாள், பிள்ளை எங்கை போட்டாவாம். அவவைத்தான் ஒருக்கா கதைக்க”
“இந்தாரும் வியா, என்னை வேண்டாமாம் உம்மோடைதான் ஒருக்கா மாலி கதைக்க, இந்தாரும் கதையும்.”
“ என்ன மச்சாள் நாங்கள் வாறம் தானே பேந்தென்ன கதைக்கப் போறீங்கள்.”

“ஓ வாறது சரி பேந்து மாத்திரம் வெறுங்கழுத்துகிழுத்தெண்டு கழுத்தையுனத்தி வராம நிண்டுடாதைங்கோ மச்சாள், எல்லாரும் பிடிக்கேக்கையும் வெறுங்கழுத்தோடைதான்? போகைக்கையும் வெறுங்கழுத்தோடைதான்? நீங்கள் தானே முன்னுக்கு நிண்டு சகல கருமமும் பாக்க மேய்க்க வேண்டியாள். இப்ப தட்டாதெருவிலையுள்ள அத்தனை ஜீவலர்சும் சிவகாமி அன்ரி வீட்டிலைதானே. இப்படி மாலதி மச்சாள் சொன்னதோடு அன்ரிட்டை கேட்டா அவ நூறு முறையும் தன்னட்டைக் கிடக்கிற ஆமான நகையிலொன்றைத் தருவா.

“ஓம் மச்சாள் அன்ரி வேளைக்கே ஓம் சொல்லிப் போட்டா.”
“ பேந்தென்ன, வலு கெட்டிக்காரியாக் கிடக்கு. என்ரை இளையளுக்கு இப்பவே உங்களோடு சேர்ந்து ஆலாத்தியெடுத்தமாதிரியா.”

செல்போன் சப்ரர் குலோசானதும் வியாசகி ரைமைப் பார்த்துவிட்டு அவதிஅவதியாய் சங்கரனுக்குக் கோப்பைக்குள் சோற்றுப் போட்டு மீன் குழம்புக் கறியையும் ஆசறிதியாய்க் கிள்ளிவிட சங்கரன் ரூமச் ரூமச் என்று சொல்லிக் கொண்டே மீன் குழம்புக் கறி குழைத்த சோற்றையள்ளி அவறிபோவறியென்றடைகிறான். அந்த நேரம் பார்த்துதண்ணீரள்ள அவதிஅவதியாக, கிணற்றடிப் பக்கமாய் வந்த சிவகாமி அன்ரி வீட்டிலென்ன பறதியோ, காறுபாறோ பச்சப்படிய கண்ணிற்குள் தட்டுப்பட்டுக்கொண்டிருந்த அந்த இரண்டு மரக்கட்டைகளை சும்மாவொரு சவளிக்கைகாகவெண்டாலும் நிமிர்ந்து பார்த்தொரு சின்னச் சிரிப்புக் கூட சிரிக்காமல் எந்தப் பேச்சல் பறைச்சலுமில்லாமல் வியாசகி வீட்டு நல்ல தண்ணீரோடு

மிகமிக நலமாகவே போய்ச் சேர்ந்தும் விடுகின்றாள். இப்ப சங்கரன் சாப்பாட்டடியில் குந்தின நேரமாக தண்ணீர் எடுப்பதற்காக வளவிற்குள் வந்த சிவகாமி அன்ரி நடந்துகாட்டிவிட்டுப் போன விதத்தை அவுக்கவுக்கென்று சோற்றையும் வாய்க்குளள்ளி வைத்தபடியே சங்கரனின் ஓட்டோ முனையானது அலசிப் பார்க்கவும் தான் வெளிக்கிட்டும் விடுகிறது .

" இந்தச் சிவகாமி அன்ரி முந்தி நடந்து போன ஒரு கோபதாப பழைய கறளை இன்னும் தான் அயர்ந்து மறந்தும் தான் போய் விடாமல் இப்பவும் தானொரு பாரிய கறுகுடமாய் மனதில் செப்பமாய் வைத்திருந்து கொண்டு சரியான சந்தர்ப்பம் பார்த்து இந்த நகையிரவல் விடயத்திலொரு முறையான அடி போட்டுக் காட்டியும் விடவேண்டுமென்ற கபட சிந்தனையோடுதான் வாய்திறந்து கேட்டுவிடாதிருந்த பட்சத்திலும் தன்வலியவே கொத்தமல்லிச் சங்கிலியை இரவல் தாறதென்று தன்னுடைய பொஞ்சாதிக் காரியிடம் அதுவும் வலுக்கட்டாயப்படுத்தியும் தான் காட்டினானோ இந்தளவு மனத்தைரியமாக. சங்கரனுக்கு திடீரென்று சாப்பிட்ட சோறு புரைக்கடித்து விக்கியும் விடுகிறது.தலையில் தட்டி நெஞ்சைத் தடவி விட்டு தண்ணீர் குடிக்கக் கொடுத்து வியாசகி பதறித் துடித்துக் கொண்டே சங்கரனின் அக்கப்பாட்டை ... ஒரு மாதிரியாய் ஷேப் பண்ணிவிட்டு ஆறுதலடைய கொய்யா மரத்தில் கொறித்துக் கொண்டிருந்த காகங்களிரண்டு கொத்துப்பட்டு, சண்டைப்பட்டு பிணைத்தபடியே மரத்திலிருந்து முற்றத்தில் தொப்பென்று விழுந்து கட்டியுருண்டு பிணைபடத்தொடங்கியதும் அந்த இடத்திற்கு உள்ள தோசம் நீங்க, சளாரென்று தண்ணீரையும் ஊற்றிவிடுகின்றாளே? இந்த இவ்வளவும் நடந்து ஒரு கொஞ்சம் பொறுத்து மறுபடியும் சிவகாமி படங்களில் வரும் தண்ணீர்க் காட்சி போல நல்ல தண்ணீர் அள்ளத்தான் வந்து விட்டாள். அந்த வீட்டார் இருவரையும் பார்த்து சிரித்துக் கொண்டுதான் வந்தாள். இந்த விஷப் பாம்பிற்கும் தான் இறைவன் சிரிப்பதற்கு வரம் கொடுத்தால் அதுவும் தான் ஆட்களை பண்ணியும் விட்டு பெரிய வில்லன் சிரிப்பே சிரித்தும்தான் இருக்கும்.இந்த அன்ரியின் சிரிப்பானது அந்த நேரத்திற்கு அந்த இருவரையும் தான்

"ஆட்கொள்வது" போலவே ஆகி விட்டாற் போல மூடிக் கிடந்த மழை முகிலுக்குளால் எட்டியும் பார்த்துச் சிரித்துவிட்ட சூரியனும் அதேயடிக்குள் மூடப்பட்டும் விடுகின்றான்?

இதெல்லாமென்ன மாயமோ மாயையோ என்றெல்லாமிந்த சிவகாமி அன்ரியின் விடையத்தோடு சங்கரன் இன்னுமின்னும் ரூமச்சாக சரியான ரூட்டில் ஆட்டோவை ஓடிக்கொள்ளத் தெரியாமல் கண்டபாட்டிற்கு காடுமேடு கலட்டி பத்தை செத்தை வெள்ளவாய்க்கால் தோட்டம் துரவு என்ற கணக்காய் திங் பண்ணத் தொடங்கி மனதைப் போட்டுப் பிய்த்துப் பிடுங்கி அலைக்கழித்து மாயவும தொடர சுனாமி அலையாய் உயர உயர எழும்பி இந்தப் பூலோகத்தில் வறுமை எல்லாருக்கும் தானே? வலு வேளைக்கே சிவகாமியின் தலைவன் செத்துப் போக நண்டும் குஞ்சுகளுமான நான்கு புத்திரர்களும் இந்தச் சிவகாமி வளர்த்து முடிக்க அவள் பட்டுத் தொலைத்தபாடு அவள் காது கழுத்திலை எல்லாமே சிவகாமி வீட்டு அந்த நேரத்து வாழ்வாதார ஜயிற்றத்தை வடிவா அலசியெடுக்கத் தொடங்கிய சங்கரன் அதே நேரத்தில் தன்னுடைய மனையாள் கல்யாணம் கட்டின ஏத்தரவில் நகைதட்டு விடையத்தில் சுப்பராக இருந்த ஒரே கப்ரில் நல்லதண்ணீர் அள்ளவந்த சிவகாமி அன்ரியோடு ஒரு கதை வழிபாட்டில் அவளைப் பிடித்து "மூளிக்கழுத்துக் காரி" என்று கேட்டும் விட்டதை அது முழுப் பிழைதானென்று தனக்குள் நியாயம் சொல்லிக் கொண்டவன் இன்றைக்கி ஆணைக்கு ஒரு காலம் வந்தா பூனைக்கு ஒரு காலம் வருமென்ற நேச்சராய் இதே சிவகாமியின் நான்கு புத்திரர்களும் தட்டாதெருவிலுள்ள அத்தனை நகைக் கடைகளையும் வீட்டிற்குள், கொண்டுவந்துவிட்ட பின்னாலும் அதற்குப் பதிலடி போல் நடக்க நினைத்து நடந்ததை இவ்வளவு காலத்திற்குப் பிறகும் நெஞ்சில் நஞ்சாய் வைத்துக் கொண்டிருப்பதுவும் தான் தவறின் மேல் தவறுதான்.

என்றெல்லாம் தனக்குள்ளொரு நீதிமன்றமே எழுப்பியும் விடுகின்றான்? இந்த வூமன்சுகளுக்கு இந்த இறைவன் இந்தவாய்களையும் படைத்தாலும் படைத்து விட்டாரே? அந்த

வாய்களைப் பேணதானமாய் பாவிக்கத் தெரியாமல் அதைப் போட்டுப்படுத்தாதும்தான்படுத்தி கதைக்காததெல்லாம் கதைத்து கேட்காததெல்லாம்கேட்டும் பெரும் சர்ச்சைகளையும் மூதலிப்புகளையும் வடுவசைகளையும் அடிபிடிச் சண்டைகளையும் சாதிப்புகளையும் உண்டுபண்ணி நாய் நோயென்றும் தானாகிப் போய் விடுகின்றார்களே?

இப்படியெல்லாமிந்த, ஆட்டோ சங்கரன் தன்னுடைய மனுசியையும் சேர்த்துத்தான் (அவளுக்குத் தெரிந்தால் கழுத்தறுபடும்) இந்தப் படுசுட்டி வூமன்சோடு வாய்க்குள் போட்டுச் சப்பித் தள்ளி விட்ட நேரமாகத்தான் பிடிபடாத ஒரு சூனிய நோயாகவே போய்விட்ட இந்த இதே அன்ரிதான் தன் வீட்டுக் கருமத்தை நீற்றாகப் பார்க்கும் பெண்புத்தியோடு நல்ல தண்ணீரள்ளவென்று வான்கோழி நடை போட்டு வந்தாள். இந்த இரண்டு மயில்களையும் நெற் முட்டாய் காண வந்தவள் தப்பிக் கொள்ள வேறு வழியின்றி நகைத்தே விட்டாள். அந்த இருபேருக்கும் தேகம் முழுவதும் நகையலங்காரம் செய்து கொண்ட கதையாகி நல்ல தண்ணீர் புகழ் இந்த அன்ரியின் நகைத்தலானது ஒரு விலையெழுப்பத்தோடு வாய் திறந்து சொல்லிக் காட்டி விட்ட அந்த நகை தாறதுக்கான ஒரு சிக்கல்தானே என்றவாறாய் அந்த ஆட்டோ சங்கரனின் செல்போனும் மியூசிக் சிக்னல் போட்டும் விடுகிறது. மறுநாள் தண்ணீர் வார்ப்புச் சடங்கிற்கு வடமராட்சி போகவேண்டிய அந்த ரியூஸ்ரே நாளைத் தொட்டுக் காட்டிக் கொண்டிருந்தது.

இனி எப்படியும் என்னவிதப்பட்டும் இந்த வடமராட்சி ஐயிற்றத்தை முன்னிட்டு ஆட்டோவில் கால்வைப்பதற்கிடையிலாவது இந்த நகை விடயமென்று சங்கரன் தனக்குள் சங்காய் முழுங்கித் தள்ளி விட அந்தத் ரைம் பார்த்துத் தான் அன்ரியின் அழகான கோலொன்று அழகாய் வந்து நடித்து காட்டிவிட்டு மறைந்து விடுகிறது. இந்த நகையலங்கார உலகத்தை பார்த்து சங்கரன் தம்பதியினர் நகைத்தும் கொண்டார்களே.ராத்திரி வந்த கள்ளர்கள் சமயத்தோடை என்ரை ஜீவலர்ஸ் முழுக்கக் கொண்டு போட்டாங்களே. ஏனப்பா உதிலை கிடக்கிற வடமராட்சிக்கு வெறுங்கழுத்தோடை போகலாம்தானே?

இனி எப்படியும் என்னவிதப்பட்டும் இந்த வடமராட்சி ஐயிற்றத்தை முன்னிட்டு ஆட்டோவில் கால்வைப்பதற்கிடையிலாவது இந்த நகை விடயமென்று சங்கரன் தனக்குள் சங்காய் முழுங்கித் தள்ளி விட அந்தத் ரைம் பார்த்துத் தான் அன்ரியின் அழகான கோலொன்று அழகாய் வந்து நடித்து காட்டிவிட்டு மறைந்து விடுகிறது.

இந்த நகையலங்கார உலகத்தை பார்த்து சங்கரன் தம்பதியினர் நகைத்தும் கொண்டார்களே.ராத்திரி வந்த கள்ளர்கள் சமயத்தோடை என்ரை ஜீவலர்ஸ் முழுக்கக் கொண்டு போட்டாங்களே. ஏனப்பா உதிலை கிடக்கிற வடமராட்சிக்கு வெறுங்கழுத்தோடை போகலாம்தானே?

இந்த நகையலங்கார உலகத்தையே சேற்றிற்குள் புதைத்துவிட்ட பெரும் கில்லாடிக் கதையாய் எல்லாம் முடிவில் தன்னுடைய உள் மனதையே வெட்ட வெளிச்சமாய் திறந்தும் காட்டிவிட்ட இந்த விதமான இந்த அன்ரியை சங்கரன் ரீமயின்ற் பண்ணிக்கொள்ள எதுவுமறியாத அந்த ஆட்டோ வடமராட்சியை இலக்கு வைத்து கூலாய் ரண்பண்ணிக் கொண்டிருந்தது.

## 16.மாற்றத்தால் மாறும் மாற்றம்

வாழ்வில் இடம் பொருள் ஏவல் என்பவற்றிற்கு இசைவாக மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. அதாவது வாழ்வின் நடைமுறைகள், படிமுறைகள், பண்பாடுகள், கலாசாரங்கள், இயற்கையின் கோலங்கள் போன்றவை இடம், சந்தர்ப்பம், தேவை, கட்டாயப்படுத்தல் போன்ற காரணிகள் காலத்திற்கு காலம் மாற்றமடையும். பழக்கத்தில் இருக்கும் பண்புகள் தொடர்வதாக அது வழக்கமாகி அதுவே காலப்போக்கில் சில பண்புகளாக வெளிப்பட்டு ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் பழக்க வழக்கம் எனக் குறித்து நிற்கின்றது. இப் பழக்கவழக்கங்கள் கற்றறிவு மூலம் பெறப்படுவதில்லை. தாய், தந்தை, குடும்பம், அயல், கிராமம் எனப் பல வழிகலாலும் பட்டறிவு (அனுபவம்) மூலமே இவை தொடரப்படும்.உதாரணமாக, ஒரு குழந்தையின் போசிப்பு தாய்ப்பாலில் ஆரம்பித்து படிப்படியாக சத்துணவு,உலர் உணவு, புரத உணவு என்று மாறுபட்டு உடல் ஆரோக்கியத்தை பேணி வளர்ப்பது ஆரம்பகால நடைமுறை, இதிலும் தாய்ப்பால் ஊட்டும் போது தாயின் நல்ல சிந்தனையும் பின்னர் நிலாக்காட்டி பாட்டி கதை சொல்லி உணர்வுகளை நல்ல முறையில் வளர்ப்பதும் அக்கால நடைமுறையாக அதற்கேற்ப அக்காலத்தில் சமுதாயம் நல்ல பண்பாடு உடையதாக வளர்ந்தது. காலப் போக்கில் இவை புட்டிப்பால், செயற்கைப் பழரசங்கள், சூப்புகள், செயற்கைச் சதை உணவுகள்( புரொயிலர், ரின்மீன்) போன்றவை உணவுகளாக இடம்பெற்றதோடு இவை குழந்தைகளுக்கு (சிறுவர்களுக்கு) பராமரிப்பு நிலையம் மூலம் தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியவற்றின் அனுசரனையுடனே ஊட்டப்படுகிறது. இதனால் குழந்தைகளின் மூளை வளர்ச்சியானது இயற்கையாகப் பின் தள்ளப்பட்டு சுயமான சிந்தனையை விட்டு கற்பனையில் தமது அறிவைத் தக்கவைக்கும் துர்ப்பாக்கிய நிலை தோன்றும். கற்றறிந்தோர் மத்தியிலும் இந்த வழக்கங்கள் பிழையானது என உணர்ந்தாலும் சமூகத்தில் தமது அந்தஸ்து குறைந்து விடுமோ அல்லது விமர்சனங்கள் ஏற்படுமோ என்றபய உணர்வால் இதில் மாற்றங்களை ஏற்படுத்த முடிவதில்லை. இந்த வழக்கங்கள் எதிலிருந்து மாறுபட்டு வந்தது என்பதை எமக்குள்ளே நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தால் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களின் தேவையும் அதனால் கிடைக்கும் விலைமதிப்பில்லா நன்மைகளும் தெளிவாகும்

ஒரு இனத்தை குறித்து நிற்பது அந்த இனத்தின் பண்பாடு, கலாசாரங்களே. இவை மாறுபட்ட பின்னர் இனத்தின் பெருமையை கூறி அதன் தனித்துவத்தை பேணுதல் என்பது கேலிக்குரிய ஒரு விடயமாகும். நாடக மேடையில் அரசன் பாத்திரம் எடுத்து நடிப்பவன் பார்வையாளர்கள் முன்பு அரசன் போன்ற வேடமே பூண்டிருத்தல் வேண்டும். அதை விட்டு பபூன் வேடத்தில் வந்து அரச வசனங்களை எவ்வளவு நேர்த்தியாகப் பேசினாலும் அது நாடகத்தைச் சோபிக்கவும் மாட்டாது. பார்வையாளர்களைத் திருப்திப்படுத்த மாட்டாது. அது போல் ஒரு இனம் நடை, உடை, பாவனைகள் தனக்கே உரிய கலாசார விழுமியங்களிலிருந்து மாறுபட்டு அதனை நியாயப்படுத்துவதற்காக இதுதான் நம்முடைய தற்போதைய வழக்கமாக மாறியுள்ளது. எனக் கூறுவது தன்னைத் தானே ஏமாற்றுவதாக முடியும்

இருந்தும் ஆரம்பத்தில் கூறியது போல கால மாற்றம் இடமாற்றத்திற்கு ஏற்ப மாற்றங்கள் அத்தியாவசியமானாலும் மாற்றக் கூடிய சில மாற்றங்களை விட்டு மாற்றவே கூடாதவற்றை மாற்றுவதே இங்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள், கோவிற் சடங்குகளில் கலாசாரங்கள் பண்பாடுகள் ஓரங்கட்டப்பட்டு கவர்ச்சி, ஆடம்பரம் என்பன தலை தூக்கி நிற்கிறது. சடங்குகளில் குருவானவர் நிலத்தில் இருக்கும் போது ஏனையோர் கதிரைகளில் காலுக்கு மேல் கால் போட்டு இருக்கிறார்கள். கலாசார உடைகள்மாற்றப்பட்டு மாற்று உடைகளில் பாதணிகளுடன் மண்டபத்தில் உலாவுதல், ஆலயங்களில் வாசலில் மூல மூர்த்தியின் ஆசனத்திலும் உயரமான மேடை போட்டு நிகழ்வுகள் நடாத்தல்,கற்றவர்கள், முதியோர்களை மதித்து நடவாமை, குளிக்கப் போய் சேறு பூசுவது போல சகுனத்திற்கும் உதவாது மங்கல விடயங்களில் அமங்கலமாக தலைவிரித்தபடி சடங்குகளில்ஈடுபடுதல் போன்ற இரவல் கலாசாரங்களில் இருந்து மாற்றம் பெற்றுச் சொந்தக் கலாசாரங்களை நாம் மதித்து நடத்தல் வேண்டும்.

ஆலயங்கள் மற்றும் விழாக்களுக்குச் செல்லும் போது குடும்பத்தவர்கள் சேர்ந்து செல்வதும் வயது வந்தவர்கள் இளையவர்களுக்கு நிகழ்வின் தன்மைகளை விளங்க வைப்பதன் மூலமும் நிகழ்வுகளில் பங்காளர்களாக இருப்பதன் மூலமும் குடும்ப கலாசாரம், சமூக

கலாசாரம் பேணப்பட்டது. தற் காலத்தில் குடும்பத்தவர்கள் சேர்ந்து செல்வதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்காததால் தனித்தனியாகவும்வேறு வேறு ஆட்களுடன் கூட்டாகச் செல்வதும் அர்த்தமற்ற விதத்தில் விழாக்களில் பங்குபற்றுவதாலும் விழாக்களின் மகிமை, அர்த்தம் விளங்காது கலாசார சீர்கேடுகளுக்குஇடம் கொடுத்து எதிர்மறையான கனவுகளை ஏற்படுத்தி விடுகிறது.

பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற கேள்வி எழுந்து யார் இந்த மாற்றங்களை ஆரம்பிப்பது என்பது தான் தற்போதைய கவனத்திற்குரிய விடயமாகும். தானாகவே நடக்கும் என்று காத்திருப்பது பேதமையைத் தரும். "தவமும் தவமுடையார்க்கே ஆகும். அவம் அஃதிலார் மேற்கொள்வது" என்று சொன்ன வள்ளுவரும் எம் இனத்தின் தன்மையை முன்பே உணர்ந்து நடக்கும் என்றாற்தானே என்று காத்திராது " தெய்வத்தால் ஆகாது எனினும் அது மெய் வருந்தக் கூலி தரும்" என்று முயற்சி செய்தால் அதற்குரிய பலன் கிட்டும் என்றும் சொல்ல மீளவும் எழுச்சி பெறச் செய்வோமாக.

சா.தணிகாசலபதி
மாரிசிட்டி
அளவெட்டி

இத்தகைய தமிழர் பண்பாட்டில் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு முன்னர். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் அமைவிடம் பற்றியும் புவியியல் பற்றியும் விளங்கிக் கொள்வது அவசியமாகும். சில அறிஞர்களை பண்பாட்டை புவியியல் அடிப்படையில் நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.உதாரணமாக இலங்கை பண்பாடு, இந்தியப் பண்பாடு, என குறிப்பிடுவதைப் காணலாம். எனினும் இவற்றிற்கு இடையே பல்வேறு வகையான வேறுபாடுகள் இருப்பது உணரப்பட்ட போதும் பொதுவாக இவ்வாறு அழைக்கும் வரலாறு இன்று வரை தொடர்கிறது. பண்பாடு என்பது பன்மைத் யாழ்ப்பாண பிரதேசம் என்னும் பெரு வட்டாரத்திற்குள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம்,தீவுப்பற்றுமுதலிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. இப் பிரிவுகளுக்கிடையே பண்பாட்டுக் கோலங்களிற் சிற்சில நுண்ணிய வேறுபாடுகள் அல்லது தனித்தன்மைகள் காணப்படுவது உண்மையே, எனினும் எல்லாப் பிரிவுகளுக்கும் உரித்தான பொதுவான பண்பாட்டு அம்சங்களையேஇவ்வுரையில் குறிப்பிடப்படுகின்றன. பண்பாடு என்ற சொல் வாழ்க்கை முறை அல்லது வாழ்வியல் என்ற அர்த்தத்திலும் பயின்றுவருகிறது. தமிழிலே பண்பாடு என்ற சொற்பயன்பாடு மிக அண்மைக் காலத்திலேயே அறிமுகமானது. Culture என்ற ஆங்கிலப் பதத்திற்கு நாகரிகம் என்ற சொல்லே பெரு வழக்கமாக இருந்தது.

பழந்தமிழ் இலக்கியங்களிற் பண்பாட்டினை குறிக்கச் சால்பு என்ற பதமே கையாளப்பட்டுள்ளது என்பர். Culture என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பண்பாடு என்ற சொல் மிகப் பொருத்தமாகவும் சிறப்பாகவும்அமைந்திருக்கின்றது. என்பதை மறுப்பதற்கில்லை. பண்பாடு பற்றிய ஆய்வினைச் செய்தவர்கள் பண்பாட்டை பொருள் சார், பண்பாடு பொருள் சாராத பண்பாடு என இரண்டாக பாகுபாடு செய்வார். ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள் சார் பண்பாட்டினைப் பற்றிய தரவுகள் மிகவும் பயனுள்ளவை.வீடுகளின் அமைப்பு , செய்பொருள்கள், வீட்டுச் சாமான்கள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற்கருவிகள், சடங்குப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களைப் பற்றிய தரவுகள் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறியப் பெரிதும் உதவும். இந்த வகையில் நோக்கும் போது யாழ்ப்பாணப்பிரதேசத்தின் பொருள்சார் பண்பாடுகள் யாவற்றையும் இவ்வுரையிலே விபரித்துக் கூறுவது கடினமானது. குறிப்பட்ட சில பொதுமைப் பண்புள்ள அதேவேளை முக்கியமானவை எனக் கருதும் பண்பாட்டுக் கோலங்கள் சில இங்கு குறிப்பிடப்படுகின்றன.

## 17. தைப்பொங்கல்

தைப்பொங்கல் தை மாதம் முதல் நாளன்று தமிழ் மக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பான பெருவிழாவாகும். தற்பொழுது இது தமிழர்கள், அல்லாதோராலும் சிறிதளவாக அவ்வவ் இடங்களில் கொண்டாடப்படுகிறது. இது தமிழர்கள் செறிந்து வாழும்இலங்கை, இந்தியா, மலேசியாவில் மட்டுமன்றி சிங்கப்பூர், ஐரோப்பிய, நாடுகள், அமெரிக்கா, முதலிய நாடுகளில் கூடக் கொண்டாடப்படுகிறது. ஆனால் நாட்டுக்கு நாடுகொண்டாடப்படும்முறைகளில் சிறு சிறுவித்தியாசம் காணப்படும். ஆனால் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் அனேகமாக ஒரே முறையில் ஒரே விதமான அனுஸ்டானங்களுடன் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் முக்கிய அம்சம் நன்றிக்கடன் என்ற கருப்பொருளே அடங்கியிருக்கும் எங்கள் பெரும்புலவர் ஔவை மூதாட்டியின் "வரப்புயர" எனும் கருப்பொருளில் வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடிஉயரும், குடி உயர கோன் உயரும் எனும் கருப் பொருளில் விவசாயத்தின் வேளாண்மை தங்கியிருக்கிறது.

உழவன் சேற்றில் கால் வைக்காவிட்டால் மனிதர்கள் சோற்றில் கை வைக்க முடியாது. என்பது புதுமொழி ஆகவே இவ் உழவுத் தொழிலுக்கு காரணியாகவுள்ளஆரியனையும் அதன் தொடர்ச்சியாகவுள்ள மழையையும் முன்னிலைப்படுத்தி உழவுத் தொழிலுக்கு துணை புரிகின்ற மாடுகளுக்கும் நன்றி செலுத்தும் விழாவாகவே தைப் பொங்கல் விழா அமைகின்றது.
பொங்கல் விழா உழைக்கும் மக்களுக்கும் உயிர்களுக்கும் ஒரு நன்றி செலுத்தும் விழாவாகவே நடைபெறுகின்றது. தைப்பொங்கல் எனப்படும் பொங்கல்விழாவில் பெரும்பாலும் பெண்களே முக்கிய பங்கு வகிப்பார்கள். ஆதிகாலத்தில் நெல்உற்பத்தி காலத்தில் நல்ல மழை பெய்யவும் நாடு செழிக்கவும் ஆக பிரார்த்தித்து பெண்களாலே இந்நிகழ்வுகள் முன்னின்று கொண்டாடப்பட்டதாக நூல்கள் வாயிலாக

வேதம் ஓதம் வேதியாக்கு ஓர் மழை:
நீதி நெறிதவறா வேந்தருக்கு ஓர் மழை:
கற்புடை மங்கையர்க்கு ஓர் மழை.

என மாதம் மூன்று மழையென பெய்யுமே என புராணங்கள் மழையின் முக்கியத்தையும் அதன் மூலம் நாடும் விவசாயமும் செழிப்புற்றதையும் கூறும் பொழுது பெண்மையும் அதன் பண்பும் முக்கியத்துவமும் மேலோங்கியுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.

## 18. மகிழ்ந்து பாடு

பண்ணோடு இசையமைத்து ஆழ்வார்களாகவும் நாயன்மார்களாவும் பக்தி வளர்க்கப்பட்டதுபோல விண்ணோடு தொடர்புடையதாக வியத்தகு வகையில் நகுலேஸ்வரம், மாவைக்கந்தன்என எம்மோடு இணைந்து இங்கு விளங்குகின்றது. இந்தப் பூமியிலே இணைந்த உயர்ந்த ஒழுக்கங்களோடு வாழும் மக்களால் பேணப்பட்டு வந்ததே எமது பண்பாடு எனின் ஐயமில்லை

தாய்,தந்தை பணிதல் , குருவைப் போற்றுதல், பெரியோர்களை மதித்தல், சமூகத் தொண்டு, இறைவனைச்சரவணடைதல், கொடை வழங்கல் தானம் செய்தல், சிறந்த கேண்மை, அவையத்து முந்தியிருக்கச் செய்தல், விட்டுக் கொடுத்தல், வேருக்கு நீராகுதல், காரிருளுக்கு ஒளியாகும், தியாகம் செய்தல், கற்புநெறி பேணுதல், கணவனை மதித்தல், புறங்கூறாமை, பொய்யுரைக்காமை, என சொல்லிக் கொண்டே போகும் அளவிற்கு இங்கே காணப்பட்ட விழுமியங்களை எம்மவர்க்கு எடுத்தியம்பி வளர்க்க வேண்டியது எமது கடமையன்றோ.

வலிகாமம் வடக்கென்பது பெரியோர்களும், பேரறிஞர்களும் நெறியோடு வாழ்ந்து காட்டிய நிறைந்த நீண்ட வரலாற்றைக் கொண்டது.வெறுமனே நிகழ்வுகளை நடத்துவது, பொன்னாடை போர்த்துவிப்பது எல்லாம் எம் வீடு பண்பாடுடையது என ஆகாது. பெருமை வேண்டாது. செந்நெறியோடு வாழ்ந்து வரும் அருமையானவர்களைக் கண்டு அவர் வழி நாட வேண்டும்.

காரிருளான மேகம் மழையைத் தந்து பயிரை வளர்ப்பது போல வேதனை போக்கும் மாந்தராய் இந்த மேதினியில் வாழ்வோமானால் தர்மம. மாருதப் புரவீகம் எனுமலர் போற்றத்தகு பொன்னான கருத்துக்கள் ஏற்றமடைய அது இன்றியமையாத ஒன்று. தேற்றமுடைய மனத்தோரே தியாகம் கொண்ட நெஞ்சோடு போற்றிப் புகழ்ந்திடுங்கள்.

பொய்யுரைப்போர் அகலட்டும் இங்கிருந்து!

தே. விக்கினேஸ்வரன்.
வாழ்வின் எழுச்சி முகாமையாளர்,

## 19. எ(ங்களை) என்னை விளையாடவும் விடுங்கள்

கருவறையில் காலை உதைத்து
உருண்டு புருண்டு உருவானேன் தனித்து - பிறந்து
குழந்தைப் பருவத்தில் அன்னை மடியிலும் அவள் அணைப்பிலும்
விரும்பியவாறு விளையாடினேன்.

குழந்தையாக குதூகலமாய் விளையாட்டுப் பொருட்கள் பலவற்றுடன்
இணைத்துப் பொருத்தி, எறிந்து உடைத்து விளையாடி- முன்பள்ளியிலும்
ஆடிப் பாடி, எழுத்துக்கள் இலக்கங்கள் பாடங்கள் கற்று
ஆனந்தமாய் அனைவருடனும் விளையாடினேன்.

பிள்ளைப் பருவமும் வந்தது
கொள்ளை இன்பமும் கூடவே வந்தது
பள்ளி சென்று பல தோழருடன் - துள்ளி விளையாட
எண்ணி மனம் இறக்கை கட்டிப் பறந்தது.

எண்ணியது ஈடேற இயலவில்லை குறைந்தது விளையாட்டு
கூடியது வினாவிடை, சோர்ந்தது என் சக்தி - இருந்தும்
படித்தால் மட்டுமே உயரலாம் எனும்
பெரியோர் புராணம் கொண்டு தேற்றினேன் என்னை.

தடை தாண்ட தரம் ஐந்து தரமான பரீட்சையாம்
பெற்றோர், ஆசிரியர், உற்றார் உட்பட
வதைத்தார்கள் அனைவரும் என்னை.

எழுதினேன் பரீட்சை
வந்தது வெட்டுப் புள்ளிக்கு மேலான முடிவு
கொண்டாடிக் குதூகலித்தனர் - பெற்றோர்
ஆசிரியர், உற்றார் அனைவரும்

ஆனால் நானோ.......

வெளியில் போலியான மகிழ்ச்சியுடனும்
உள்ளே மன இருளுடனும் வாழ்கிறேன் சக்தியிழந்த பிஞ்சா- யாரறிவார்
இந்தப் பிஞ்(சுகளின் )சின் சக்தி இழப்பிற்கு
விளையாட்டுச் செயற்பாடு குறைந்து போனதுதான் என்ற ஆதங்கத்தை....

திரு. அ. அன்ரனி பிரசன்னா
தெல்லிப்பளை.

## 20. சம்பள நாள்

காலை வேளை கடவுள் வணக்கத்தை முடித்துக் கொண்டு வந்து வந்து கலண்டரில் ஒற்றையைக் கிளித்தேன். அதில் 25ம் தேதி காட்டியது. ..ஓ.. இன்று சம்பள நாள். அனேகமானோருக்கு அது மகிழ்ச்சியான நாளாக இருந்தாலும் என்னைப் போல ஏழைகளாக உள்ள அரசாங்க உத்தியோகம் பாக்கிறவைக்கு இது துக்க தினம்.

எடுக்கும் சம்பளத்தை எப்படி பங்கிடுவது? துண்டு விழும் தொகையை என்ன செய்வது? மாதம் தோறும் சம்பள நாளன்று இப்படியான பிரச்சினைகள் வருவது வழமைதான். ஒவ்வொரு மாதமும் துண்டு விழும் தொகைக்காக கடன் பட்டு, கடன் பட்டு, வட்டியும் முதலுமாக பெரிய தொகை வந்து விட்டது. இந்த மாதம் யாரிட்டை கடன் வேண்டுவது என் மூளை பலமாக வேலை செய்தது.

கடைக்காசு, வட்டிக்காசு, பால் வேண்டிய பணம், மின்சாரப்பட்டியல் பணம், தொலைபேசி கட்டணம், பிள்ளைகளின் படிப்புச்செலவு, மீன் வேண்டிய நிலுவை, எல்லாவற்றையும் ஒருகணம் நினைக்கின்றேன். எடுக்கும் சம்பளத்தை விட துண்டு விழும் தொகை என்னை மிரட்டியது.

"அப்பா இண்டைக்கு உங்களுக்கு சம்பளமெல்லே, எனக்கு பாடசாலையிலை "டான்ஸ்" போட்டி இருக்குதப்பா, நல்ல சாறி வாங்கவேணும். இதுகளுக்கு எப்படியும் ஒரு ஐயாயிரம் வேணும். அதோடை சப்பாத்து பிரிஞ்சு போச்சுது.

ரியூசன் காசு கட்டவேணும். இந்த மாதச் சம்பளத்திலை காசு தந்திடுங்கோ” இளைய மகள் பிரியாவின் பட்டியல்.

“அப்பா இந்தாங்கோ பிளேன்ரி.... மா முடிஞ்சிது... இண்டைக்கு சம்பள நாள் தானே, வரேக்கை வேண்டிக்கொண்டு வாங்கோ” மூத்தவள் புனிதாவின் கட்டளை. நல்லவேளை புனிதா வேறொன்றையும் கேட்கவில்லை என்று மனம் திருப்திப்பட்டது. ஏனென்றால் அவள் மூன்று நாட்களுக்கு முன்னம் தான் வீட்டுக்கு வந்திருக்கிறாள். மூண்டு வரிசமாக வெளிமாவட்ட கல்வியியல் கல்லூரியிலை படிச்சவள். மூண்டு வரிசமும் பத்து லட்சத்துக்கு மேலை செலவழிச்சுத்தான் ஆசிரியர் என்ற பட்டம் என்மகளுக்குக் கிடைத்தது.

“அப்பா நான் சிங்கள வகுப்புக்கு போகப்போறன். அதோடை கணணியை படிச்சனெண்டால் நல்லதுதானே. நியமனம் வாறதுக்கு இடையிலை இதெல்லாத்தையும் படிச்சு முடிச்சிட வேணும். சிங்கள வகுப்புக்கும், கணிணி வகுப்புக்கும் முற்காசு கட்டவேணும். எனக்கு ஒரு நாலாயிரம் தாங்கோ” புனிதா இப்படிக் கேட்பாள் என்று எண்ணவே இல்லை.

“சரி பிள்ளை பாப்பம்”

“என்னப்பா பாப்பம் எண்டு சொல்லுறியள் இண்டைக்கு கட்டவேணும்” எனக்கு தலையெல்லாம் சுற்றியது.

“நீங்கள் கேக்கிறதொண்டும் நடவாது புனிதா. பிறகேன் கேக்கிறியள்..... கண்டறியாத அரசாங்க உத்தியோகம்.... உங்கை கூலி வேலை செய்யிறதுகளெல்லாம் நல்லாயிருக்குதுகள்.

உத்தியோககாரன் எண்டு சொல்லி கலியாணம் கட்டி என்னத்தை கண்ட மிச்சம்" என் தர்ம பத்தினி பத்திரகாளியானாள். மனைவியின் திட்டுக்களையும், பேச்சுக்களையும் கேட்டு எனக்கு பழகிப் போய்விட்டது.என்னை எவருமே புரிந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம் தான் என்னை வாட்டியது. காலைச்சாப்பாட்டை எதிர்பார்க்காமல் அலுவலகம் புறப்படத் தயாரானேன்.

"அப்பா சாப்பிடாமல் வெளிக்கிடுறியள்" புனிதா தடுத்தாள்.

"விடு புனிதா போகட்டும், கொழுப்பு வத்தட்டும்!! மனைவி சாபமிட்டாள்.

காலைச்சாப்பாட்டோடை மத்தியானம் கட்டித்தாற சாப்பாடும் இல்லை. சைக்கிளை எடுத்தேன். முன் சில்லு காத்துப்போய் நிண்டது... இரும்பு கூட என்னை மதிக்கவில்லை. டயறில் "பூ" இல்லை மெழுகு மாதிரி வந்துவிட்டது. அது கூட எவ்வளவு காலம் பொறுக்கும்.

"அம்மா சாப்பாட்டை குடுத்து விடுங்கோவன்" இளையவள் அறிவுரை சொன்னாள்.

"போகட்டும் விடு. இஞ்சை இல்லையெண்டால் அவள் கொண்டு வந்து குடுப்பாள் தானே" மனைவி ஆவேசப்பட்டாள். எனக்கு கோபம் தலைக்கேறியது.... போட்டு மிதிக்கவேணும் போல இருந்தது... வளர்ந்த பிள்ளையள் முன்னால் பேசினால் எனக்கு அவமானம் என்று பேசாமல் கோபத்தை அடக்கிக் கொண்டேன். சைக்கிள் பம் வாங்கிவர இளையவளை பக்கத்துவீட்டுக்கு அனுப்பிவிட்டு காத்திருந்தேன். என் தொலைபேசி அலறியது நடுங்கும் கரங்களினால் எடுத்தேன். எந்தக்கடன் காறனோ எண்டு தெரியாமல் "ஹலோ" குரலும் தளதளத்தது.

எவ்வளவு காலம் தவணை சொல்லியறியள்.... இண்டைக்குக் காசு தராட்டி பொலிசிலை தான் சந்திக்க வேண்டிவரும்" என்று கடன்காரன் மிரட்டினான்.

மகளை வெளிமாவட்ட கல்வியல் கல்லூரிக்கு அனுப்பவும், இடைக்கிடை மாதம் தோறும் அனுப்பவும் எண்டு வேண்டின காசு ஒரு லட்சம் வந்திட்டுது. காசு தந்தவன் தான் பொலிசுக்கு இழுப்பான் என்கிறான்.

மகள் படிச்சு ஆசிரியாராகவும் வந்திட்டாள். வேண்டின கடன் கட்டேல்லை எண்டால் யார் தான் பேசமாட்டினம். என் மனச்சாட்சி எனக்கு சொல்லியது.

டயரின் பசிக்காக சாற்றை நிரப்பிக் கொண்டு வெளியேறினேன். என்மனம் நிம்மதியைத் தேடியது. அது எங்கே இருக்கின்றது என்று நான் தேடினேன். பசி என் வயிற்றைக் கிள்ளியது. இரவும் சாப்பிடவில்லை, காலையும், ஏன் மதியமும் இல்லை. சாப்பாட்டுக் கடையைக் கண்டு சைக்கிளின் வேகத்தைக் குறைத்தேன். சேட் பொக்கட்டில் கை வைத்தேன் அதுகூட வெறுமையாக இருந்தது. என்ன வாழ்க்கை.... கண்கள் கலங்கியது யாரும் பார்ப்பதற்கு முன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

"இஞ்சை இல்லையெண்டால் அவள் கொண்டு வந்து குடுப்பாள் தானே" மனைவி சொன்ன இந்த வார்த்தைகள் மனத்திரையில் முட்டி மோதிக்கொண்டது.

என் அலுவலகத்தில் பணியாற்றும் கமலா, சற்று வசதியானவள். திருமணம் முடித்து கணவன் இறந்து விட்டான். இரண்டு பிள்ளைகளோடு வாழ்ந்து வருகின்றாள்.

பணத்தட்டுப்பாடு வருகின்றபோது எனக்கு உதவிக்கரம் நீட்டுகின்றவள் கமலா தான். என்னுடைய சோக வாழ்வைத் தெரிந்து கொண்டிருந்தாள். நல்ல சாப்பாடு வீட்டில் செய்தால் எனக்கும் கட்டி வந்து தருவாள். எல்லோர் முன்னிலையிலும் கடன் கேட்க, என் குடும்ப கஸ்டத்தை சொல்ல எனக்கு மனம் வராது. கமலாவை தனிய சந்தித்தே கடன் கேட்பேன். பல நாட்கள் கமலா முன் அழுதிருப்பேன். என்னுடைய பரிதாபத்தை எண்ணியே கடன் தருவாள். இது என் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு சந்தேகத்தை உண்டாக்க, கதை வீடு வரை போக சண்டை தான் வீட்டில் நடக்கும். என்ன உலகமிது.... வாழவும் விடாது சாகவும் விடாது... மனம் அடிக்கடி எண்ணிக்கொள்ளும்.

"அப்பா" குரல் வந்த திசையை பார்த்தேன்.... மகிழ்ச்சி பொங்க ஓடி வந்தான் மகன் சிவகரன். "என்ன சிவகரன்" கேட்டேன்.

"அப்பா எனக்கு கம்பஸ்சுக்கு கிடைச்சிட்டுதப்பா" மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான் அவன்.

"நீ கெட்டிக்காரன் தானே, கம்பஸ்சுக்கு போவாயெண்டு எனக்கு நம்பிக்கை இருந்தது. கடவுள் காப்பாற்றிப் போட்டான்". மனம் ஒரு கணம் சந்தோசப்பட்டது.

"சிவராசன்ணை... நீங்கள் சாப்பிட போகேல்லையே.." கமலா கேட்டவாறு வந்தாள்.

"இல்லை கமலா நான் சாப்பாடு கொண்டு வரேல்லை" கமலாவுக்கு பொய் சொல்ல மனம் இடம் தரவில்லை.

"இந்தாங்கோ அண்ணை சாப்பாடு... இட்டலி அவிச்சனான் உங்களுக்கும் கொண்டு வந்தனான்" கமலா கட்டாயப்படுத்தினாள்.

"வேண்டாம் கமலா.... நீ என்னிலை இரக்கப்பட்டு உதவி செய்யிறதை சனம் பிழையாக கணக்கெடுக்குது..." இதுக்கு மேல் பேச எனக்கு வார்த்தை வரவில்லை.

"சிவராசன்ணை எங்களுக்கை உள்ள உறவு அண்ணன் தங்கை உறவு தான். கதைக்கிற சனத்தை ஒண்டும் செய்ய முடியாது... நீங்கள் சாப்பிடுங்கோ" பார்சலை தந்துவிட்டு போனாள் கமலா.

கையிலே கிடைத்த சம்பளத்துடன் கடன் வாங்கும் கடைக்கு போனேன். அங்கே கணக்கு 24725 ரூபா என்று சொன்னான் முதலாளி. "இஞ்சை பாருங்கோ சிவராசன்ணை, வரிசமும் முடியுது... இந்த முறையெண்டாலும் முழுசாக கடைக்காரனின் வார்த்தைகள் எனக்கு வேதனை ஊட்டியது. ஒருவாறு முதலாளியுடன் பேசி காசைக்குறைத்துக் கொடுத்துவிட்டு அடுத்த கட்டம் நோக்கினேன். வட்டிக்காசு ஒருவனுக்கு பத்தாயிரம், மற்றொருவனுக்கு ஐயாயிரம், நாலாயிரம் என்று வட்டியின் பட்டியல், அவர்களை சந்தித்து நிலமையை எடுத்துச் சொல்லி வாரம் தவணையும் கேட்டுக் கொண்டேன்.

நான் கஸ்டப்பட்டுத் தான் சந்தோசப்படுகிறேன் என்பதை இலகுவாக புரிந்து கொண்ட மகன் "சாப்பிட்டியளா அப்பா, முகமெல்லாம் வாடிக்கிடக்குது" கேட்டான். நான் மௌனமானேன். கண்கள் குளமாகியது. தன்னிடமிருந்த நூறு ரூபா தாளை என்னிடம் தந்து சாப்பிடுங்கோ என்று விட்டு அவன் வீடு நோக்கிப்போக நான் அலுவலகம் நோக்கி விரைந்தேன். மகன் தந்த 100 ரூபா தாள் என்னைப் பார்த்து சிரித்தது. வயிறு பசியால் துடித்தது. கடையில் சாப்பிட்டு விட்டு போகலாம் என்று மனம் எண்ணியது. அதையே முடிவாக்கிக் கொண்டு சைக்கிள் பெரலை மிதிக்கிறேன்.

என் குடற்பசியை விட டயரின் ரியூப் பசி அதிகமாகியது. காற்றுப்போன சைக்கிளை உருட்டிச் சென்ற நான் கடை ஒன்றிலே காற்றை நிரப்பினேன். அது சொல்லுக் கேட்கவில்லை. ஒட்டித்தரும்படி சொன்னேன்.

என் அலுவலக நேரத்தை கணக்கிலெடுத்த கடைக்காறன் துரிதமாகச் செயற்பட்டான். இரண்டு ஒட்டு, எண்பது ரூபாவை அவனுக்கு கொடுத்து விட்டு மீதி இருபது ரூபாவுக்கு சாப்பிட முடியாது. விதி என்னைப் பார்த்து சிரித்தது.

அலுவலகம் சென்ற நான் என் கடமையில் மூழ்கிப்போனேன். மதியம் எல்லோரும் சாப்பாட்டு பொதிகளுடன் சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தார்கள். நான் மட்டும் தலைவிதியை நொந்தபடி அலுவலக வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தேன்.

மீன்காரன் சிவா இவன் ஒரு மாதிரியான ஆள். அவனின் காசு 3800 ரூபாவையும் கொடுத்துவிட்டேன். பால்க்காரனுக்கு 1200 ரூபா மீதி என்னிடமிருப்பது வெறும் 1300 ரூபா மட்டும் தான். வீட்டை சண்டை தான் வரும் என்பதைத் தெரிந்து கொண்டே வீட்டுக்குப் போனேன்.

"அப்பா எனக்கு காசைத் தாங்கோ. இண்டைக்கு இல்லாட்டி பிறகு உங்களிட்டை காசு வராது". இளையமகள் சொன்னாள்.

"அப்பா பின்னேரம் அஞ்சு மணிக்கு சிங்கள வகுப்பு தொடங்குது. காசு கட்டித்தான் சேரவேணும். காசு தாறியளே" மூத்தவள் கேட்டாள.

இவர்களுக்கு என்ன பதில் சொல்லுறது. எப்படிச் சொல்லி விளங்க வைக்கிறது மனம் போராடியது. "வாற கிழமை கயந்தாவின்ரை கலியாண வீடு நகை நட்டுத்தான் இல்லை. சாறி ஒண்டு கடனாக வேண்டினனான் 25ம் திகதி தான் தவணை சொன்னன் இன்டைக்கு குடுக்கவேணும்" மனைவியின் கணக்கு இது.

"நீங்கள் ஆளுக்கொருத்தராக காசு கேக்கிறியள்... எடுத்த சம்பளம் கடைக்கு கட்டிப்போட்டன். மீன் காசும், பால் காசும் குடுத்திட்டன். கொஞ்சம் பொறுங்கோ ஆரிட்டையாலும் கடன் வேண்டித்தாறன்" நான் சொன்னேன்.

"எனக்குத் தெரியும் ஒரு சதமும் இல்லாமல் தான் வருவாரெண்டு. நீங்கள் படிக்கப்போக வேண்டாம் வீட்டிலை இருங்கோ கடன் தான் மிஞ்சியிருக்குது. வீட்டிலை இருந்து என்ன லாபம்". மனைவி அழுதாள்.

"என்னப்பா இப்படியே போனால் என்ன செய்யப்போறியள்... எங்களுக்கு என்ன சேர்த்து வைச்சிருக்கிறியள். நாங்களும் இப்படியே இருக்க வேண்டியது தான்" மூத்தமகள் தான் இப்படிப் பேசினாள்.

"கடன், கடன் எண்டு சொல்லுறியள் எப்பிடி வந்தது" இளையவளின் கேள்வி.

"ஆருக்கு குடுத்திட்டு வந்து கடன் எண்டு கதை விடுறாரோ ஆருக்குத் தெரியும்! மனைவியின் புதிய கண்டுபிடிப்பு. நான் அமைதியை இழந்து விட்டேன் கணக்கைத் தொடர்ந்தேன்.

"என்ன பிள்ளை கேட்டனி எங்களுக்கு என்ன சேர்த்து வைச்சிருக்கிறியள் எண்டோ? சொல்லுறன் கேள். உன்னை ஆண்டு ஒன்று முதல் உயர்தரம் வரை படிப்பிக்க நான் உனக்குப் போட்ட முதல் எட்டு லட்சத்துக்கு மேலை. கல்வியல் கல்லூரியிலை படிச்ச மூண்டு வரிசமும் உனக்கு சிலவழிச்சது பத்துலட்சத்துக்கு மேலை, பிறந்தது முதல் இன்று வரைக்கும் சாப்பாடு, மருந்து, உடுப்பு, பிறந்தநாள்கள், எண்டு நீ கேட்டதெல்லாம் வாங்கிதந்தன். அதுக்கும் பத்து லட்சத்துக்குக் கூடத்தான் கணக்கு வரும். ஆக மொத்தம் உனக்கு மட்டும் 28 லட்சத்திற்கு மேலை

இன்று செலவழிச்சுத்தான் உனக்கு "டீச்சர்" என்ற பட்டத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறன். கடன் எப்படி வருகுது என்டு நீ கேட்டனி பிரியா. என்ரை இப்ப எடுக்கிற மாதச்சம்பளம் 24 ஆயிரம் ரூபாய். ஒவ்வொரு மாதமும் கடைக்கு இருபத்தைஞ்சுக்கு மேலைதான் வரும், உங்கடை படிப்பு செலவு, உடுப்பு, மருந்து, கரண்ட் காசு, ரெலிபோன் காசு, மீன், பால், எண்டு கணக்கிட்டால் ஒரு மாதம் நாற்பது ஆயிரத்துக்கு மேலை தான் செலவு வருகுது. சம்பளம் போனால் மீதி பத்தாயிரத்துக்கு மேலை கடன் பட்டுத்தான் உங்கடை தேவையளை நிறைவேற்றி வைக்கிறன உனக்கு சிறு நீரகத்திலை பிரச்சினையென்டு கொழும்பு ஆஸ்பத்திரியிலை ஒரு மாதம் வைச்சிருந்தன். சிறுநீரகம் விலைக்கு வாங்கி உன்ரை உயிரைக்காப்பாற்ற மட்டும் ஒன்பது லட்சம் முடிஞ்சது. கடன் பட்டுத்தான் செலவழிச்சன். இப்ப விளங்குதே கடன் எப்பிடி வந்ததெண்டு" என் மனக்குமுறல்களை கொட்டித் தீர்த்தேன்.

கிணற்றடிக்குப் போய் கால் முகம் கழுவிக் கொண்டேன். வயிறு முட்ட தண்ணீரும் குடித்தேன். உடுப்பை மாற்றி புறப்பட தயாரானேன். "அப்பா எங்கையப்பா போகப்போறியள்" மூத்தவளின் ஆதங்கம். "கணேசா பேக்கறியிலை பாண் போடுற வேலைக்கு வரச்சொன்னவை, இரவு வேலைக்குப் போனால் மாதம் பதினையாயிரம் தாறமெண்டவை. அங்கை தான் போறன், கணேசா வெதுப்பகத்தை நோக்கி என் பயணம் தொடர்கிறது.

- யாவும் கற்பனையல்ல –

அளவெட்டி
உதயகுமார்.

## 21. நகர்ந்து கொண்டிருக்கும் ஆண்டில் எமது கலாசார நகர்வுகளின் பார்வை

எமது பிரதேச செயலகத்தால் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பரிணாமங்களில் ஒவ்வொரு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே கலாசார பிரிவிலும் 2015ஆம் ஆண்டிலும் பல முன்னேற்பாடான நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை நோக்க முடிகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திணைக்களங்களுடனும் இணைந்து பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. இவற்றை மேற் கொள்ளும் பொருட்டு மாகாண கலாசார உத்தியோகத்தர், கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், மத்திய கலாசார அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்த உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்) அனைவரும் பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் இணைந்த சேவையாகவே காண முடிகின்றது.

மேலும் இவ்வாறான செயற்பாடுகளை நோக்கின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பல ஆலயங்களுக்குப் புனரமைப்பிற்காகவும் சில ஆலயங்களுக்கு அடித்தள வசதிகளுக்காகவும் நிதியுதவி வழங்கி செயற்படுத்தி யுள்ளமையைக் காணலாம்.

அத்தோடு புண்ணிய கிராமம் எனும் சிறப்பு நிகழ்வுகளும் சமயச் சொற்பொழிவுகள் குருபூசை நிகழ்வுகள் என்பன இடம்பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள் இந்து அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அறநெறிப் பாடசாலைகளுக்கு இசைக்கருவிகள், சீருடைகள் ஆசிரியருக்கான கொடுப்பனவுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு இந்துக் குருமாரிற்கு அடையாள அட்டைக்கு விண்ணப்பங்களை அனுப்பியதுடன் ஆலயங்களில் குருபூசைகள் நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.அறநெறிப் பாடசாலைகளில் வளர்ச்சி கருதி நல்லூர் உற்சவ காலத்தையொட்டியும், அறநெறிப் பாடசாலைகளின் வெள்ளிவிழாவையொட்டியும் எழுத்தாற்றல், சித்திரம், பேச்சாற்றல், நாடகம், நடனம், வில்லிசை, பண்ணிசை, பஜனை போன்ற ஆக்கத்திறன் நிகழ்வுகள் பிரதேச, மாவட்ட முதலிய மட்டங்களில் நடத்தப்பட்டன.

அத்தோடு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய மட்டத்தில் பொதுஅறிவுப் போட்டிப் பரீட்சைகளும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் மாவட்ட செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பராமரிக்கப்பட்டு வரும் காளை மாட்டிற்கு இந்து சமய கலாசாரப் அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் நிதியுதவி தொடர்பான நடவடிக்கையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அடுத்து மத்திய கலாசார அலுவலகத்திற்கு திணைக்களத்தின் நெறிப்படுத்தல்களின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள், வெளியார் (திறந்த) அடிப்படையில் பிரதேச மட்டத்தில் கலை இலக்கியப போட்டிகளை நடாத்தி மாவட்ட மட்டத்தில் பங்குபற்றுதல்களை ஏற்படுத்தி வெற்றிகளை ஈட்டுவதற்கும் வழி வகைகளை மேற்கொண்டமை.

அரச சிறுவர் ஓவியப் போட்டிகள் போன்றவற்றில் பிரதேசம், மாவட்ட மட்டங்களில் பங்குபற்றுதல்களுக்கு வாய்ப்பளித்தல், ஊனமுற்றோரிற்கான கலை, இலக்கியப் போட்டிகளுக்காக பிரதேச மட்டத்தில் ஊனமுற்றோர்களைத் தெரிவு செய்து மாவட்ட மட்டத்திற்கு அனுப்பியமை. கையெழுத்துப போட்டிகளுக்காக கலைஞர்களை பங்குபெறச் செய்தமை.

இதே போல் கலாசார மத்திய நிலையத்தினாலும் பல்வேறு கலாசார செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கலாசார மத்திய நிலையத்தினால் இசை, நடனம், ஆகிய போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளும் பெற்றுள்ளளர். அதில் தேசிய மட்டத்தில் தனிப் பாடல் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. தேசிய இலக்கியப் போட்டியிலும் கலாசார மத்திய நிலைய மாணவர் இருவர் கவிதையிலும் சிறுகதையிலும் ஒருவரும் தெரிவாகி உள்ளனர்.

அவ்வாறே வழமையான வருடங்களைப் போல இவ்வருடமும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச கலாசார அபிவிருத்தித் திட்டங்களுக்கென நிதி ஓதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது. அவற்றில் பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், சில இவ் வருடத்திற்குள் பூர்த்தியாக்கப்படும் நிலையிலும் உள்ளன.

அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியில் கலைஞர்கள் சந்திப்பு, கலை மன்றங்களுடன் சந்திப்பு, கலாசாரப் பேரவை உறுப்பினர்களுடன் சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதே போல் சிறப்பாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய விழாவான ஆடிப்பிறப்பு நிகழ்வும் தெல்லிப்பளை காசிவிஸ்வநாதர் ஆலய முன்றலில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. மேலும் கலாசார விழிப்புணர்வு நாடகமும் பல இடங்களில் மேடை ஏற்றப்பட்டதுடன் கவிதைபயிலரங்கும் நடத்தப்பட்டு சான்றிதழகளும் வழங்கப்பட்டது. மேலும் இந்நிதியினூடாக எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வறிய எழுத்தாளரின் கவிதை வெளியீட்டிற்கு உதவும் பொருட்டு வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள நிதியில் இருந்து ரூபா 25000 ஒதுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் ஏனைய கட்டங்களாக ஒதுக்கப்பட்ட நிதிகளின் மூலமாக பிரதேச பண்பாட்டு விழா, கலைஞர் கௌரவிப்பு, பண்பாட்டு மலர் வெளியீடு, ஆவணப்படுத்தல்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்கு என்பனவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வறிய கலைஞர்களுக்காக மாதாந்தம் வழங்கப்படும் ஓய்வூதிய வரிசையில் அமரசிங்கம் இராசதுரை என்பவர் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான கொடுப்பனவு மாதாந்தம் 5000/= பெற்றுக கொடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட எமது பிரதேச செயலக பிரிவில் வர்த்தமானி அறிவித்தலுக்குட்பட்ட ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம் அத்தோடு கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் போன்றவற்றின் வருடாந்த மகோற்சவ காலங்களுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு பிரதேச செயலாளரினால் கண்காணித்தலும், உற்சவ காலப் பணிமனை கடமைகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்று வருகின்றது.

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் 25 தினங்களும் கலாசாரப் பிரிவினரால் கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் சிறப்பாக நடைபெறும் விழாவான நவராததிரி தினம், ஆடி அமாவாசைத் திருநாள் போன்ற நன்னாட்களில் சிறப்புச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் கலாசாரப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தன்று தெய்வீக இசைச் சங்கமம் விஷேட நிகழ்வொன்று பிரதேச கலைஞர்கள் மூலமாக வலி வடக்கு கலாசாரப் பேரவையால் மேற்கொள்ளப்பட்டது. பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெறும் பொங்கல் விழா, சரஸ்வதி பூசை நிகழ்வுகளிலும் ஒழுங்குகளை மேற்கொள்ளுதலும் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தலும் இடம்பெற்று வருகின்றன.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் உற்சவ காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கலை நிகழ்வுகளில் துர்க்கா தேவி மகளிர் இல்ல மாணவிகளின் வில்லுப்பாட்டும் ப்ருந்தகானலய மன்றத்தின் பண்ணிசை நிகழ்வு மேடை ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2015ஆம் ஆண்டு தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு வசந்தம் தொலைக்காட்சியுடன் இணைந்து கலாசார பிரிவினரும் பாரம்பரிய விளையாட்டுக்களையும், கலை நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்திருந்தினர். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற சித்திரை திருவிழாவிலும் எமது பிரதேச செயலகப் பிரிவினர் சார்பிலும் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்ட சிறந்த நூற் பரிசு,முதல் அமைச்சர் விருது போன்றவற்றிற்கு கலைஞர்களைத் தெரிவு செய்து அனுப்பியதுடன் அவர்களில் ஒருவருக்கு முதலமைச்சர் விருதும் கிடைத்தமை சிறப்பம்சமாகும்.மேலும் மன்றங்களுக்கான செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும் முகமாக அவற்றில் சிலவற்றிற்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வடமாகாண சபை கௌரவ உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடு மூலமாக இந்து ஆலய புனரமைப்பு, பண்பாட்டு நிகழ்வுகள், கிறிஸ்தவ ஆலயப்புனரமைப்பு போன்றவற்றிற்கான ஒழுங்கமைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இந்த வருடமும் புனர்வாழ்வு, சிறைச்சாலை மற்றும் மறு சீரமைப்பு அமைச்சினாலும் எமது பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆலயத்திங்களுக்கு நிதி கிடைக்கப்பெற்று அதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டது.

இவ் வருடத்திற்கான விருதுகள் வரிசையில் கலாபூஷண விருதிற்காக தெரிவு செய்து அனுப்பப்பட்டவர்களினுள் தெரிவு செய்யப்பட்டமையும் எமது செயலகத்திற்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது. மேலும், பிரதேச மட்டத்தில் நடைபெறும் அறநெறிப் பாடசாலை நிகழ்வுகள் ஆலய நிகழ்வுகளில் பங்குபற்றுதல் வாணி விழாக்கள், கலை நிகழ்வுகளில் பங்குபற்றுதலும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நடாத்தும் பாரம்பரிய நிகழ்வுகள் கலாசார நிகழ்வுகளிலும் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, இவ்வாறாக 2015ம் ஆண்டில் பல்வேறு செயற் திட்டங்களை நெறிப்படுத்தியும் முன்னகர்த்தியும் எமது பிரதேச செயலாளரின் வழிநடத்தல்களுடன் செயற்பட்டு வருகின்றமையும் எதிர் காலத்தில் செயற்பாடுகள் மேலும் விரிந்து பரந்து செல்லும் என்பதும் கண்ணூடு.

தக்ஷாயினி செல்வகுமார்
கலாசார உத்தியோகத்தர்

## இதயம் கனிந்த நன்றிகள்

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை மூலமாக மாருதப்புரவீகம் எனும் பண்பாட்டுமலரினை வெளியிடுவதில் பெருமையடைகிறேன். பல்வேறு காலகட்டங்களில் எமது பிரதேசமானது பல அழிவுகளை சந்தித்தும் பல இடங்கள் மீள் குடியேற்றங்கள் இடம்பெற்றும்இன்னும் சில இடங்கள் மீள் குடியேற்றப்படாமலும் இருந்து வரும்நிலையிலும் எமதுகலைப் பாரம்பரியங்களை பண்பாட்டினை பதிவு செய்தல், ஆவணப்படுத்தல் என்பது இன்றைய காலகட்டத்தில் முக்கிய தேவையாக உள்ளது.

இந்த வகையில் பண்பாட்டு அலுவல்கள் என்பது திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக மிகக்குறுகிய காலத்தில் இப் பண்பாட்டுமலரினைப் படரவிடுவற்கு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியறிதலை தெரிவிப்பதென்பது எமது தலையாய கடமையாகும்.

அத்தோடு இம்மலர் வெளியிடுவதற்கு காரணமானதும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியும் வழிகாட்டி வரும் பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவைத் தலைவருமாகிய உயர். திரு. க. ஸ்ரீமோகனன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் ஆலோசனை வழங்கிய கலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இம்மலரிற்கு ஆசிச் செய்திகளைவழங்கிய உயர் அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் குறுகிய காலத்தில் ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் அட்டைப்படத்தினை வடிவமைத்தவர்களுக்கும் கட்டுரைகளைச் செவ்வை பார்த்தவர்களுக்கும், இம் மலரினை பிரசுரிப்பதற்கு உதவிய எஸ். எஸ். ஆர் அச்சகத்தாரிற்கும், வெளியீட்டுரை வழங்கியவர்கள், முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் பெற்றவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு இம் மலரிற்கு அனைத்து வழிகழிலும் உதவிய அனைவரிற்கும் எமது செயலக உத்தியோகத்தர்கள் அனைவரிற்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செ. தாக்ஷாயினி
செயலாளர்
கலாசாரப் பேரவை
தெல்லிப்பளை

Cultural Officer.
0777141991.
Thakshasini Selvakumar.


கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், வலி வடக்கு,
தெல்லிப்பளை.